Vol.3, Issue 10 | Annual Subscription ₹420

@NewsRotary /RotaryNewsIndia

மார்ச் 2021

# ரோட்டரி நியூஸ்

INDIA
www.rotarynewsonline.org

Rotary



# டெல்லி சர்வதேச மாநாட்டில்



ரஷீதா பகத்

RID பரத் பாண்ட்யா, மாதவி, RIDE மகேஷ் கோட்பாகி, அமீதா மற்றும் ராஷி மேத்தா DGEகளின் துணைவியர்களுடன்…


ஹேமந்த் குமார்

*இடமிருந்து:* RID *பரத் பாண்ட்யா, மாதவி, அமீதா,* RIDE *மகேஷ் கோட்பாகி,* RIDE A S *வெங்கடேஷ் மற்றும் வினிதா.*

# உள்ளே



















**10 போலியோ இல்லாத இந்தியாவின் 10வது ஆண்டு கொண்டாட்டம்**
IPPC தலைவர் மைக் மெக்கவர்ன் RC மெட்ராஸுடன் பேசும் போது, ரோட்டரியின் இளம்பிள்ளைவாதத்தை நீக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்துகிறார்.

**20 வாழ்வியலில் மாற்றத்தை உருவாக்குவதே சேவை!**
தன்னுடைய தலைவர் கருப்பொருளை வெளியிட்ட RIPE சேகர் மேத்தா, அடுத்த 17 மாதங்களின்போது, உள்வரும் ஆளுநர்கள் சேவை மற்றும் உறுப்பினர் எண்ணிக்கை வளர்ச்சியைத் தங்கள் மந்திரமாக்கிக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

**24 TRFன் முதல் பெருநிலைத் திட்டமாக, ஜாம்பியா மலேரியா நீக்கம்**
IAல் DGEக்களிடம் பேசிய உள்வரும் TRF அறங்காவலர் தலைவர் ஜான் ஜெர்ம், வரும் ஆண்டுக்கான அறக்கட்டளையின் திட்டங்கள் மற்றும் இலக்குகளை வெளியிட்டார்.

**40 இந்திய மருந்துத்துறைக்கு வாய்ப்புகளைத் திறக்கிறது கோவிட்**
ரோட்டரி இன்ஸ்டிட்யூட்டில், கோவிட் நோய்ப்பரவல் மற்றும் வருங்காலத்தைப்பற்றிய தங்கள் பார்வைகளை வெளியிடுகிறார்கள் நலப் பராமரிப்பு வல்லுனர்கள்.

**48 கர்நாடக சங்கத்தின் "செவித்திறன்" திட்டம்**
நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த, கேட்டல் குறைபாடு கொண்ட குழந்தைகளுக்கு இலவசக் கருவிகளை அளிக்கிறது ரோட்டரி பெங்களூர் பிரிகேட்ஸ்.

**52 இந்தியாவை மதிக்கும்,நேசிக்கும் ஆப்கானிஸ்தான்**
2005ல், போரினால் பாதிக்கப்பட்ட அந்த நாட்டுக்குச் சென்றுவந்த பயணத்திலிருந்து சில குறிப்புகள்.

**62 கறவை மாடுகளை வளர்த்து வருமானம் ஈட்டும் ஷிமோகா கிராமப்புற பெண்கள்**
70க்கும் மேற்பட்ட கிராமப்புறப் பெண்களுடைய வாழ் வாதாரத்தை ஆதரிப்பதற்காக, ஒரு பன்னாட்டு நல்கையின் வழியாகக் கலப்பினப் பசுக்களைப் பரிசளித்தது RC சிமோகா.

**64 பாப் இசை ராணி ஆஷா!**
பல மில்லியன் ரசிகர்களைத் தொடர்ந்து மயக்கிவரும் புகழ் பெற்ற ஒரு பாடகருடைய வாழ்க்கை மற்றும் பயணம்பற்றிய ஒரு பார்வை.

**அட்டையில்:** 2011ல் இந்தியாவில் கடைசியாக போலியோவால் பாதிக்கப்பட்ட சிறுமி ருக்சார் கட்டூனிற்கு RC ஹௌரா சைக்கிள் அளித்துள்ளது.

## ஒரு வண்ணமயமான, பொருத்தமான பிராந்தியச் சந்திப்பு இதழ்




*ரோட்டரி பற்றிய மற்றும் பொதுவான தலைப்புகளில் ஆர்வமூட்டுகிற மற்றும் அறிவு சார்ந்த கட்டுரைகள் நிறைந்த பிப்ரவரி இதழ் என்னை மிகவும் கவர்ந்தது.*

*பொதுவாக, ரோட்டரி ஏன் சிறப்பானது என்றும், இந்த அமைப்பின் உறுப்பினர்களாக இருப்பதில் நீங்கள் ஏன் பெருமை கொள்கிறீர்கள் என்றும் வெளி நபர்கள் ரோட்டரியன்களைக் கேட்பார்கள். தன்னலமற்ற சேவை, வகைப் படுத்தல் கொள்கை, ரோட்டரி அறக்கட்டளை என்று அவர்களுக்கு வெவ்வேறு பதில்கள் கிடைக்கும். இந்தப் பட்டியலில் இன்னொரு காரணத்தை நாம் கண்டிப்பாகச் சேர்க்கலாம்: நம் இதழாகிய ரோட்டரி செய்திகள் ஒவ்வொரு மாதமும் ஏராளமான அறிவுச் செய்திகளை வழங்கி நமக்கு அறிவூட்டுகிறது.*

*ஆகவே, நீடித்த முன்னேற்றத்துக்கான இந்தியக் கல்விக் கழகத்தின் பொது இயக்குநரான டாக்டர் ஸ்ரீகாந்த K பாணிகிரகி போன்ற ஒரு வெளி நபர் இந்த இதழைப் பெற விரும்புவதில் எந்த வியப்பும் இல்லை.*

*ஆசிரியர் குழு இப்படி மிகச் சிறப்பான ஒரு பணியைத் தொடர்ந்து செய்யும்போது, இந்த இதழுக்குத் தொடர்ந்து சந்தா செலுத்தவேண்டியதும், ரோட்டரி பற்றிய நல்ல அறிவின் மூலம் தங்களை வளப்படுத்திக்கொள்ளவேண்டியதும் நம்முடைய உறுப்பினர்கள் எல்லாருடைய கடமை.*

*R ஸ்ரீனிவாசன், RC மதுரை மிட்-டவுன் — D 3000*

*ஃபிப்ரவரி ஆசிரியர் பக்கத்தில் நீங்கள் எழுதியிருந்த இந்தச் சொற்கள் எனக்குப் பிடித்திருந்தன: உடையும் தன்மையில் இருந்தாலும் சரி, கல்வி என்னும் வாழ்க்கைக்கோட்டை நம் பெண்களுக்கு வழங்குவோம், அதன்பிறகு, இன்னும் பாதுகாப்பான கரைகளுக்கும், நம்பிக்கை நிறைந்த ஓர் எதிர்காலத்துக்கும் அவர்களைக் கை பிடித்து அழைத்துச் செல்வோம்" என்று நீங்கள் குறிப்பிட்டிருந்தீர்கள். ரோட்டரியில் இருக்கும் நாம் அனைவரும் பெண்கள், குழந்தைகளுக்கு ஆற்றல் அளிப்பதில் நம் பங்கைச் செய்கிறோம் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.*

*RI பிராந்தியச் சந்திப்பின் அறிக்கைகளில் ஒன்று, கை குலுக்கல்கள் இப்போது பின்பற்றப்படுவதில்லை என்று குறிப்பிடுகிறது. ஆளுநர் வருகையின்போது எங்கள் சங்கக் கூட்டத்தில் நான் கலந்துகொண்டேன், அப்போது, இதே தனிமை உணர்வை நான் உணர்ந்தேன். பல மாதங்களாக நேருக்கு நேர் சந்திக்காத என்னுடைய சக ரோட்டரியன்களுடன் நான் கை குலுக்க இயலவில்லை, அல்லது, அவர்களை அணைத்துக் கொள்ள இயலவில்லை.*

*தலைமைப் பண்புப் பாடங்கள் பற்றிய ஜெய்ஸ்ரீயின் கட்டுரையில், RIPE சேகர் மேத்தாவின் இந்தச் சொற்கள் எனக்கு மிகவும் பிடித்திருந்தன: ஒரு வேலை முடியும்வரை நான் தூங்கமாட்டேன், உங்களையும் தூங்கவிடமாட்டேன். தொழில் நிறுவனங்களின் வெற்றிகரமான CEOக்கள் ஒவ்வொருவருடைய மந்திரம் இதுதான்.*

*மிக உயர்ந்த ஒருவர்மீது நாம் வைத்திருக்கும் நம்பிக்கை, ஒரு பரிசோதனையை ஒரு சான்றுரையாக, ஒரு வழக்கை ஒரு வெற்றியாக, ஒரு பாதிக்கப்பட்டவரை ஒரு வெற்றியாளராக ஆக்கும் என்கிற TRF அறங்காவலர் தலைவர் ரவீந்திரனுடைய அறிக்கை உண்மையில் நேர்விதமான ஒரு குறிப்பாகும்.*

*ஃபிப்ரவரி இதழில் ஒவ்வொரு பக்கமும், உங்கள் ஆசிரியர் குழுவினர் பதிவுசெய்திருக்கும் சொற்றொடர்களை எண்ணி என்னை ஆழ்ந்து சிந்திக்கவைத்தது. பண்டிட் ரவி சங்கர் பற்றிய கட்டுரைக்கான படங்கள் மிக நன்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தன. ரோட்டரி செய்திகள் குழுவுக்கு பலத்த கைதட்டல்களை வழங்குவோம்.*

*நன் நாராயணன், RC மதுரை வெஸ்ட் — D 3000*

இந்த நோய்ப்பரவல் நம் சமூகத்தில் இருக்கும் சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு இன்னும் கடினமாக இருந்தது எப்படி என்பதையும், கோவிடுக்குப் பிந்தைய நாட்களில், அவர்களுடன் தொடர்புடைய பிரச் சனைகளைப் பச்சாத்தாபம் மற்றும் இரக்கத்துடன் கையாளவேண்டும் என்பதையும் ஆசிரியர் குறிப்பு விளக்குகிறது.

"தி ஒடிஸ்ஸி"யின்போது RI தலைவர் ஹோல்கர் நாக் மற்றும் பிற ரோட்டரி தலைவர்கள் வழங்கிய சொற்பொழிவுகள் அனைத்தும், படிக்க வேண்டியவை.

RC கோரக்பூரின் சேவைகளை விவரிக்கும் கட்டுரை மிகச்சிறப்பாக இருந்தது. சோர்வு தரும் இந்தக் காலகட்டத்தை வெல்வதற்கு TRF அறங்காவலர் தலைவருடைய அறிக்கை நமக்கு ஓர் ஊக்கமாக அமைவது உறுதி. கோவிடுக்குப் பிந்தைய சிரமங்களை வெல்வதற்கு TRF தலைவர்கள் எடுத்துள்ள படிநிலைகள் பாராட்டவேண்டியவை. முன்னாள் PM மற்றும் தொலைநோக்கு, பாராட்டவேண்டிய பண்புகளைக் கொண்ட ஒரு மனிதரான மறைந்த A B வாஜ்பாய் அவர்களைப்பற்றிப் படிப்பதும் அவரை நினைவுகூர்வதும் மகிழ்ச்சியளிக்கிறது. சிதார் இசைக் கலைஞர் ரவிசங்கரைப்பற்றிப் படிப்பது நன்றாக இருந்தது.

ஃபிலிப் முலப்பொனெ MT,
RC திருவனந்தபுரம்
சப்பர்பன் — D 3211

முன்னாள் PM A B வாஜ்பாய் பற்றிய, கட்டுரையில் அவர்களின் பண்புகளைப்பற்றிப் படிப்பது நன்றாக இருந்தது. இன்னோர் கட்டுரை, சிறந்த சிதார் இசைக் கலைஞரான பண்டிட் ரவிசங்கரைப் பற்றியது.

K P பாலசுப்ரமணியன்
RC அம்பாசமுத்திரம் — D 3212

### பன்முகத்தன்மை, பாலினச் சமநிலை

இனி வரும் ஆண்டுகளில் ரோட்டரி வளர்வதற்கு மிகவும் முக்கியமான பன்முகத்தன்மை மற்றும் பாலினச் சமநிலையின் முக்கியத்துவத்தில் RIPN ஜெனிஃபர் ஜோன்ஸ் சரியாகக் கவனம் செலுத்தியுள்ளார். சங்க நிலையில் தொடங்கி ரோட்டரி படிநிலையில் மேலேறி RI வாரியத்துக்குச் சென்றதையும், பின்னர் அறங் காவலராக ஆனதையும், பின்னர் மிக உயர்ந்த பொறுப்புக்குப் பரிந்துரைக்கப் பட்டதையும்... அனைத்தும் தகுதி அடிப்படையில் நடந்ததை அவர் நினைவு கூர்ந்துள்ளார்.

நாடுகள், மொழி, சமூக, மத மற்றும் அரசியல் தடைகளை யெல்லாம் தாண்டி ரோட்டரி பலன் பெறுவோரை அணுகுகிறது என்கிறார் RI தலைவர் ஹோல்கர் நாக். ரோட்டரி மற்றும் அரிமா சங்கத்துடன் இணைந்து திட்டங்களைச் செயல் படுத்தவேண்டும் என்கிறார் RIPE சேகர் மேத்தா. காரணம், “இவர்கள் இருவரும் ஒருவரையொருவர் நிறைவுசெய்யலாம்.”

ஒரு முறை, சென்னையில் அரிமா சங்கத்தின் வாரக் கூட்டத்தை நான் பார்த்தேன். அது 25வது ஆண்டு விழா என்பதையும், பெண் நிர்வாகிகளுடைய வழிநடத்துதலில் இயங்குகிறது என்பதையும் அறிந்து வியந்தேன். சங்கத்தின் தலைவி பேசும் போது, அரிமா சங்கமும் ரோட்டரியும் இணைந்து சேவைத் திட்டங்களைச் செய்யவேண்டும் என்றார். இது 10 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றது. இப்போது, மேத்தா மீண்டும் அதேபோன்ற பார்வைகளை முன்வைத்துள்ளார்.

S முனியாண்டி, RC திண்டுக்கல் ஃபோர்ட் — D 3000

### வியூகத் திட்டமிடல் கண்டிப்பாகத் தேவை

RI தலைவர் ஹோல்கர் நாக் தன்னுடைய ஜனவரி செய்தியில், ரோட்டரி சங்கங்களுக்கான வியூகத் திட்டமிடலின் முக்கியமான தேவையில் கவனம் செலுத்தியுள்ளார். இது மிகவும் பொருத்தமான செய்தியாகும். ஏனெனில், பெரும்பாலான சங்கங்கள் ஓர் ஆண்டுக்குதான் திட்டமிடுகின்றன. நாம் ஒரு வியூகத் திட்டமிடல் சந்திப்பை நடத்தவேண்டும், ரோட்டரியின் நோக்கங்களைச் செயல்திறன் மிக்க வழியில் எட்டுவதற்கு திட்டமிடவேண்டும், அதில் எல்லா உறுப்பினர்களையும், குறிப்பாக, சங்கத்தின் முன்னாள் தலைவர்களை ஈடுபடுத்தவேண்டும்.

விஜய் அனந்த் ஷெட்டி
RC மபுகா — D 3170

### ஒரு மிகச் சிறந்த சங்கம்

1949ம் ஆண்டிலேயே தொடங்கப்பட்ட, தென் இந்தியாவின் மிகப் பழைமை யான சங்கங்களில் ஒன்றான RC குயிலானுடைய 70வது ஆண்டு விழாவைப்பற்றிப் படித்து மகிழ்ந்தேன்.

A R பாஸ்கர் ராஜ், RC சிவகாசி
சென்ட்ரல் — D 3212

### பிறவி வளைபாத (கிளப்ஃபுட்) மருந்தகங்களை அமையுங்கள்

குழந்தைகள் நடக்க உதவுதல் என்கிற கட்டுரை தகவல்கள் நிறைந்ததாக இருந்தது. இந்தத் திட்டத்தை ஏற்று நடத்தியிருக்கும் RC கோயம்பத்தூர் மெரிடியனுக்குப் பாராட்டுகள்.

பிறவி வளைபாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு அறுவைச் சிகிச்சை அல்லாத ஒரு சிகிச்சை முறையை வழங்கிவரும் CURE பன்னாட்டு இந்திய அறக்கட்டளை (CIIT) அமைப்பின் சேவைகளை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன்.

எங்கள் சங்கம், CIIT இயக்குநர் டாக்டர் சந்தோஷ் ஜார்ஜ், RC தில்லி மிட்-டவுனைச் சேர்ந்த PDG ராமன் பாட்டியா ஆகியோருடைய வழிகாட்டுதலுடன், மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் உள்ள பிறவி வளைபாத மருந்தகத்தில் தொடர்ச்சியாகச் சேவைகளைச் செய்துவருகிறது.

நாங்கள் 50 FABகளை (கால் வெளிவாங்கல் இழுத்துக் கட்டல்கள்) நன்கொடையாக வழங்கியுள்ளோம், மேலும் 50 FABகளை நன்கொடையாக வழங்குவதற்கு இன்னர் வீல் சங்கத்துக்கு உதவியுள்ளோம். பிறசங்கங்கள் தங்களுடைய பகுதிகளில் பிறவி வளைபாத மருந்தகங்களைக் கூடுதலாக அமைப்பதற்கு ஆதரவளிக்க வேண்டும் என்று நாங்கள் ஊக்குவிக்கிறோம், இதன் மூலம், குழந்தைகள் பலன் பெறுவார்கள்.

தேவிகா ரவீந்திரன்
RC மதுரை மல்லிகை — D 3000

We welcome your feedback. Write to the Editor:
**rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com.**
Mail your project details, along with hi-res photos,
to **rotarynewsmagazine@gmail.com**

Messages on your club/district projects, information and links on zoom meetings/webinar should be sent only by e-mail to the Editor at **rushbhagat@gmail.com**
or **rotarynewsmagazine@gmail.com**
WHATSAPP MESSAGES WILL NOT BE ENTERTAINED.

Click on **Rotary News Plus** in our website **www.rotarynewsonline.org** to read about more Rotary projects.



# ரோட்டராக்ட்டுடன் ஒன்றாக பயணிப்போம்

ரோட்ராக்டர்களின் தலைமைத்துவ திறனை நன்கு அறிந்த ஒரு சிலரில் நானும் ஒருவன் என்ற முறையில் மார்ச் 8ம் தேதி முதல் 14ம் தேதி வரை நாம் கொண்டாடும் உலக ரோட்ராக்ட் வாரவிழாவை எதிர்நோக்கி காத்திருக்கிறேன். இந்த ஆண்டு எனது தலைமையில் நடைபெறும் மூன்று மாநாடுகளிலும் ரோட்ராக்டர்கள் மீதுதான் முக்கிய கவனம் செலுத்தப் படும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ரோட்ராக்ட் சங்கங்களை RIன் உறுப்பினர்களாகச் சேர்ப்பதன் மூலம் ரோட்ராக்டை உயர்த்த வேண்டும் என்று சட்டமன்ற கவுன்சில் வாக்களித்தபோது நான் பெரு மிதம் அடைந்தேன். அதற்கும் முன்னரே கவுன்சில் இரட்டை உறுப்பினர் முறையை சாத்தியமாக்கியது. அதன் பிறகு இயக்குநர்கள் குழு ரோட்ராக்டர்களின் வயது வரம்பை நீக்க முடிவு செய்தது.

ஆனால், நாம் இப்போதுதான் ஒன்றாக பயணத்தைத் தொடங்கியிருக்கிறோம். கூட்டுச் சேர்வது என்பது தானாக நடந்துவிடாது. அதற்கு இரு தரப்பினரும் திறந்த மனதுடனும், ஒத்த கருத்துடனும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு செயல்பட வேண்டும். இதைத் தான் ரோட்டரி மற்றும் ரோட்ராக்ட் இரட்டை உறுப்பினரான லூயி டீ ரியல் விளக்குகிறார்.

*கூட்டு மெய்நிகர் கூட்டங்கள் மூலம் ரோட்ராக் டர்கள், ரோட்டேரியன்களுக்கு புதிய யோசனைகள தெரிவிக்கவும், கருவிகளின் பயன்பாட்டையும் , தனித்துவமான வழியில் செயல்படுவது குறித்தும் அறிந்துகொள்ள உதவியது. கொரோனா தொற்று காலத்தில் பேரிடர்களினால் பாதிக்கப்பட்டவர் களுக்கு நிவாரண உதவிகளை அளிக்கப்பட்ட போது ரோட்ராக்டர்கள் சமூக வலைத்தளங்கள் மூலம் தகவல்கள் பெறவும் நிதி திரட்டவும் கூட்டு முயற்சியுடன் உதவினர். ரோட்டேரியன்கள் தங்களுக்குள்ள தொடர்புகள், மூலம் நிவாரணப் பொருள்களை போக்குவரத்து மூலம் சமூக மக்களுக்கு நிவாரணங்கள் கிடைக்க ஆதரவாக இருந்தனர்.*

*ரோட்ராக்டர்களின் புதுமையான மெய்நிகர் ஈடுபாடு மற்றும் தொழில்முறை மேம்பாட்டு நடவடிக்கைகள் ரோட்டேரியன்களைக் கவர்ந்தன. இது இருதரப்பினருக்கும் மதிப்புக்கூட்டு வதாகும். ரோட்டேரியன்கள் ரோட்ராக்டர்களுக்கு வழிகாட்டிகளாகவும் சேவையில் பங்களிப்பவர் களாகவும் இருக்க முடியும். அதேநேரத்தில் ரோட்ராக்டர்கள் கடினமான வேலைகளைக்கூட எளிமைப்படுத்த முடியும், டிஜிட்டல் அணுகுமுறை மூலம் வரம்பில்லாமல் எதையும் செய்யமுடியும் என்பதை ரோட்டேரியன்களுக்கு எடுத்துக் காட்டி யுள்ளனர். இந்த ஒருங்கிணைப்பு எதிர்காலத்தில் ரோட்ராக்டர்கள் ரோட்டேரியன்களாக உருமாற்றம் பெற உதவும்.*

*ரோட்ராக்டர்களின் தனித்துவமான வழியில் செயல்படும்போது அவர்களால் புதுமையைச் செய்ய முடிகிறது. இது ரோட்டரி தனது எதிர்கால சவால்களை எதிர்கொள்வதற்கான திறனை அதிகரிக்க உதவுகிறது.*

சராசரி வயது வித்தியாசத்தைத் தவிர ரோட்டரி சங்கங்களுக்கும், ரோட்ராக்ட் சங்கங்களுக்கும் இடையே வித்தியாசம் இருப்பதாக நான் கருதவில்லை.

ரோட்டேரியன்கள் பலர் இன்னும் ரோட்ராக்ட் அமைப்பை நமது இளைஞர் அமைப்பாகவே பார்க்கிறார்கள். ஆனால், நான் அதை வேறு விதத்தில் பார்க்கிறேன். என்னைப் பொருத்தவரை அவர்கள் நம்மில் ஒரு பகுதியினர்தான். அவர்கள் நம்முடன் இருக்க விரும்புகிறார்கள். நாம் வெற்றிபெற வேண்டுமானால் பரஸ்பரம் மரியாதை கொண்டிருக்க வேண்டும். ஒருவருக்கொருவர் சமமாக பார்க்க வேண்டும். ரோட்ராக்டர்கள் மாணவர்கள் மற்றும் இளம் தலைவர்கள் மட்டுமல்ல, வெற்றிகரமான நிர்வாகிகள் மற்றும் தொழில்முனைவோர்கள் கூட. 2014ம் ஆண்டில் பெர்லின் ரோட்டரி இன்ஸ்டிட்யூட்டில் இவர்கள் ஐந்து மொழிகளில் அமர்வுகளை ஒருங்கிணைத்தனர். இத்தகைய நிர்வகிக்கும் வல்லமை பெற்றவர்கள்.

இந்த பயணத்தை நாம் ஒன்றாக மேற்கொள்ளும் போது, ரோட்டரி மற்றும் ரோட்ராக்டின் வலிமையை மனதில் கொள்ள வேண்டும். லூயி சொல்வது போல, எதிர்காலத்தை ஒன்றாக கட்டியெழுப்ப இப்போதே நாம் தயாராவோம்.

**ஹோல்கர் நாக்**
RI தலைவர்



**லூயி டீரியல்**
RAC சேன் ஃப்ரான்ஸ்ஸ்கோ டெல் மோன்டே மலாயா அச்சீவர்ஸ் ஃபிளிப்பைன்ஸ்

*RC சேன் ஃப்ரான்ஸ்ஸ்கோ டெல் மோன்டே, ஃபிளிப்பைன்ஸ்*

*ஃபிளிப்பைன்ஸ் ரோட்டராக்ட் MDIO தலைவர்*



# தலைசிறந்த பெண் தலைவர்

ஒரு வழக்குக்கு பிறகு 1987ம் ஆண்டு முதல் பெண் உறுப்பினர்களை ரோட்டரி உலகம் அனுமதித்தது. ஆனால், அதற்குப் பிறகு 2 அல்லது 3 தசாப்தங்களாக ரோட்டரியில் பெண் உறுப்பினர்களை சேர்ப்பதற்கான முயற்சி அதிகம் இல்லை என்றே கூறவேண்டும். பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கையை தற்போதைய 24 சதவீதத்திலிருந்து கணிசமாக அதிகரிக்க வேண்டிய அவசியம் இப்போதுதான் உலகெங்கிலும் உள்ள ரோட்டரி சங்கங்களால் தீவிரமாக விவாதிக்கப்பட்டு வருகிறது. 2022–2023ம் ஆண்டிற்கான RI தலைவராக ஜெனிஃபர் ஜோன்ஸ் பரிந்துரைக்கப்பட்டிருப்பது இந்த குறிக்கோளை வரையறுக்கும் தருணமாக மாறும். நிச்சயமாக RIன் அனைத்து மூத்த தலைவர்களும் அதிக பெண் உறுப்பினர்களின் தேவையை மட்டுமல்லாமல், பெண்களுக்கு தலைமைத்துவத்துக்கான வாய்ப்புகளையும் அவர்களுக்கு முக்கிய பங்கு அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தி வருகின்றனர். ஆனால், தடைகளைத் தாண்டி RIல் முதலிடத்தை அடைந்த ஒரு பெண் கூறுகையில் அதிக நம்பகத்தன்மையையும் தாக்கத்தையும் ஏற்படுத்தும் என்கிறார்.

சமீபத்திய நிகழ்ச்சிகளில் ஜோன்ஸ், பெண் உறுப்பினர்களை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை சந்தை கண்ணோட்டத்துடன் பார்க்கிறார். ஒரு நிறுவனத்தின் சந்தைப் பங்கு சரிவை நோக்கிச் சென்றால் நாம் என்ன செய்வோம்? நமது விற்பனை உத்தியை மாற்றியமைப்போம். அதுபோலத்தான் இதுவும். ரோட்டரியில் பாலினச் சமநிலையை கொண்டு வருவதற்கான வாய்ப்பை நாம் பயன்படுத்திக் கொள்வோம் என்று அவர் ஒரு மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஒப்பீடுகளும், பொதுவான அணுகுமுறையும் வெறுக்கத்தக்கவை. வெற்றிகரமாகச் செயல்படும் பெண் தலைவர்கள் மாறுபட்ட வகையில் செயலாற்றுகிறார்கள் என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இதை சில சிறந்த பெண் அரசியல் தலைவர்கள் நிரூபித்துள்ளனர். மதங்கள், பிராந்தியங்கள், கலாசாரங்களை உள்ளடக்கி அனைத்தையும் மதித்து தனது தனித்துவமான ஆளுமைத் திறனால் நியூஸிலாந்தின் ஜெஸ்ஸிகா ஆர்டெர்ன், உலக அளவில் புகழ் பெற்றுள்ளார். கொரோனா தொற்றை அவர் கையாண்ட விதம் பலரது பாராட்டுக்களைப் பெற்றுத்தந்துள்ளது. ஜெர்மன் பிரதமர் ஏஞ்சலா மெர்கல் மற்றொரு சிறந்த தலைவர். எதையும் வெளிப்படைத்தன்மையுடன் பேசுபவர். நான்கு முறை ஜெர்மன் பிரதமராக பதவி வகித்துள்ளார். தற்போது அவரது பதவிக்காலம் வருகிற செப்டம்பர் மாதம் முடிவடைய உள்ளது. ஐந்தாவது முறை போட்டியிடப்பபோவதில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

2005ம் ஆண்டு அவர் முதன் முறையாக பதவிக்கு வந்தது முதல் இன்றுவரை அவரது நிர்வாகச் செயல்பாடுகள் பிரமிக்கத்தக்கதாக உள்ளது. அவரது செயல்கள் இரக்கம். மனஉறுதி, கருணை, அரவணைப்பு. சமத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருந்தது. பொது மக்கள் கருத்துக்கு எதிராக சிரியா அகதிகளுக்கு அவர் அடைக்கலம் கொடுத்தபோது மிகுந்த மன உறுதியுடன் செயல்பட்டார்.

அவர், தனது பதவிக்காலத்தில் ஐந்து இங்கிலாந்து பிரதமர்கள், நான்கு பிரெஞ்சு நாட்டு பிரதமர்கள், ஏழு இத்தாலியப் பிரதமர்கள், தற்போது அமெரிக்க அதிபராகியுள்ள ஜோ பைடன் உள்ளிட்ட நான்கு அமெரிக்க அதிபர்கள் அவர் சந்தித்துள்ளார். அவர் பல சாதனைகளை பெற்றிருந்தாலும் தொடர்ந்து அவர், தன்னை நிரூபிக்க வேண்டியிருந்தது. அவரை சந்தித்த முக்கியப் பிரமுகர்கள் பலர் அவரை அவமானப்படுத்தவும், அவரை அடக்கியாளவும் முயன்றனர்.

விளாதிமீர் புதின் ஒரு முறை ஏஞ்சலா மெர்கலை சந்திக்க வந்தபோது தம்முடைய “லாப்ரடார்” ரக நாயையும் உடன் அழைத்து வந்தாராம். நாய்கள் என்றாலே ஏஞ்சலாவுக்கு பயம். டொனால்டு டிரம்ப், ஏஞ்சலா மெர்கலை விரும்பவில்லை. இது அவருக்கே நன்கு தெரியும். இத்தாலியின் சில்வியோ பெர்லுஸ்கோனி, ஒரு முறை ஏஞ்சலாவை 15 நிமிடங்கள் காக்கவைத்துவிட்டு, வேறு ஒரு நபருடன் தொலைபேசியில் சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டிருந்தார்.

ஒரு வேதியியல் வல்லுநர் போல அவர் கொரோனா தொற்றை சிறப்பாகக் கையாண்டார். ஒரு முறை பத்திரிகைப் பேட்டியில், நீங்கள் ஏன் ஒரே மாதிரியான ஆடைகளை அணிகிறீர்கள். உங்களிடம் புதிய ஆடைகள் இல்லையா என்று கேட்கப்பட்டபோது, நான் ஒரு அரசு ஊழியர், மாடல் அல்ல என்று பளிச்சென பதில் அளித்தார். அண்மையில் கட்சித் தலைவர் பதவியிலிருந்து அவர் விலகியபோது, ஜெர்மானியர்கள், தங்கள் வீட்டை விட்டு வெளியே பால்கனிக்கு வந்து ஆறு நிமிடங்கள் தொடர்ச்சியாக கை தட்டி வரவேற்றனர். மெர்கல் போன்ற ஒரு தலைவரை உலகம் இனி காண்பது அரிது.

ரஷீதா பகத்

## Governors Council

| | |
|---|---|
| RI Dist 2981 | DG R Balaji Babu |
| RI Dist 2982 | DG K S Venkatesan |
| RI Dist 3000 | DG A L Chokkalingam |
| RI Dist 3011 | DG Sanjiv Rai Mehra |
| RI Dist 3012 | DG Alok Gupta |
| RI Dist 3020 | DG Muttavarapu Satish Babu |
| RI Dist 3030 | DG Shabbir Shakir |
| RI Dist 3040 | DG Gajendra Singh Narang |
| RI Dist 3053 | DG Harish Kumar Gaur |
| RI Dist 3054 | DG Rajesh Agarwal |
| RI Dist 3060 | DG Prashant Harivallabh Jani |
| RI Dist 3070 | DG CA Davinder Singh |
| RI Dist 3080 | DG Ramesh Bajaj |
| RI Dist 3090 | DG Vijay Arora |
| RI Dist 3100 | DG Manish Sharda |
| RI Dist 3110 | DG Dinesh Chandra Shukla |
| RI Dist 3120 | DG Karunesh Kumar Srivastava |
| RI Dist 3131 | DG Rashmi Vinay Kulkarni |
| RI Dist 3132 | DG Harish Motwani |
| RI Dist 3141 | DG Sunnil Mehra |
| RI Dist 3142 | DG Dr Sandeep Kadam |
| RI Dist 3150 | DG Nalla Venkata Hanmanth Reddy |
| RI Dist 3160 | DG B Chinnapa Reddy |
| RI Dist 3170 | DG Sangram Vishnu Patil |
| RI Dist 3181 | DG M Ranganath Bhat |
| RI Dist 3182 | DG B Rajarama Bhat |
| RI Dist 3190 | DG B L Nagendra Prasad |
| RI Dist 3201 | DG Jose Chacko Madhavassery |
| RI Dist 3202 | DG Dr Hari Krishnan Nambiar |
| RI Dist 3211 | DG Dr Thomas Vavanikunnel |
| RI Dist 3212 | DG P N B Murugadoss |
| RI Dist 3231 | DG K Pandian |
| RI Dist 3232 | DG S Muthupalaniappan |
| RI Dist 3240 | DG Subhasish Chatterjee |
| RI Dist 3250 | DG Rajan Gandotra |
| RI Dist 3261 | DG Fakir Charan Mohanty |
| RI Dist 3262 | DG Saumya Rajan Mishra |
| RI Dist 3291 | DG Sudip Mukherjee |



Printed by PT Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by PT Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.



The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced with permission and attributed to RNT.


# RI இயக்குனர்



## சேவை செய்ய கிடைத்த வாய்ப்பை எண்ணி மகிழ்வோம்

தண்ணீர் விலைமதிக்க முடியாத பொருளாக மாறிவருகிறது. உலகின் அதிகமான பிரதேசங்கள் தண்ணீர் பற்றாக்குறையை எதிர்கொண்டு வருகின்றன. பாதுகாப்பான குடிநீர் மற்றும் அடிப்படை சுகாதாரங்கள் இல்லாதது சுகாதாரமற்ற சூழலையும் நோய்களையும் உருவாக்குகிறது.

ஆயிரக்கணக்கான மக்கள் தூய்மையான, பாதுகாப்பான குடிநீர் கிடைக்காமல் தவிக்கிறார்கள். தங்களுக்கு அன்றாடம் தேவைப்படும் தண்ணீரை சேகரிக்க பெண்கள், குறிப்பாக இளம் தினமும் நெடுந்தொலைவு நடந்து சென்று வரவேண்டியுள்ளது. தண்ணீர் இல்லாமல் நாம் எழுத்தறிவு பற்றியோ, உடல் ஆரோக்கியம் பற்றியோ பேச முடியாது.

நமது மண்டலத்தைச் சேர்ந்த ரோட்டேரியன்கள் வின்ஸ் திட்டத்தைச் செயல்படுத்துவதில் சிறப்பாக பணியாற்றி வருகிறார்கள். பள்ளிகளில் கழிவறைகள் கட்டுவது, கைகழுவும் நிலையங்களை அமைப்பது, சுகாதாரமான கல்வியை வழங்குவது, மாதவிடாய் காலத்தில் பெண்கள் சுகாதாரத்தை கடைபிடிப்பதை உறுதி செய்வது என பல சேவைகளைச் செய்து வருகின்றனர்.

உலக ரோட்ராக்ட் வாரத்தை நாம் கொண்டாடும் இந்த நேரத்தில் ரோட்ராக்டை வலுவான, பயனுள்ள, துடிப்பான அமைப்பாக மாற்றுவதில் கவனம் செலுத்த வேண்டும். அதற்கு அதன் வேர்கள் வலுவானதாக இருக்க வேண்டும். அதாவது அதற்கான வேர்கள் ரோட்டரி சங்கங்களில் தான் உள்ளன. அடித்தளம் வலுவாக இருந்தால் தான் சங்கங்கள் வலுவானதாக இருக்கும். வலுவான அடித்தளம்தான் ரோட்ராக்ட் சங்கங்கள் வளர உதவிடும். செழிப்பானதாக உருவாக முடியும். வெளிப்படையான அரசியலமைப்பு ஆவணங்கள், தெளிவான தலைமையின் பங்கு, திட்டமிட்டு நடத்தப்படும் சங்கக் கூட்டங்கள், உறுப்பினர்களை ஈடுபடுத்தும் உத்தி மற்றும் இணக்கமான செயல்பாடுகள் ஆகியவைதான் ரோட்ராக்ட் சங்கங்களின் வெற்றியை உறுதி செய்யும். ரோட்டரி-ரோட்ராக்ட் கூட்டாண்மை வழிநடத்துதல், தலைமையை மேம்படுத்துதல், சேவைத் திட்டங்களை இணைந்து செயலாற்றுவது மற்றும் இதர நடவடிக்கைகளை குறிப்பதாகும். “ஒருவருக்கு நாம் என்ன செய்கிறோமோ அதுவேதான் நமக்கு திரும்பி வரும்” என்று முனிவர்கள் சொல்லுவார்கள். கடினமான காலங்களில் நாம் மற்றவரிடமிருந்து கருணை, தாராள குணத்தை எதிர்பார்த்திருப்போம். நாம் பிறருக்கு என்ன செய்தோம் என்பதை வைத்து, நமக்கு அதிர்ஷ்டம் இருந்தால், நமக்கு தேவைப்படும் தருணத்தில் விதி நம்மை எவ்வாறு நடத்த வேண்டும் என்பதை தீர்மானிக்கும். நாம் ஒரு ரோட்டேரியனாக இருப்பதால் நம்மால் மற்றவர்களுக்கு கை கொடுத்து உதவ முடியும். வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த சேவை செய்ய நமக்கு அரிய வாய்ப்பு கிடைத்துள்ளது. அதை எண்ணி மகிழ்வோம்!



**Dr பரத் பாண்ட்யா**
RI இயக்குனர், 2019–21

# களின் செய்திகள்

## குடிநீர் சவாலை சந்திப்போம்!



அன்புள்ள ரோட்டரி தலைவர்களே

சுத்தமான, தரமான குடிநீர் மக்களுக்கு கிடைக்கு மானால், ஆரோக்கியமான, பயனுள்ள வாழ்க்கையை வாழமுடியும். இந்தியாவில் நீரினால் பரவும் நோய்களால் லட்சக்கணக்கான மக்கள் இறக்கிறார்கள்.

இந்த கடுமையான குடிநீர் பிரச்னையைத் தீர்க்க ரோட்டரி சங்கங்கள் கிணறுகளை அமைக்கின்றன. மழைநீர் சேகரிப்பு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. மேலும் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் பாதுகாப்பான, சுகாதாரமான கழிப்பறைகளை ஏற்படுத்தி வருகின்றன.

நாங்கள் W-A-T-E-R என்ற சொல்லை பின்வருமாறு வகைப்படுத் தியுள்ளோம்: அதாவது W-நீர்நிலைகளை மேம்படுத்துதல், A-மழைநீர் சேகரிப்பு, நீர் ஆதாரங்களை வலுப்படுத்துதல் ஆகியவற்றை ஆதரிப்பது, விழிப்புணர்வை ஏற்படுத்துவது. T-நீர்நிலைகளை புதுப்பித்தல். E-மழைநீர் சேகரிப்புத் திட்டங்களை திறமையாக செயல்படுத்துதல். R-சிக்கனம், மறுபயன் பாடு, மீட்டெடுத்தல், மறுசுழற்சி.

### ரோட்டரியின் இலக்குகள்

அடுத்த ஐந்து ஆண்டுகளில் நாம் அனைவரும் ஒன்று கூடி கட்டலாம் ரோட்டரி மூலம் 10,000 தடுப்பணைகளை கட்டலாம். இதன் மூலம் 500 மில்லியன் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். மேலும் 5 மில்லியன் மரக்கன்றுகள் நடவும் திட்டமிடலாம். 10,000 பெரிய நீர்நிலைகள் புனரமைக்கலாம். 50,000 நகர்ப்புற மழைநீர் சேகரிப்புக்கான கட்டமைப்புகள் உருவாக்கலாம். மேலும் 25,000 கிராமங்கள் தன்னிறைவு பெற்ற கிராமங்களாக உருவாக்கலாம்.

1,50,000 பள்ளிகளில் கைகழுவும் நிலையங்கள் அமைக்கலாம். மாதவிடாய் காலத்தில் சுகாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்களை தீட்டலாம். 5,000 கிராமங் களில் திறந்தவெளி கழிப்பிடங்கள் இல்லாத நிலை உருவாக்கலாம். பொது இடங்களான பள்ளிகள், சுகாதார நிலையங்கள், அங்கன்வாடிகள், வீட்டுக் கழிவறைகளை மாற்றியமைக்கலாம்.

மேலும், இந்திய அரசாங்கத்தின் ஜல ஜீவன் இயக்கத்தின் கீழ் 1,000 கிராமங்களுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வசதி ஏற்படுத்தலாம்; கிராமங்கள்-கிராமப் பஞ்சாயத்துகளில் 500 சமூக கழிப்பறைகள் மற்றும் 500 பொது கழிப்பறைத் தொகுதிகள் ஏற்படுத்தலாம்; நோயாளிகள், சுகாதார மருத்துவ ஊழியர்கள் எளிதில் அணுக வசதியாகவும் சுகாதாரத்தை கடை பிடிக்கவும் கை கழுவும் நிலையங்கள் மற்றும் பாதுகாப்பான குடிநீர் வசதிக்கான 500 திட்டங்கள் செயல்படுத்தலாம்.

**சுகாதார நெருக்கடி:** இந்தியா முழுவதும் 344 மில்லியன் மக்கள் திறந்த வெளியில் மலம் கழிக்கின்றனர். நாட்டில் 21 சதவீத தொற்றுநோய்கள் பாது காப்பற்ற குடிநீர் மற்றும் சுகாதாரமற்ற நடைமுறைகளே காரணம் என்று உலக வங்கி தெரிவிக்கிறது. எனவே, நண்பர்களே நாம் முழு முயற்சியுடன் செயல்படத் தயாராவோம். சவாலை சந்திப்போம்.



**கமல் சங்வி**
RI இயக்குனர், 2019–21


**Board of Permanent Trustees & Executive Committee**

| | |
|---|---|
| PRIP Rajendra K Saboo | RI Dist 3080 |
| PRIP Kalyan Banerjee | RI Dist 3060 |
| RIPE Shekhar Mehta | RI Dist 3291 |
| PRID Panduranga Setty | RI Dist 3190 |
| PRID Sushil Gupta | RI Dist 3011 |
| PRID Ashok Mahajan | RI Dist 3141 |
| PRID P T Prabhakar | RI Dist 3232 |
| PRID Dr Manoj D Desai | RI Dist 3060 |
| PRID C Basker | RI Dist 3000 |
| TRF Trustee Gulam A Vahanvaty | RI Dist 3141 |
| RID Dr Bharat Pandya | RI Dist 3141 |
| RID Kamal Sanghvi | RI Dist 3250 |
| RIDE A S Venkatesh | RI Dist 3232 |
| RIDE Dr Mahesh Kotbagi | RI Dist 3131 |

**Executive Committee Members (2020–21)**

| | |
|---|---|
| DG Sanjiv Rai Mehra<br>Chair – Governors Council | RI Dist 3011 |
| DG Sudip Mukherjee<br>Secretary – Governors Council | RI Dist 3291 |
| DG Sangram Vishnu Patil<br>Secretary – Executive Committee | RI Dist 3170 |
| DG Prashant Harivallabh Jani<br>Treasurer – Executive Committee | RI Dist 3060 |
| DG S Muthupalaniappan<br>Member – Advisory Committee | RI Dist 3232 |



**ROTARY NEWS / ROTARY SAMACHAR**

**Editor**
Rasheeda Bhagat

**Senior Assistant Editor**
Jaishree Padmanabhan

**ROTARY NEWS / ROTARY SAMACHAR**

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website: www.rotarynewsonline.org

Now share articles from *rotarynewsonline.org* on WhatsApp.

# போலியோ இல்லாத இந்தியாவின் 10-வது ஆண்டு கொண்டாட்டம்

ரஷிதா பகத்

போலியோ இல்லாத இந்தியாவின் 10வது ஆண்டு விழாவை RID 3232க்கு உட்பட்ட மெட்ராஸ் ரோட்டரி சங்கம், மெய்நிகர் கூட்டம் மூலம் சிறப்பாகக் கொண்டாடியது. இந்தக் கூட்டத்துக்கு IPPC தலைவர் மைக் மெக்கவர்ன் தலைமை வகித்தார். ரோட்டரியின் மூத்த உறுப்பினரும் முன்னாள் தலைவருமான மறைந்த கிறிஸ் சிட்டாலே பற்றி பலரும் கூட்டத்தில் பேசினர். மெட்ராஸ் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த ரோட்டேரியன்கள் மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த வேறு சில சங்கங்களைச் சேர்ந்த உறுப்பினர்களும் பேசினர். சிட்டாலே முதலில் சிவப்பு தட்டம்மை நோயை ஒழிப்பதற்கும் பின் போலியோ ஒழிப்புப் பணிகளையும் முன்னெடுத்துச் சென்றவர். ரோட்டரி இன்டர்நேஷனல் போலியோ ஒழிப்பை முழு அளவில் கொண்டு செல்லும் அறிவிப்பை வெளியிடுவதற்கு முன்னரே அவர் இந்தப்பணியில் ஈடுபட்டார்.

ரோட்டரியின் போலியோ ஒழிப்பு நடவடிக்கைகள் பற்றிய ஒருகண்ணோட்டத்தை விவரித்த அவர், போலியோ ஒழிப்பு திட்டம் எங்கெங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக நிதி எப்படி திரட்டப்பட்டது, உலகில் எத்தனை குழந்தைகளுக்கு உதவியது என்று தெளிவாக குறிப்பிட்டார். அதுமட்டுமல்லாமல் கொரோனா தொற்றின்போது ரோட்டரி எதிர்கொண்ட சவால்களையும் அவர் சுட்டிக்காட்டினார். இன்று உலகில் 19 மில்லியன் மக்களால் பூமியில் நடந்து செல்ல முடிகிறது என்பது ஆச்சரியம் அளிக்கும். இல்லையெனில் அவர்கள் போலியோவால் முடக்கப்பட்டிருப்பார்கள். அவர்கள் யார் என்று எங்களுக்குத் தெரியாது ஆனால், அவர்கள் நம்மில் ஒருவராகக்கூட இருக்கலாம் என்றார்.

பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய இரு நாடுகளின் தரவுகளைப் பகுப்பாய்வு செய்த அவர், பாகிஸ்தானிலிருந்து நல்ல செய்தி கிடைத்துள்ளது. அங்கு தீவிர போலியோ நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 2019ல் 147 ஆக இருந்தது 2020ல் 84 ஆகக் குறைந்துவிட்டது. ஆப்கானிஸ்தானில் 2019ல் போலியோவால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 29 ஆக இருந்தது, 2020ம் ஆண்டில் 56 ஆக அதிகரித்துள்ளது. உலக அளவில் பார்த்தால் இந்த இரு நாடுகளிலும் தீவிர போலியோ வைரஸ் தாக்குதல் எண்ணிக்கை 176லிருந்து 140 ஆகக் குறைந்துவிட்டது. அதாவது 20 சதவீத அளவு சரிவு ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டு கொரோனா தொற்றுக்கான சவால்களை கருத்தில் கொண்டால் என்னைப் பொறுத்தவரை ஓர் அற்புதம் நடந்திருக்கிறது என்றுதான் சொல்வேன்.

ஆனாலும், துரதிருஷ்டவசமாக தடுப்பூசியால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 28 நாடுகளில் 1,000 மாக உள்ளது.

இந்தியாவில் 2009ம் ஆண்டில் போலியோ நோயால் தாக்கப் பட்டவர்கள் எண்ணிக்கையை ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்தால், கடந்த 10 ஆண்டுகளில் எந்த ஒருவரும் போலியோவால் பாதிக்கப்படவில்லை. பாகிஸ்தானுடனான புள்ளி விவரங் களை ஒப்பிட்டுப்பார்த்தால் நாம் மகிழ்ச்சி அடையலாம். 2009ம் ஆண்டில் இந்தியாவில் சுமார் 700 பேர் போலியோவால் பாதிக்கப் பட்டிருந்தனர். ஆனால், 2010ல் இது 40ஆகக் குறைந்துவிட்டிருந்தது. 2011ம் ஆண்டு ஜனவரியில், மேற்கு வங்க

*2011ல் 18 மாத குழந்தையான ருக்சார் கட்டூன் இந்தியாவின் கடைசி போலியோவால் பாதிக்கப்பட்ட குழந்தை.*



மாநிலம், ஹௌராவைச் சேர்ந்த ருக்ஸார் கட்டூன் ஒருவர் மட்டுமே போலியோவால் பாதிக்கப்பட்டிருந்தார். இந்தியாவில் போலியோவால் தாக்கப்பட்ட கடைசி நபர் இவர்தான். இந்தியாவில் 2004–05 ஆம் ஆண்டுகளில் என்ன நிலைமை இருந்ததோ அதே நிலைதான் பாகிஸ்தானில் 2017ம் ஆண்டு இருந்தது. போலியோ நோய் அதிகரிக்கும் முன்பு கணிசமான அளவில் குறைவாகவே இருந்தது.

இதேதான் பாகிஸ்தானில் 2019ம் ஆண்டு இருந்தது. ஆனால், TRF அறங்காவலர் அஜீஸ் மேமனின் தலைமையின் கீழ் போலியோவை ஒழிக்க பாகிஸ்தான் தொடர்ந்து போராடி வருகிறது. இந்தியாவின் பாதையை அது பின்பற்றி வருகிறது. அந்த ஆண்டு நாட்டில் போலியோவால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 80 ஆக இருந்தது. கடந்த 6 மாதங்களில் அது 24 ஆகக் குறைந்து விட்டது. கடந்த மூன்று மாதங்களில் 4, 2 மற்றும் பூஜ்யம் என குறைந்து விட்டது. இந்த ஆண்டு இதுவரை புதிதாக எந்த பதிவும் செய்யப் படவில்லை. இது ஒரு நல்ல அறிகுறியாகும். போலியோவை முழுமையாக ஒழிக்க பாகிஸ்தான் தொடர்ந்து போராடி வருகிறது.

ஆப்கானிஸ்தான் குறித்து IPPC தலைவர் மைக் மெக்கவர்ன் பேசு கையில், அரசுக்கு எதிரான சக்திகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில்தான் எங்கள் சவால் உள்ளது. அந்த பகுதிகளில் கடந்த இரண்டு ஆண்டுகளாக எங்களால் வீடு வீடாகச் சென்று போலியோ தடுப்பூசி போட முடியவில்லை. உலக சுகாதார நிறுவனம் மற்றும் யுனிசெப் இரண்டும் இது தொடர்பாக தலிபான்களிடம் பேசி வருகின்றனர். விரைவில் முன்னேற்றம் ஏற்படும் என்று நம்புகிறோம். சில நல்ல செய்திகள் உள்ளன. ஆனால், அவை அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படவில்லை. சில பகுதிகளை அணுக முடியாத நிலையில் போலியோவை முற்றிலுமாக ஒழிக்க முடியாது. கொரோனா தொற்று எதிர்த்துப் போராடுவதில் சவால்கள் இருந்தாலும், அதன் மூலம் சில வாய்ப்புகளும் கிடைத்தன. எங்களது போலியோ தொடர்புகள், கொரோனா தொற்றை கண்காணிக்கவும், ஆய்வகங்களுக்கு உதவவும் முடிந்தது.

கொவிட் தொற்றுக்கான மருத்துவச் சேவைகளை இதர அமைப்புகள் தொடங்கியவுடன் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் வீடு வீடாகச் சென்று போலியோ தடுப்பூசி போடும் பணி மீண்டும் தொடர்ந்தது. ஆப்பிரிக்க பிராந்தியத்தில் தடுப்பூசியால் பாதிக்கப்பட்டவர்களின் மீதும் கவனம் செலுத்தப்பட்டது. தடுப்பூசி போட்டுக்கொண்ட ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளது எங்களுக்கு கவலை அளித்தது. ஏனெனில் தீவிர போலியோ தாக்குதல் போலவே அவர்கள் மீண்டும் முடங்கிப்போய்விடக்கூடும். மரபணு ரீதியில் நிலைத்திருக்கக்கூடிய புதிய போலியோ வைரஸ் சொட்டு மருந்து மருத்துவப் பரிசோதனையில் நல்ல முடிவுகளை எட்டியுள்ளன. இது வெற்றிகரமாக அமையும் என்று நம்புகிறோம் என்றார் மெக்கவர்ன்.

இந்தப் பணியை உலகில் உள்ள




**வலமிருந்து:** RIPE *சேகர் மேத்தா, முன்னாள்* IPPC *தலைவர் ராபர்ட் ஸ்காட்,* INPPC *தலைவர் தீபக் கபூர்,* PRIP *கல்யாண் பானர்ஜீ மற்றும் மறைந்த* PRID Y P *தாஸ்.*



*இந்திய குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் தில்லி ராஷ்டிரபதி பவனில் குழந்தைக்கு போலியோ சொட்டு மருந்து அளிக்கிறார்.*

## போலியோ ஒழிப்பில் ரோட்டரியின் தாக்கம்

*உலகம் முழுவதும் போலியோ ஒழிப்பில் ரோட்டேரியன்களின் பங்கு பணிகளை IPCC தலைவர் மெக்கவர்ன் படங்கள் மற்றும் உரைகள் மூலம் எளிமையாக விளக்கினார்.*

- *19 மில்லியன் மக்கள் போலியோவிலிருந்து விடுபட்டு இப்போது பூமியில் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். இல்லையெனில் அவர்கள் போலியோ பாதிப்பால் முடங்கியிருக்க நேர்ந்திருக்கும்.*
- *ஒவ்வொரு ஆண்டும் 6,50,000 பேர் பாதிக்கப்படுவது தவிர்க்கப்பட்டுள்ளது.*
- *1988-ஆம் ஆண்டு முதல் 3 பில்லியன் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து கொடுக்கப்பட்டுள்ளது.*
- *2019ம் ஆண்டு 40க்கும் மேற்பட்ட நாடுகளில் 1.2 பில்லியன் டோஸ் மருந்துகள், 430 மில்லியன் குழந்தைகளுக்கு வாய்வழியாக சொட்டு மருந்தாக வழங்கப் பட்டுள்ளது.*
- *ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் தவிர்த்து தீவிர போலியோ தாக்குதல் இல்லாத நான்காவது ஆண்டை உலகம் கண்டுள்ளது.*
- *போலியோ பிளஸ் திட்டத்தின் மூலம் பிற நோய்களுக்கான தடுப்பூசி திட்டங்களுக்கும் ரோட்டரி உதவியுள்ளது. எபோலா மற்றும் கொவிட்-19 தடுப்புப் பணிகளிலும் ரோட்டரி செயலாற்றியுள்ளது.*

அரசாங்கங்களின் ஆதரவுடன், கூட்டாளர்களுடன் சேர்ந்து செய்வதன் அவசியத்தை வலியுறுத்திய அவர், கடந்த மாதம் இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் ஒரு குழந்தைக்கு போலியோ சொட்டு மருந்து கொடுக்கும் படத்தை பகிர்ந்துகொண்டார். கொரோனா தொற்று பரவல் தொடங்குவதற்கு முன்பு RI தலைவர் ஹோல்கர் நாக், TRF அறங்காவலர் தலைவர் K R ரவீந்திரன், அறங்காவலர் அஜீஸ் மேமன் ஆகியோருடன் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானை சந்தித்து, அந்த நாட்டில் போலியோ ஒழிப்புப் பணிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து விவாதித்த தாகவும் அவர் குறிப்பிட்டார்.

அரசுகளுடன் இணைந்து செயலாற்றுவது பலவிதங்களில் ரோட்டரிக்கு உதவிபுரிந்துள்ளது. இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான், மொனாகோ, கனடா, ஆஸ்திரேலியா ஆகிய அரசுகளுடன் இணைந்து செயல்பட்டுள்ளதன் மூலம் ரோட்டரி கணிசமான தொகையை இத்திட்டத்திற்கு வழங்கியுள்ளன என்றார்.

அதிக அளவில் தடுப்பூசி போட்டுக் கொள்ள விரும்புவோரை ஊக்குவிக்க வேண்டும் எனவும் மெக்கவர்ன் குறிப்பிட்டார். தடுப்பூசியின் பயன்களை பெற்றோர்களிடம் எடுத்துக்கூறி தங்கள் குழந்தைகளுக்கு தடுப்பூசி போடச் செய்ய வேண்டும். உலகம் முழுவதும் குழந்தைகளுக்காக இதைச் செய்யவேண்டிய கடமை நமக்கு உள்ளது. நாம் பொறுமையாகவும், விடாமுயற்சியுடனும் இதற்காக பாடுபட்டுவந்துள்ளோம். இந்தியாவில் போலியோ நோயால் பாதிக்கப்பட்ட கடைசி குழந்தையாக ருக்ஸார் இருப்பதை உறுதிசெய்த 10வது ஆண்டை நோக்கி நாம் பயணிக்கும் நேரத்தில் உங்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய PRIP கல்யாண் பானர்ஜி, இந்தியாவில் போலியோ இல்லாத பத்தாண்டு கொண்டாட வேண்டிய ஒருவிஷயம்தான். மெட்ராஸ் ரோட்டரி சங்கம் 1960களிலும் 1970களிலும் தட்டமை, போலியோ போன்ற நோய்களை கட்டுப்படுத்துவதிலும், ஒழிப்பதிலும் சிறப்பாக பணியாற்றி யதை நான் அறிவேன். இதற்கான முன்முயற்சிகளை மேற்கொண்டவர் கிறிஸ்சிட்டாலே தான். அவர் IPPCயில் பாப் ஸ்காட் மற்றும் மெக்கவர்ன் ஆகியோருடன் இருந்தவர். நம்மால் முடிந்த வேலைகள் அனைத்தையும் செய்வதற்கு வாய்ப்புக் கிடைத்ததில் நமக்கெல்லாம் மகிழ்ச்சிதான் என்றார்.

உலகில் செல்வாக்கு மிக்க 100



பேர்களின் பட்டியலை டைம்ஸ் பத்திரிகை வெளியிட்டபோது அதில் இடம்பெற்ற PDG மற்றும் நைஜீரியாவின் போலியோ பிளஸ் குழுவின் தலைவருமான துன்ஜி ஃபன்ஷோ, நைஜீரியாவை போலியோ இல்லாத நாடாக உருவாக்கிய ஹீரோக்களில் ஒருவர் என குறிப்பிட்டார் பானர்ஜி. 2000ம் ஆண்டு தொடக்கத்திலிருந்து அவரை எனக்குத் தெரியும். மாவட்ட மாநாட்டிற்கான RI பிரதிநிதியாக நான் அவரது மாவட்டத்தில் இருந்திருக்கிறேன் என்றார்.

TRF அறங்காவலராக இருந்த காலத்தில் நைஜீரியாவுக்கு ஒருபுதிய தேசிய போலியோ பிளஸ் தலைவர் தேவைப்பட்டபோது, நான் PRIPக்கள் ராஜேந்திர சாபூ மற்றும் ஜோனாதன் மஜியாக்பே ஆகியோருடன் தொடர்பு கொண்டு துன்ஜி ஃபன்ஷோவின் திறமைகளை எடுத்துக் கூறி, அப்போது TRF தலைவராக இருந்த வில்ஃப் வில்கின்ஸனிடம் நைஜீரியாவின் தலைவராக துன்ஜி ஃபன்ஷோவை நியமிக்கும்படி கூறினேன். போக்கோ ஹோரம் முதல் எபோலா வரைஸ் வரை பல்வேறு பிரச்னைகள் நாட்டை சூழ்ந்திருந்த நிலையில் அவற்றை எல்லாம் கடந்து தனது பணியை சிறப்பாக கையாண்டவர் அவர் என்றார்.

2011–12ம் ஆண்டில் நான்

## கேட்ஸ் அறக்கட்டளை மூலம் முதல் தவணையாக 1 மில்லியன் டாலர்

*TRF மற்றும் IPPCயின் முன்னாள் தலைவர் பாப் ஸ்காட்டை அறிமுகப்படுத்தி மெட்ராஸ் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் கோபிநாத், பல ஆண்டுகளுக்கு முன்பு ஜப்பானில் போலியோவுக்கு நிதி திரட்டும் விருந்து நிகழ்ச்சிக்கு பாப் ஸாகாட் ஏற்பாடு செய்ததையும் அதில் அப்போதைய ரோட்டரி தலைவர் வில்ஃப் வில்கின்ஸன், தற்போதைய ஐககஇ தலைவர் மைக் மெக்கவர்ன், யுனிசெப் மற்றும் உலகசுகாதார அமைப்பின் (WHO) பிரதிநிதிகள் மற்றும் பில் அண்ட் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையின் அறங்காவலர்கள் ஆகியோர் பங்கேற்றதையும் குறிப்பிட்டார். அப்போது கேட்ஸ் அறக்கட்டளையிடமிருந்து பாப் ஸ்காட்டுக்கு ஓர் அழைப்பு வந்தது. போலியோ ஒழிப்புக்கு 100 மில்லியன் டாலர் முதல் தவணையாகத் தருவதற்கு கேட்ஸ் அறக்கட்டளை ஒப்புக்கொண்டது. அந்த தொகை மின்னணு பரிமாற்ற முறையில் TRF அறக்கட்டளைக்கு மாற்றப்பட்ட தகவலையும் கேட்ஸ் அறக்கட்டளை அறிவித்தது. உடனே இந்த தகவலை பாப் ஸ்காட் நிகழ்ச்சியி'ல் அறிவித்தார்.*

*இதுதான் கேட்ஸ் அறக்கட்டளையுடன் ரோட்டரிக்கு உள்ள உறவின் தொடக்கமாகும். போலியோ நிதிக்கான மொத்த பங்களிப்பு 1 பில்லியன் டாலரை தாண்டிவிட்டதாக முந்தைய வாரம்தான் மெக்கவர்ன் அறிவித்திருந்தார்.*

RIல் தலைவராக இருந்த காலத்தில் மறக்கமுடியாத சாதனை என்னவெனில், இந்தியா போலியோ இல்லாத நாடாக மாற வழிவகுத்தது தான். நமது இளம் ரோட்டேரியன்கள், அரசாங்கத்துடன் கைகோர்த்து உ.பி. மற்றும் பிகார் மாநிலங்களின் தொலைத்தூர பகுதிகளுக்குச் சென்று போலியோ ஒழிப்புப் பணிகளை செவ்வனே நிறைவேற்றினர். சீறிப்பாயும் நதியை படகில் கடப்பது, செங்குத்தான மலையில் உயிரைப் பணயம் வைத்து ஏறுவது, ஆபத்தான முதலைகள் மற்றும் புலிகளிடமிருந்து மீள்வது போன்ற பல கடினமான பயணங்களை மேற்கொண்டு எதிர்பாராத அற்புதங்களை நிகழ்த்தியுள்ளோம் என்றார்.

இந்திய தேசிய போலியோப்ளஸ் குழுத்தலைவர் PDG தீபக் கபூர் ஆற்றிய மகத்தான பணிகளைத் தவிர, டாக்டர் ஜேக்கப் ஜானின் வழிகாட்டுதலும் எங்களுக்கு இருந்தது. போலியோ ஒழிப்பு செய்தி இந்தியாவுக்கு மகிழ்ச்சியை அளித்தது. அதுமட்டுமல்ல, இந்திய அரசு, போலியோ ஒழிப்பில் ரோட்டரியின் பங்கையும் அங்கீகரித்தது. அப்போது சுகாதார அமைச்சராக இருந்தவர் தனிப்பட்ட முறையில் ரோட்டரி தலைமையகமான ஈவான்ஸ்டனுக்கு நேரில் வந்து எங்களுக்கு நன்றி தெரிவித்தார் என்று கல்யாண் பானர்ஜி மேலும் தெரிவித்தார்.

1988ல் தமது மனைவியுடன் மெட்ராஸ் ரோட்டரி சங்கத்துக்கு விஜயம் செய்ததை நினைவுகூர்ந்தார் பாப் ஸ்காட். பின்னர் இந்தியாவுக்கு மீண்டும் வந்தபோது ஹௌராவில் குழந்தையாக இருந்த ருக்ஸாரை சந்தித்தார். உயரமான வெள்ளை மனிதர் தம்மை தூக்குவதை விரும்பாமல் அக்குழந்தை அழுததையும் அவர் நினைவுகூர்ந்தார்.

முன்னாள் தலைவர் S N ஸ்ரீகாந்திடம், பாப் ஸ்காட் பின் வருமாறு கூறினார். நான் IPPC தலைவராக இருந்தபோது, போலியோ ஒழிப்பு சுடரை உலகம் முழுவதும்



*பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுடன் (இடமிருந்து) அந்நாட்டு போலியோ ப்ளஸ் தலைவர் அஜீஸ் மேமன், TRF தலைவர் K R ரவீந்திரன், தலைவர் ஹோல்கர் நாக் மற்றும் பாகிஸ்தான் நலத்துறை அமைச்சர் ஜாஃபர் மிர்ஜா.*

## போலியோ நிதி எவ்வாறு செலவிடப்படுகிறது?

*ரோட்டரி எப்படி நிதியைச் செல விடுகிறது, ரோட்டரி எழுப்பிய நிதியிலிருந்து பிராந்தியம் வாரியாக நிதி ஒதுக்கீடு செய்வதிலும் வெளிப்படைத் தன்மை இருப்பதன் முக்கியத்துவத்தை IPPC தலைவர் மைக் மெக்கவர்ன் வலியுறுத்தினார். சமீபத்தில் TRF அறங்காவலர்கள் போலியோவை முற்றிலும் ஒழிக்க 100 மில்லியன் டாலர் ஒதுக்கீடு செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகவும், 2021 ஜூலையில் கூடுதலாக 50 மில்லியன் டாலர் விடுவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். சுமார் 45 சதவீத நிதி ஆப்பிரிக்கா, பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் முக்கியமாக செலவிடப்படுகிறது. மேலும் பட்ஜெட்டில் 25 சதவீத தொகை தடுப்பூசிகளுக்காகச் செலவிடப்படுகிறது. வரும் ஜூன் மாதம் இறுதியில் 150 மில்லியன் டாலர் செலவிடப்பட்டிருக்கும்.*

*ஆனால், நாங்கள் இந்த பணியைத் தொடங்கிய 1985-ஆம் ஆண்டு அல்லது 36 ஆண்டுகளுக்கு முன்பு எவ்வளவு செலவிடப்பட்டது? பாகிஸ்தானுக்கு நாங்கள் 291 மில்லியன் டாலர் (13 சதவீத தொகை) செலவிடப்பட்டது. நைஜீரியாவுக்காக 282 மில்லியன் (12 சதவீதம்) செலவிடப்பட்டது. WHO-AFROக்கு 230 மில்லியன் டாலர் (10 சதவீதம்) செலவிடப்பட்டது. ஆப்கானிஸ்தானுக்கு 2 07 மில்லியன் (9 சதவீதம்) செலவிடப்பட்டது. இந்தியாவுக்கு 181 மில்லியன் (8 சதவீதம்) செலவிடப்பட்டது.*

*1885லிருந்து போலியோ ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக 3 பில்லியன் டாலர் செலவிடப்பட்டுள்ளது. இதில் ரோட்டேரியன்கள் திரட்டிய நிதி 2 பில்லியன் டாலர். சமீபத்தில் கேட்ஸ் அறக்கட்டளையின் பங்களிப்பு 1 பில்லியன் டாலரை எட்டியுள்ளது.*

கொண்டுசெல்வது குறித்து என்னிடம் பேசினீர்கள். முதலில் நான் அதற்கு தயங்கினேன். ஆனால், நீங்கள் விடாமுயற்சியுடன் என்னை சமாதானப்படுத்தினீர்கள். அந்த சுடர் கனடாவில் உள்ள எனது சங்கம் உள்பட உலகம் முழுவதும் சுற்றி வந்தது. நாம் ஒரு விருந்து நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து நிதி திரட்டினோம் என்று நினைவுகூர்ந்தார்.

நோய் கண்டறியும் நிபுணரான டாக்டர் ஜேக்கப் ஜான், இந்தியாவில் போலியோ ஒழிப்பு என்பது அற்புதமான நிகழ்வுதான். இதன் மூலம் தேசிய பொருளாதாரத்துக்கு பெருமளவு ஆதாயம் ஏற்பட்டது. அதாவது குறைத்து மதிப்பிட்டாலும் அது 400 மில்லியன் டாலர் இருக்கும். சொத்துகளை உருவாக்குவதில் ரோட்டரிக்கு முக்கிய பங்கு உண்டு. ஆனால், இதை யாரும் அங்கீகரிக்கமாட்டார்கள். ஆனால், ரோட்டரி அதைச் செய்திருக்கிறது என்றார் ஜேக்கப் ஜான்.




*RC மெட்ராஸ் உறுப்பினரான கிரிஸ் சிட்டாலே தமிழ்நாடு சுகாதாரத்துறை அமைச்சர் Dr H V ஹண்டே முன்னிலையில் ஒரு கூட்டத்தில் பேசுகிறார்.*

டாக்டர் ஃபன்ஷோ பேசுகையில், சாபூ மற்றும் பானர்ஜிக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார். நான் நைஜீரியா போலியோ பிளஸ் குழுவுக்குத் தலைவராவதற்கு முன்பே ஆப்பிரிக்காவின் நண்பர்களாக அவர்கள் இருந்தனர். ஆப்பிரிக்காவை தீவிர போலியோ வைரஸ் தாக்குதலிலிருந்து விடுவிக்க பலவிதத்திலும் அவர்கள் உதவிபுரிந்தார்கள். 2016ம் ஆண்டில் நைஜீரியா போலியோ இல்லாத நாடாக உருவாவதற்கான இலக்கை அடைவதற்கு எங்களுக்கு இந்திய ரோட்டேரியன்கள் முக்கிய வழிகாட்டியாக இருந்தனர். எங்களுக்கு தேவைப்பட்ட போதெல்லாம் இந்திய டாக்டர்கள் குழுவை அனுப்பிவைத்து சாபூ, பானர்ஜி இருவரும் உதவினர் என்றார்.

கொவிட் தடுப்பூசியில் தமிழகத்தின் சுகாதாரத்துறையுடன் இணைந்து செயல்பட மெட்ராஸ் ரோட்டரி சங்கம் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக அதன் தலைவர் கபில் சிட்டாலே பெருமையுடன் குறிப்பிட்டார்.



*சாவ் பாலோவில் RI மாநாட்டில் போலியோ சுடர்.* **இடமிருந்து:** *PRID P T பிரபாகர், கொரின்னா, அப்போதைய RI தலைவர் கேரி ஹுவாங், சங்கத்தலைவர் S N ஸ்ரீகாந்த் மற்றும் செயலாளர் N K கோபிநாத்.*

மெட்ராஸ் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் ஸ்ரீகாந்த், மெக்கவர்னுடனான கலந்துரையாடல் அமர்வை நிகழ்த்தினார். தமது காலத்தில் தொடங்கப்பட்ட போலியோ சுடர் திட்டத்தின் விடியோவையும் அவர் போட்டுக்காட்டினார். தமது முயற்சிகளுக்கு உறுதுணையாக இருந்த முன்னாள் தலைவர் கோபிநாத்துக்கும் அவர் நன்றி தெரிவித்துக்கொண்டார். ரோட்டரி இன்டர்நேஷனல் மாநாடு சாவ் பாலோவில் நடைபெற்றபோது அங்கு போலியோ சுடர் எடுத்துச் செல்லப்பட்டதாகவும் 35 நாடுகளுக்கு அந்த சுடர் எடுத்துச் செல்லப்பட்டு போலியோ ஒழிப்புக்கு அதன் மூலம் 10 மில்லியன் டாலர் நிதி திரட்டப் பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சிவப்பு தட்டம்மை மற்றும் போலியோ ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு மெட்ராஸ் ரோட்டரி சங்கம் மேற்கொண்ட முன்னோடி முயற்சிகளை நினைவு கூர்ந்த அவர், இந்தியாவில் போலியோ இல்லாத முதல் மாநிலமாக தமிழகம் உருவனதை பெருமையாகக் குறிப்பிட்டார்.

ஜூம் நிகழ்ச்சியில் அனைவரது பார்வையும் ருக்ஸார் மீது இருந்தது. போலியோ இல்லாத இந்தியாவின் பத்தாண்டு நிறைவை குறிக்கும் வகையில் அவருக்கு கையடக்க கணினியை (டாப்லெட்) பரிசாக வழங்குவதாகத் தெரிவித்தார் ஸ்ரீகாந்த். RIDE A S வெங்கடேஷ், TRF அறங்காவலர்கள் அஜீஸ் மேமன், கீதா மானெக் மற்றும் PRID P T பிரபாகர் ஆகியோரும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.



*ருக்சார் கடுன் ஷாபரா என்னும் கிராமத்தில் தன் வீட்டில்.*

வடிவமைப்பு: N. கிருஷ்ணமூர்த்தி

# கோவிட் தடுப்பு மருந்து வழங்கலுக்கான ஒருங்கிணைப்புச் (நோடல்) சங்கமாக RC மெட்ராஸ்

ரஷீதா பகத்

தமிழ் நாடு அரசாங்கம், அம்மாநிலத்தில் கோவிட் தடுப்பு மருந்து வழங்கல் பணியில் தனக்கு உதவுவதற்கான ஒருங்கிணைப்புச் சங்கமாக மெட்ராஸ் ரோட்டரி சங்கம், RID 3232ஐத் தேர்ந்தெடுத்துள்ளது.

TN நலச் செயலாளர் J ராதாகிருஷ்ணன் இந்தச் சங்கத்தின் தலைவர் கபில் சிடாலெ-க்கு எழுதிய ஒரு கடிதத்தில், கோவிட்-19 தடுப்பு மருந்து அளவுகளைப் பெறுதல் மற்றும் வழங்குதலில் அரசுக்கு உதவும்படி இந்தச் சங்கத்தை அழைத்துள்ளார். தடுப்பு மருந்தை முறையாகச் சேமிப்பதற்கான குளிர் சங்கிலித் தேவை, களத்தில் தடுப்பு மருந்தைச் செயல்படுத்துதல், இந்த மிகப் பெரிய பொது நலத் திட்டம் தொடர்பான தளவாடப் பணிகள் ஆகியவற்றில் உதவும்படியும் இந்தச் சங்கத்துக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இங்கு நாம் நினைவுகூரவேண்டிய ஒரு விஷயம், 1980கள் மற்றும் 90களில், இளம்பிள்ளைவாதத்தைத் தடுக்கும் வாய்வழிச் சொட்டு மருந்துகளை வெளிநாட்டிலிருந்து விமானம் மூலம் கொண்டுவருவது, அவற்றின் செயல்திறனைப் பாது காப்பதற்காகச் சரியான வெப்ப நிலையில் அவற்றைச் சேமிப்பது ஆகியவற்றில் RC மெட்ராஸ் ஒரு முக்கியப் பங்காற்றியது. அந்தத் தொடக்க ஆண்டுகளில், இச்சங்கத்தின் மறைந்த தலைவர் மற்றும் சென்னை யின் சிறந்த கட்டுமானக் கலைஞர் கிரிஸ் சிடாலெ வழிகாட்டுதலில் பல ரோட்டரியன்கள் பேரார்வத்துடன் இதற்காகப் பெரும் உழைப்பைச் செலுத்தினார்கள்.

இந்த ரோட்டரியன்களும், தமிழ்நாட்டின் பிற ரோட்டரி சங்கங்களைச் சேர்ந்த மற்றவர்களும் செய்த இந்த முன்னோடிப் பணியாலும், அப்போதைய நல அமைச்சர் Dr H V ஹண்டே தலைமையில் T N நலத்துறை யுடன் நெருங்கிய ஒருங்கிணைப்புடன்



இடமிருந்து: Rtn Dr *அனுராதா கணேசன்,* Rtn Dr *கௌதமதாஸ் உடிப்பி, தமிழ்நாடு நல செயலாளர்* Dr J *ராதாகிருஷ்ணன்,* Rtn *விவேக் ஹரிநாராயன் மற்றும் சங்கத் தலைவர் கபில் சிடாலே.*

இவர்கள் அமைத்த கூட்டணியாலும், வேலூரிலுள்ள CMCல் நோய் நுண்மியியல் பேராசிரியராகிய Dr ஜேக்கப் ஜானின் தொடர்ச்சியான அறிவுரையாலும் தான், இந்தியாவில் இளம்பிள்ளைவாதம் இல்லாத முதல் மாநிலமாகத் தமிழ்நாடு ஆனது. இந்தியா இளம்பிள்ளைவாதம் இல்லாத நாடாக ஆகிய 10வது ஆண்டு விழாவைக் கொண்டாடுவதற்காக நடத்தப்பட்ட ஒரு சமீபத்திய நிகழ்வில், அதன் உறுப்பினர்களில் ஒருவர் இதைத் தெரிவித்தார்.

இதில் ஆர்வமூட்டும் விஷயம் என்னவென்றால், களத்தில் முன்னணியில் இருந்து பணியாற்றும் நலப் பணியாளர்கள் கோவிட்-19க்கு எதிராகத் தடுப்பு மருந்து எடுத்துக் கொள்வதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிற மாநிலங்களில் ஒன்றாகவும் தமிழ் நாடு உள்ளது.

2000களின் தொடக்கத்தில், மகாராஷ்டிரம் மற்றும் UP உள்ளிட்ட சில மாநிலங்களில், இந்தியாவில் மிகவும் பின்தங்கிய பகுதிகள் சிலவற்றில் வாய்வழித் தடுப்புச் சொட்டு மருந்துகளைப்பற்றிப் பல தவறான கருத்துகள் பரவின. அப்போது, PRID அசோக்மகாஜன் தலைமையில் இப்பகுதிகளில் ரோட்டரி நடத்திய உறுதியளித்தல் முயற்சிகளால், பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்குச் சொட்டு மருந்து வழங்க முன்வந்தார்கள். உள்ளூர் உலேமாக்கள் மற்றும் பிற மதம் சார்ந்த ஆளுமைகளை ரோட்டரி இந்த உறுதியளித்தலில் பங்குபெறச்செய்தது.

TN அரசும், மற்ற மாநில அரசுகளும் கோவிட் தடுப்பு மருந்து வழங்கலுக்கான CSR நிதிகளைத் திரட்டுவதிலும் ரோட்டரியின் உதவியை எதிர்பார்ப்பார்கள், அதற்காக நாங்கள் மிகக் கடினமாக உழைப்போம்'' என்றும் மகாஜன் தொடர்ந்து குறிப்பிட்டார்.

RCM தலைவர் சிடாலெ தொடர்ந்து பேசுகையில், தமிழ்நாட்டில் கோவிட் தடுப்பு மருந்து வழங் கலுக்கான ஒருங்கிணைப்புச் சங்கம் என்றமுறையில், RID 3232ல் உள்ள பிற சங்கங்கள், இம்மாநிலத்தில் உள்ள மற்ற மாவட்டங்களின் DGக்களை நாங்கள் விரைவில் தொடர்புகொள்வோம், ஒரு செயல் திட்டத்தை உருவாக்குவோம். எங்கள் முன்னாள் தலைவர் விவேக் ஹரிநாராயண் அவர்களுடைய முயற்சிகளால்தான் இந்தக் கூட்டணி சாத்தியமானது'' என்றார்.■

# சவாலும் வாய்ப்பும்



ஓராண்டுக்குமுன்னால், இதே மாதத்தில், உலக சுகாதார அமைப்பு COVID-19ஐ ஒரு நோய்ப்பரவலாக அறிவித்தது. இந்தக் கொடுமையான நோயைக் கட்டுப்படுத்துவதில் சில நாடுகள் மற்ற நாடுகளைவிடச் சிறப்பாகச் செயல் பட்டிருக்கின்றன. தடுப்பு மருந்துகள் விரைவாக உருவாக்கப்பட்டிருப்பதால், சமூகத் தனிமைப்படுத்தல் என்னும் நம்முடைய விநோதமான புதிய எதார்த்தத்தின் முடிவை நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம்.

நம்முடைய மிக உயர்ந்த லட்சியங்களுக்கேற்ப வாழ்ந்தால், ரோட்டரி அறக்கட்டளையின் வழியாக நாம் கொண்டுவரக்கூடிய தாக்கத்தை இது நமக்கு நினைவுபடுத்துகிறது. இந்தப் பிரச்சனையிலிருந்து மீளவேண்டுமென்றால், நாம் உண்மையான பன்னாட்டு எண்ணத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்று இது நமக்கு நினைவுபடுத்துகிறது.

Covid-19 நோய்ப்பரவலின்போது, நாம் இரக்கத்தை, தியாகத்தை, நட்பை, மீள்திறன் கொண்ட நல்ல நகைச் சுவையை நேருக்கு நேர் கண்டோம். இந்த நோய்ப்பரவலுக் கேற்ப நம்மை மாற்றிக்கொள்ள, நம் சமூகங்களுக்குச் சேவை புரிய, 7 பில்லியன் மக்களுக்குத் தடுப்பு மருந்து அளிக்கிற, அநேகமாக வரலாற்றில் இதற்குமுன் எப்போதும் மேற்கொள்ளப்படாத மிகச் சிக்கலான ஒரு பணியில் ஈடுபடும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள நிறைய உழைத்துள்ளோம், உழைத்துக்கொண்டிருக்கிறோம்.

அதற்காக, இளம்பிள்ளைவாதத்தை அழித்தல் என்கிற நம்முடைய உறுதியான அர்ப்பணிப்பிலிருந்து நாம் எந்தவிதத்திலும் விலகிச்செல்லமாட்டோம். அது நம்முடைய மிக உயர்ந்த முக்கியத்துவமாகத் தொடர்ந்து நீடிக்கும்.

இளம்பிள்ளைவாதத்தை எதிர்த்துப் போராடிய நம்முடைய அனுபவம் முழுவதையும் பயன்படுத்தி நாம் COVID-19ஐ எதிர்க்கலாம். தடுப்பு மருந்துக்கான எதிர்ப்புகள் மற்றும் தவறான தகவல்கள் ஒரு விசையாக வளர்ந்துவருகின்றன, அவற்றை எதிர்ப்பதில் நாம் அனைவரும் பங்குபெறவேண்டும். தடுப்பு மருந்துகளின் உயிர் காக்கும் ஆற்றலைப்பற்றிய செய்தியை நாம் பரப்பவேண்டும். நாம் அரசாங்கங்களுடன் நெருங்கிப் பணியாற்றவேண்டும், களத்தில் முன்னணியில் நிற்கும் நலப் பணியாளர்களை ஆதரிக்கவேண்டும்.

அறக்கட்டளையும் உலகின் சவால்களைக் கையாள்வதற்காகத் தொடர்ந்து தன்னை மாற்றிவருகிறது. ஒவ்வொரு ரோட்டரியனும் இந்த முயற்சியில் பங்களிக்கவேண்டும். பிறருக்கு உதவுவதற்காகவும், நீடித்த மாற்றத்தைக் கொண்டுவருவதற்காகவும் நீங்கள் எந்த வழியில் முயன்றாலும் சரி, நீங்கள் தனியாக இருக்கமாட்டீர்கள் என்பதை நீங்கள் உணர்வீர்கள்.

Ravi

**KR ரவீந்திரன்**
அறக்கட்டளை அறங்காவலர் தலைவர்

---

## ருக்சாருக்கு சைக்கிள் பரிசு

ரோட்டரி செய்திக்குழு

இந்தியாவில் 2011ம் ஆண்டு போலியோ இருப்பதாக கண்டறியப் பட்ட கடைசி குழந்தையான ருக்ஸார் கடூனுக்கு, RID 3291க்கு உட்பட்ட ஹௌரா ரோட்டரி சங்க தலைவர் Dr பமீலா கோஷ் சைக்கிள் ஒன்றை வழங்கியுள்ளார். இந்தியா மற்றும் தென்கிழக்கு ஆசியா முழுவதும் போலியோ இல்லாத பகுதியாக உலக சுகாதார நிறுவனம் 2014ம் ஆண்டு மார்ச் மாதம் அறிவித்தது.

ருக்சாரின் சொந்த கிராமமான கொல்கத்தாவிலிருந்து 50 கி.மீ. தொலைவில் உள்ள ஷாபாராவுக்கு நாங்கள் சென்றோம். அப்பகுதி மக்களிடம் போலியோ விழிப் புணர்வை ஏற்படுத்தியதுடன், தங்கள் குழந்தைகளுக்கு போலியோ தடுப்பூசி போடுவது, சொட்டு மருந்து கொடுக்க வேண்டியதன் அவசியத்தையும் பெற்றோர்களிடம் எடுத்துரைத்தோம்.

ருக்சார் போலியோ நோய்த் தாக்குதலுக்கு ஆளானபோது அவள் 18 மாத குழந்தை அவருக்கு பிஸியோதெரபி பயிற்சி அளிக்கப்பட்டு பூரண குணமடைந்தார் என்று நினைவு கூர்ந்தார் சங்க செயலாளர் ஜோயட்டிபட்டாச்சார்யா.

இப்போது 11 வயதாகும் ருக்சாருக்கு இச்சைக்கிள் பள்ளிக்குச் சென்று வர உதவும்.■



*ருக்சார் கடுனுடன் RC ஹௌரா தலைவர் பமீலா கோஷ் மற்றும் செயலாளர் ஜோயாட்டி பட்டாச்சார்யா. ருக்சாரின் பெற்றோரும் உடன் உள்ளனர்.*

# அற்புதங்கள் நிகழலாம்! போலியோ ஒழிப்பில் இந்தியா வென்றதும் இப்படித்தான்

ராஜேந்திர சாபூ

உலகமே கொரோனா வைரஸ் தொற்றை எதிர்த்துப் போராடிவரும் இந்த நேரத்தில், பல்வேறு பிரச்னைகளையும் தாண்டிவந்து போலியோ வைரஸ் எவ்வாறு ஒழிக்கப்பட்டது என்கிற கதை மனித குலத்திற்கு நம்பிக்கை அளித்துள்ளது. இந்த ஆண்டு ஜனவரி 13ம் தேதி இந்தியா, போலியோ ஒழிக்கப்பட்டதன் 10வது ஆண்டைக் கொண்டாடியது. கடந்த 2011 ஆம் ஆண்டு இதே தேதியில்தான் இந்த நோய் கண்டறியப்பட்ட கடைசி நோயாளி. அதாவது போலியோ தாக்கப்பட்ட ஹௌராவைச் சேர்ந்த இரண்டு வயது குழந்தை ருக்ஸார்.

அவளைப் பொருத்தவரை நாங்கள் மிகவும் தாமதமாக இருக்கலாம். ஆனால், அதன் பிறகு இந்திய போலியோ இல்லாத நாடு என்ற பாதையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. 2012ம் ஆண்டில், இந்திய அரசும் ரோட்டரியும் புதுதில்லி, விஞ்ஞான் பவனில் ஒரு போலியோ உச்சி மாநாட்டை நடத்தியது. தொடக்க நிகழ்ச்சிக்கு முன்னதாக அப்போது ஜெனீவாவில் உள்ள உலக சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த புரூஸ் அய்ல்வார்டு மேடையில் தோன்றி, இந்தியா போலியோ பாதிப்புக்குள்ளான நாடுகளின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு விட்டதாக அறிவித்தார்.

கடந்த 2014ம் ஆண்டு, மார்ச் 26ம் தேதி உலகச் சுகாதார நிறுவனம், இந்தியா, போலியோ இல்லாத நாடு என்று சான்று அளித்தது. பொது சுகாதார வரலாற்று நாட்காட்டியில் ஜனவரி 13ம் தேதி ஒரு மறக்கமுடியாத நாளாக இருப்பதன் காரணம் அதுதான். 1988ம் ஆண்டில் இந்தியாவில் ஒவ்வொரு நாளும் 450 குழந்தைகள் போலியோவால் பாதிக்கப்படுவதாக மதிப்பிடப்பட்டது. போலியோ வைரஸால் பாதிக்கப் பட்ட 200 குழந்தைகளில் ஒருவர் மட்டுமே முடங்கியதாக தெரிய வந்தது. மற்ற 199 குழந்தைகள் கண்டறியப்படாமலேயே இருந்தனர். உலகில் போலியோ நோய் ஒழிப்பில் இந்தியாதான் கடைசி நாடாக இருக்கும் என்று நிபுணர்கள் கருதினார்கள். (2002 ஆம் ஆண்டு பிற்பகுதியில் கூட இதே நிலைதான்.) 5 வயதுக்குட்பட்ட 170 மில்லியன் குழந்தைகள், மக்கள் தொகை அடர்த்தி, சுகாதாரமற்ற நிலை, தூய்மையற்ற குடிநீர், மற்றும் குடல் நோய்கள் உள்ளிட்டவைதான் இவற்றுக்கு காரணம். போலியோவுக்கு எதிரான இந்தியாவின் வெற்றி நீண்டகால போராட்டத்திற்கு பிறகு அடையப்பட்டது.

1980களில் 11 நாடுகளைச் சேர்ந்த 3,50,000 குழந்தைகள் போலியோவால் பாதிக்கப்பட்டிருந்தனர். ஆனால், ரோட்டரி, உலக சுகாதார நிறுவனம், யுனிசெப், நோய்கள் தடுப்பு மையம், பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை ஆகியவற்றுடன் இணைந்து செயல்பட்டதன் மூலம் இப்போது போலியோ நோய் உலகில்



PRIP *ராஜேந்திர சாபூ, தொழிலதிபர்கள் ராஜஸ்ரீ பிர்லா மற்றும் லஷ்மி மிட்டல் போலியோ நோய் தடுப்பு திட்டம் ஒன்றில்.*

பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய இருநாடுகளைத் தவிர மற்ற நாடுகளில் ஒழிக்கப்பட்டுவிட்டது. உலகெங்கிலும் உள்ள நாடுகளில் 2.5 பில்லியனுக்கும் அதிகமான குழந்தைகளுக்கு போலியோ நோய் தடுப்பு சொட்டு மருந்து வழங்க 1.7 பில்லியன் டாலர்களைச் செலவிட்டுள்ளது மற்றும் எண்ணற்ற தன்னார்வலர்களும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

போலியோ குறித்த ரோட்டரியின் விழிப்புணர்வு நடவடிக்கைகள் அரசாங்கங்கள் அளித்த நன்கொடை மூலம் 7.2 பில்லியன் டாலர் நன்கொடை திரட்ட முக்கியப் பங்காற்றியது.

1977ம் ஆண்டில், சர் கிளெம் ரெனூஃப் RI தலைவராக தேர்ந் தெடுக்கப்பட்ட போது, "ரீடர்ஸ் டைஜஸ்ட்" சஞ்சிகையில் அம்மை நோய் ஒழிப்பு பற்றிய கட்டுரையைப் படிக்க நேர்ந்தது. இதுதான் உலகை எதிர்கொள்ளும் மற்றொரு சவாலாக சந்திக்க அவரைத் தூண்டியது. பல்வேறு சுகாதார நிறுவனங்களுடன் கலந்துரையாடிய பின்னர் போலியோ நோய்தான் உலகில் உள்ள குழந்தைகளுக்கு அச்சுறுத்தலாக இருப்பது அடையாளம் காணப்பட்டது.

1979ம் ஆண்டில் ரோட்டரி, பிலிப்பைன்ஸ் நாட்டுடன் இணைந்து போலியோ நோய்த் தடுப்பு பிரசாரத்தை தொடங்கியது. டாக்டர் ஆல்பர்ட் சபீன் உருவாக்கிய போலியோ சொட்டு மருந்தின் 6 மில்லியன் டோஸ்கள் வாங்கப்பட்டு நாட்டிலுள்ள அனைத்து குழந்தை களுக்கும் வழங்கப்பட்டது. இந்த ஊக்கம் தான் ரோட்டரி இந்த கொடிய நோயிலிருந்து உலகத்தை விடுவிக்க ஒரு திட்டத்தைச் செயல்படுத்த உதவியது. 1988ல் உலக சுகாதார அமைப்பு, போலியோ ஒழிப்புக்கு எதிரான போராட்டத்தில் அனைத்து நாடுகளையும் ஈடுபட வலியுறுத்திய போதிலும், இந்தியாவில் இதற்கான முன்முயற்சிகள் எடுக்கப்படவில்லை. ரோட்டரியின் மூத்த தலைவரும், மாநிலங்களவை பொதுச் செயலாளருமாக இருந்தவருமான மறைந்த சுதர்ஷன் அகர்வால் எடுத்த முயற்சியின் காரணமாக, பலநாடுகள் முன்னேறிய நிலையில் இருக்கையில், இந்தியா ஏன் போலியோ ஒழிப்பில் பின்தங்கியிருக்கிறது என்று நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் சில உறுப்பினர்கள் கேள்வி எழுப்பச் செய்தது.

போலியோ இயக்கத்தை சரியான திசைக்கு கொண்டு செல்வதில் முக்கியப் பங்களிப்புச் செய்ததற்காக தற்போது மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சராக இருக்கும் Dr ஹர்ஷ் வர்தனுக்குத்தான் நாம் நன்றி சொல்ல வேண்டும். போலியோ இல்லாத இலக்கை இந்தியா அடைவதற்கு அது ஒன்றுதான் முக்கிய காரணியாக இருந்தது. அதிக மக்கள் தொகை உடைய சீனா மற்றும் பிரேசில் போன்ற நாடுகள் தேசிய நோய்த் தடுப்பு தினத்தை அனுசரித்து வெற்றிகரமாகச் செயல்படுத்திய போதிலும் 1994க்கு முன்னர் இந்திய அரசின் அதிகாரத்தலைமை அந்த உத்தியை நம்பவில்லை.

ஆனால், டாக்டர் ஹர்ஷவர்தன், 1994ம் ஆண்டு அக்டோபர் 2ம் தேதி தில்லியில் நோய்த் தடுப்பு முயற்சிகளை மேற்கொண்டார். அதற்கு போலியோ "சொட்டு மருந்து திட்டம்" என பெயரிட்டார். ஆனால், அந்த சமயத்தில் சூரத்தில் பிளேக் நோய் வேகமாகப் பரவியது. தில்லியிலும் அது பரவும் என்ற அச்சுறுத்தல் இருந்தது. எனினும் டாக்டர் ஹர்ஷவர்தன் தனது திட்டத்தை மன உறுதியுடன் செயல்படுத்த முடிவு செய்தார். அனைத்து ரோட்டேரியன்களும் பிற பங்குதாரர்களும் இதில் பங்கேற்பதை உறுதிசெய்தனர். ரோட்டேரியன்கள் ஆதரவுடன் தில்லி அரசின் சுகாதாரப் பணியாளர்கள் முகக்கவசம் அணிந்து ஒரே நாளில் 12 லட்சம் குழந்தைகளை போலியோ மற்றும் பிளேக் நோயிலிருந்து பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அப்போது மத்தியில் சுகாதார அமைச்சராக புதிதாக நியமிக்கப்பட்ட A R அந்துலே, இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு உடனடியாக அனைத்து மாநில சுகாதார அமைச்சர்கள் கூட்டத்தை தில்லியில் கூட்டினார். அந்தக் கூட்டத்தில் நான் எனது கருத்துக்களை எடுத் துரைத்தேன். இதன் விளைவாக தேசிய நோய்த் தடுப்பு தினம் (NID) அனுசரிக்க முடிவு செய்யப்பட்டது. போலியோ நோய்தடுப்புக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றம் இதுதான். இதையடுத்து இந்தத் திட்டத்தின் வெற்றியை உறுதிசெய்ய இந்திய அரசு முடுக்கிவிடப்பட்டது. போலியோ சொட்டு மருந்துகளை முழுவீச்சில் விநியோகம் செய்யும் பொறுப்பை ரோட்டரி ஏற்றது. இதற்கான நிதியளிப்புக்கு உலக சுகாதார நிறுவனம் மற்றும் யுனிசெப் பங்காற்றியது. இதைத் தொடர்ந்து மத்தியில் எந்த கட்சி ஆட்சியில் இருந்தாலும் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் ஆண்டுதோறும் தொடர்ந்தது. எனினும் உத்தரப்பிரதேசம் மற்றும் பிகாரில் வதந்தி பரவியதால் சிறு பான்மை சமூகத்தினர் போலியோ சொட்டு மருந்து போட்டுக் கொள்வதில் தயக்கம் காட்டினர். இலவச போலியோ சொட்டு மருந்து குறித்தும் அதன் பயன்கள் குறித்தும் சிறுபான்மை மக்களிடம் விளக்கமாகக் கூறி விழிப்புணர்வை ஏற்படுத்தியதை அடுத்து இடையூறுகளை வென்று திட்டம் செயல்படுத்தப்பட்டது.

2020ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நைஜீரியாவும், ஆப்பிரிக்காவின் அனைத்துப் பகுதிகளும் போலியோ இல்லாததாக அறிவிக்கப்பட்டன. பெரியம்மை நோய்க்குப் பிறகு இரண்டாவதாக ஒழிக்கப்படும் நோய் போலியோவாக இருக்கும். படிப்படியாகத் தடைகளைத் தாண்டி, பின்னடைவுகள் ஏற்பட்ட போதிலும் சற்றும் மனம் தளராமல் இந்திய அரசு, ரோட்டரி மற்றும் இதர பங்கேற்பாளர்களுடன் இணைந்து முன்னோக்கி நகர்ந்தது. விடா முயற்சி, விடாமுயற்சி, விடாமுயற்சி மூலம் எதையும் சாதிக்கலாம் என்பதை பத்தாண்டுகள் நிரூபித்துள்ளன. பிரபலமான கவிஞரும், நாவலாசிரியருமான விக்டர் ஹியூகோ, "விடாமுயற்சியே வெற்றியின் ரகசியம்" என்று சரியாகச் சொன்னார்.

கட்டுரையாளர்
முன்னாள் RI தலைவர்.

©ஹிந்துஸ்தான் டைம்ஸ்.

# வாழ்வியலில் மாற்றத்தை உருவாக்குவதே சேவை! RIPE சேகர் மேத்தா

ரஷீதா பகத்

இந்த ஆண்டு (2021–22) ‘மாற்றத்தை உருவாக்க சேவை’ செய்வதுதான் நோக்கமாக இருக்க வேண்டும் என்று மெய்நிகர் மூலம் நடைபெற்ற சர்வதேச அசெம்பிளி கூட்டத்தில், RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள சேகர் மேத்தா தெரிவித்தார். அடுத்த 17 மாதங்களுக்கு உறுப் பினர்கள் வளர்ச்சி மற்றும் சேவை இரண்டையும் தாரக மந்திரமாகக் கொண்டு செயல்படுமாறு தேர்ந் தெடுக்கப்பட்டுள்ள ஆளுநர்களிடம் அவர் வலியுறுத்தினார். உங்கள் எல்லோருக்கும் தெரியும் நான் தலைவராகப் பதவியேற்கப்போகும் சேகர் மேத்தா. நீங்கள் (DGEs) என்னை பின்தொடர்ந்து செயல்படப்போகும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஆளுநர்கள். தலைமை மற்றும் சேவைக்கான முதல் கட்டத்தில் இன்று நீங்கள் காலடி எடுத்து வைத்துள்ளீர்கள். இனிவரும் 17 மாதங்களும் உங்கள் வாழ்க்கையின் அற்புதமான மற்றும் பலன் தரும் காலங்களாக இருக்கும். இந்த கால கட்டத்தில் நீங்கள் வழிகாட்டுதலுடன் பெரிய கனவுகளைக் காணவேண்டும். நீங்கள் முதலில் உங்கள் இலக்கு களைத் திட்டமிடுங்கள். பின்னர் அதை உறுப்பினர்களிடம் கொண்டு செல்லுங்கள். இதன் மூலம் நாம் ரோட்டரியை வலுப்படுத்தவும், உறுப்பினர்களின் வளர்ச்சியை அதிகரிக்கவும், உலகிற்கு நமது சேவையை விரிவுபடுத்தவும் முடியும்.

வரவிருக்கும் மாதங்களில் அவர்கள் முக்கியப் பங்கு வகிப்பார்கள் என்று குறிப்பிட்ட சேகர் மேத்தா, பெரிய மற்றும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய செயல் திட்டங்களை நிறைவேற்ற முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். உறுப்பினர்கள் சேர்க்கைதான் நம்மிடம் உள்ள மிகப்பெரிய சவால். கடந்த 17 ஆண்டுகளாக நமது உறுப்பினர்கள் எண்ணிக்கை 12 லட்சம் என்ற அளவிலேயே இருக்கிறது. நாம் எல்லோரும் சேர்ந்து இந்த 17 மாதங்களில் ஓர் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும். ரோட்டரியின் வரலாற்றில் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 13 லட்சம் என்ற இலக்குக்குக் கொண்டுசெல்ல நமக்கு இப்போது அருமையான வாய்ப்புகிடைத்துள்ளது. கடந்த 17 ஆண்டுகளில் நாம் எதையும் சாதிக்கவில்லை. இந்த 17 மாதங்களில் சாதிக்க உங்களுக்கு நான் சவால் விடுகிறேன் என்றார்.

இது ஒரு நீண்ட கனவு என்று அவர்கள் சொல்லக்கூடும். அதனால் தான் நான் மிகப் பெரிய கனவு காணுங்கள் என்று சொல்கிறேன். நான் முன்னின்று உங்களுக்கு வழிகாட்ட வேண்டும். நீங்கள் விஷயங்களை பார்க்கிறீர்கள். அதன் பிறகு ஏன் என்று கேட்கிறீர்கள் என்று ஜார்ஜ் பெர்னாட்ஷா கூறுவார். ஆனால், நான் இதுவரை இல்லாத விஷயங்களைக் கனவுகாண்கிறேன். ஏன் செயல்படுத்த முடியாது என்று கேட்கிறேன். இந்த 17 மாதங்களில் ஒவ்வொரு ரோட்டேரியனும் ஒரு உறுப்பினரை கொண்டுவந்து சேர்த்தாலே ரோட்டரி உறுப்பினர்களின் எண்ணிக்கையை 13 லட்சமாக உயர்த்தும் இலக்கை 2022ம் ஆண்டு ஜூலை மாதத்திற்குள் அடைந்துவிட முடியும். அதை நீங்கள் செய்ய முன்மாதிரியாக வழிநடத்த வேண்டும். உங்கள் சங்கங்களின் தலைவர்களும் அதைப் பின்தொடர வேண்டும் என்றார் சேகர் மேத்தா.

‘தன்னலமற்ற சேவை’ என்னும்



*RIPE சேகர் மேத்தா மற்றும் ராஷி*

## பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதில் சிறப்பு கவனம்




*தமது பதவிக்காலத்தில் ரோட்டேரியன்கள், அவர்களின் குழந்தைகள் உடல்நலம், ஊட்டச்சத்து, பள்ளிக்குச் செல்லுதல், சுகாதாரமாக இருத்தல் ஆகியவற்றை முழுமையாகப் பெறுவதற்கு பணியாற்ற வேண்டும். 2021–22ல் சமபங்கு, சேர்த்தல் மற்றும் பன்முகத்தன்மையை அடைவதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். உலகின் பல பகுதிகளிலும் பெண்கள் பின்தங்கி இருப்பதால் அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். குழந்தைகளுக்கான சேவை திட்டங்களை நாம் செயல் படுத்தினாலும், குறிப்பாக பெண்கள் மீது அதிக கவனம் செலுத்தி அவர்களின் முன்னேற்றத்துக்காக பாடுபட வேண்டும்.*

ரோட்டரி மந்திரம் எப்படி தன்னுள் ஏற்பட்டது என்பதை மேத்தா உதாரணத்துடன் விளக்கினார். என்னைப் பற்றி சிந்திப்பதற்கு முன் மற்றவர்களைப் பற்றி சிந்திக்கவும், அவர்களுக்காக சேவை செய்யவும் எனக்கு ரோட்டரி கற்றுக்கொடுத்தது. நான் கொல்கத்தா மகாநகர் ரோட்டரி சங்கத்தில் சேர்ந்த சமயத்தில் எங்கள் சங்கம் நடத்திய முகாமில் பங்கேற்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. மாற்றுத்திறனாளிகளுக்கு செயற்கைக் கால்கள், கைகள் மற்றும் கைகளால் இயக்கப்படும் மூன்று சக்கர வண்டிகளை வழங்கும் முகாம் அது. பயனாளிகள் தங்கள் கைகளால் மூன்று சக்கர வண்டியை இயக்குவதற்கு போதிய வலிமை இருக்கிறதா என்று பரிசோதிக்கும் பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டது. முதல் பயனாளி கால்கள் இல்லாததால் தவழ்ந்து வந்தார். அவரை கைதூக்கி வண்டியில் உட்கார வைக்க வேண்டும். அப்போது உண்மையில் அவர் சுத்தமானவரா, சுகாதாரமானவரா என்ற கேள்வி என்மனதில் எழுந்தபோது நான் சற்று தயங்கினேன். பின்னர் அவருக்கு கைகொடுத்தேன். இரண்டாவது மூன்றாவது நபர் வந்தபோதும் என் மனம் இதையே நினைத்தது. ஆனால், 6வது மற்றும் 7வது பயனாளி வந்தபோது அவர்கள் மீது எனக்கு பச்சாதாபம் உண்டானது. அவர்களின் வலியை, அவர்களின் சவாலை என்னால் உணர முடிந்தது. நான் உடனே என்னைப்பற்றி நினைக்காமல் அவர்களைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தேன். அதிலிருந்து தான் நான் வெறும் உறுப்பினர் என்ற நிலையிலிருந்து ரோட்டேரியன் நிலைக்கு வந்தேன்.

அதன் பிறகு பல்வேறு சேவைத் திட்டங்களில் பங்கேற்றேன். இந்தியாவின் ஊரகப் பகுதிகளுக்கும் பயணமானேன். அப்போதுதான் எனது சகோதரர்களின் அவல நிலையைப் புரிந்துகொண்டேன். அவர்களது வீட்டில் கழிப்பறைகள் இல்லை. குளத்தில் குளித்து அதே தண்ணீரைத் தான் அவர்கள் குடிப்பதற்கும் பயன்படுத்தினர். மரத்தடிதான் அவர்களின் பள்ளி வாழ்க்கை. பள்ளி வளாகச் சுவர்கள்தான் அவர்களுக்கு கரும்பலகையாக இருந்தது. பொது சுகாதார நிலையம் என்பது சில மைல்கள் தொலைவில் இருந்தது. அங்கும் போதுமான வசதிகள் இல்லை.

எங்கள் சங்கம் மூலம் இந்த கிராமங்களுக்கு கழிப்பறை, நல்ல தரமான குடிநீர் உள்ளிட்ட வசதிகள் செய்துதரப்பட்டன. கல்வி முறை மேம்படுத்தப்பட்டது. எங்கள் பகுதி சமூக மக்களுக்கு மட்டுமல்ல, பல்வேறு நகரங்களிலும் இத்தகைய வசதிகள் செய்துதரப்பட்டன. சுயநலமில்லாமல் மனிதநேயத்துடனான பொது நல சேவைக்கு என்னைத் தூண்டியது ரோட்டரிதான். சேவையே எனது வாழ்க்கையாக மாறியது. எனது வாழ்க்கையின் வழிகாட்டும் தத்துவமானது. சேவை என்பது இந்த பூவுலகில் நான் இருக்கும் இடத்துக்கு அளிக்கப்படும் வாடகையாகும். நான் இந்த பூமியில் ஒரு நல்ல குத்தகைதாரராக இருக்க விரும்புகிறேன். பார்வையற்றவர்களுக்கு கண்பார்வை, பசித்தவர்களுக்கு உணவு, வீடற்றவர் களுக்கு வசிப்பிடம் வழங்குவதற்கான வாய்ப்பை நீங்கள் கண்டறிந்துள்ளீர்கள் என்று நான் நம்புகிறேன். இது பெரிய அல்லது சிறிய திட்டங்கள் மூலமாக இருந்திருக்கலாம். ஆனால், அளவைவிட சேவைதான் இதை வரையறுக்கும் என்று குறிப்பிட்டார்.

காந்திஜியின் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தை மேத்தா உதாரணமாகக் குறிப்பிட்டார். ஒரு முறை காந்தி, ரயில் பயணம் மேற்கொண்டபோது அவரது கால்

செருப்புகளில் ஒன்று தவறி கீழே விழுந்துவிட்டது. உடனே அவர், தனது மற்றொரு செருப்பையும் கீழ போட்டு விட்டார். அவரது நண்பர் இதற்கு காரணம் கேட்டார். கீழே விழுந்த ஒரு செருப்பை கண்டெடுக்கும் ஒருவர் அதை மட்டும் வைத்துக் கொண்டு என்ன செய்வார்? அதனால்தான் ஒருவருக்கு பயன்படட்டுமே என்றுதான் மற்றொரு செருப்பையும் கீழே போட்டேன் என்றாராம் காந்திஜி. இதுதான் சேவைக்கான உறுதியான அணுகுமுறை. ஆயிரக்கணக்கான பள்ளிகள், நூற்றுக்கணக்கான மருத்துவ மனைகள், வறண்ட கிராமங்களில் குடிநீர் வசதி, கழிப்பறை வசதிகள் செய்துகொடுத்தது, ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கு இதய அறுவைச் சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு சேவைத் திட்டங்களை உலகம் முழுவதும் ரோட்டேரியன்கள் மற்றும் ரோட்ராக்டர்கள் நிறைவேற்றியுள்ளனர். அவர்களின் சேவை பரந்துபட்டது, எல்லையில்லாதது என்றும் மேத்தா குறிப்பிட்டார்.

நேபாளத்தில் செயல்படுத்தப்படும் ஒரு திட்டம் ஆயிரக்கணக்கான



மக்களின் வாழ்க்கையை மாற்றிவருகிறது. ஆப்பிரிக்காவில் செயல்படுத்தப்படும் சுகாதார திட்டத்தால் லட்சக்கணக்கானவர்கள் பயனடைந்துள்ளனர். ஹைட்டியில் நிறைவேற்றப்பட்ட குடிநீர் திட்டத்தின் மூலம் 1 கோடி பேருக்கு பலனளித்துள்ளது. இந்தியாவில் TEACH எழுத்தறிவுத் திட்டம் லட்சக் கணக்கான குழந்தைகளின் வாழ்வில் ஒளியேற்றியுள்ளது.

இன்று நம் உலகில் சேவை அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் அவசரமானதாகவும் உள்ளது என்று குறிப்பிட்ட அவர், உள்நாட்டிலும் வெளி உலகிலும் மக்களிடம் வாழ்க்கை மாற்றத்தை ஏற்படுத்தும், தாக்கத்தை உருவாக்கும் சேவைத் திட்டங்களை DGEக்கள் தயாரித்து அதை பங்குதாரர்களுடன் இணைந்து செயல்படுத்த முன்வரவேண்டும். உங்கள் பதவிக்காலத்தின் முடிவில், உங்கள் தலைமையின் கீழ் நீங்கள் கொடுத்த உத்வேகத்தின் அடிப்படையில் ரோட்டேரியன்களும், ரோட்ராக் டர்களும் அவர்கள் செய்த சேவையின் காரணமாக உலகில் பலரின் வாழ்க்கையை மாற்றியதாக நீங்கள் உணரவேண்டும்.

இதில் முக்கியமானது என்ன வெனில், நாம் மற்றவர்களுக்கு சேவையாற்றும் போதும், அவர் களின் வாழ்க்கையை மாற்றும் போதும் நமது வாழ்க்கை முறையை யும் மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதை மறந்துவிடக்கூடாது.

உள்வரும் மாவட்டத் தலைவர்கள் போலியோ ஒழிப்பு, கோவிட்டை எதிர்த்துப் போராடுவது, தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய திட்டங்களைச் செயல்படுத்துவது, உறுப்பினர்கள் எண்ணிக்கையை இதுவரை இல்லாத அளவாக 1.3 மில்லியனுக்கு உயர்த்துவது ஆகியவற்றை முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்று குறிப் பிட்டார். உங்கள் முன் உள்ள பணிகள் வியப்படையச் செய்யலாம். ரோட்டேரியன்கள் சவால்களை விரும்பி ஏற்பார்கள். ஒரு கப்பல் துறைமுகத்தில் பாதுகாப்பாக இருக்கலாம். ஆனால், அது கடலுக்குள் சென்றால்தான் சிறப்பு. ஒருவரின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான அருமையான வாய்ப்பு நமக்கு கிடைத்துள்ளது. நமது கைகள், இதயங்கள் மற்றும் ஆன்மாக்கள் மூலம் அவற்றை அடையமுடிந்தால் சக்கரம் சுழலும், மாற்றங்கள் உருவாகும். நாம் ஒன்றிணைந்து சக்கரத்தை சுழற்றுவோம் வாருங்கள் என்றார்.■

## இந்தியா மற்றும் நேபாளத்தைச் சேர்ந்த 31 DGEக்கள் அதிர்ஷ்டசாலிகள்

*DGEக்களுக்கு பயிற்சி அளிக்கும் இந்த வருடாந்திர சர்வதேச மாநாட்டுக் கூட்டம் ப்ளோரிடா மாநிலத்தின் ஆர்லாண்டோ நகரில் நடைபெறுவதாக இருந்தது. கோவிட் தொற்று காரணமாக மெய்நிகர் கூட்டமாக நடைபெற்றது. ஆனால், தலைநகர் தில்லியில், 31 DGEக்களும் மேத்தாவின் உரையை, அவரது எண்ண ஓட்டங்களை பெரிய திரையில் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. இவை சேகர் மேத்தா, ராஷி மேத்தா, முன்னிலையில் RI மூலம் ஒளிபரப்பப்பட்டது. இதில் ரோட்டரி இயக்குநர்கள் பரத் பாண்ட்யா,கமல் சங்வி மற்றும் உள்வரும் இயக்குநர்கள் A S வெங்கடேஷ் மற்றும் மகேஷ் கோட்பாகி இதில் பங்கேற்றனர்.*

*இந்த சர்வதேச அசெம்பிளி கூட்டத்தில் மாலை நேரமும், இரவும் மிக ரம்மியமாக இருந்தது. உள்வரும் ஆளுநர்கள் தங்கள் வாழ்க்கைத் துணைகளுடன் இந்திய பாரம்பரியத்தில் வண்ண வண்ண உடைகளுடன் கூட்ட அரங்கிற்கு மேத்தா, ராஷி தலைமையில் இதர தலைவர்கள் மற்றும் அவர்களின் வாழ்க்கைத் துணைகளுடன் அணிவகுத்து வந்தது கண்கொள்ளா காட்சியாக இருந்தது.*

*இந்த கூட்டம் ஆர்லாண்டோவில் நேரிடையாக நடைபெற்றிருந் தால் உள்வரும் தலைவருடன் இந்த 31 பேரும் 500க்கும் மேற்பட்ட DGEக்களுடன் மேடையை பகிர்ந்துகொள்ள வேண்டியிருக்கும். ஆனால், இந்த மெய்நிகர் கூட்டத்தில் மேத்தாவுடன் அவர்கள் சேர்ந்து இருப்பதற்கு கொடுத்துவைத்த அதிர்ஷ்டசாலிகள்.*

# TRF Awards for Rotary Year 2019–20

| Zone - 4 | | |
|---|---|---|
| **Award Category** | **Awardee** | **District** |
| Highest Contribution to Annual Fund, Rank 1 | Harjit Singh Talwar | 3141 |
| Highest Contribution to Annual Fund, Rank 2 | Mohan S Chandavarkar | 3142 |
| Highest Contribution to Endowment Fund, Rank 1 | Harjit Singh Talwar | 3141 |
| Highest Contribution to Polio Fund, Rank 1 | Anish Shah | 3060 |
| Highest per capita APF Contribution to TRF – Rank 1 | Harjit Singh Talwar | 3141 |
| Highest per capita APF Contribution to TRF – Rank 2 | Mohan S Chandavarkar | 3142 |
| Highest Total Contribution to TRF – Rank 1 | Harjit Singh Talwar | 3141 |
| Highest Total Contribution to TRF – Rank 2 | Ravee Dhotre | 3131 |
| Highest Donor Participation (%-wise) | Anish Shah | 3060 |
| 100% Club Participation | Mohan S Chandavarkar | 3142 |
| **Zone - 5** | | |
| Highest Contribution to Annual Fund, Rank 1 | Sameer Hariani | 3190 |
| Highest Contribution to Annual Fund, Rank 2 | Joseph Mathew | 3181 |
| Highest Contribution to Endowment Fund, Rank 1 | Sivanarayana Rao Pandi | 3150 |
| Highest Contribution to Polio Fund, Rank 1 | Chandramohan Govindarajulu | 3232 |
| Highest per capita APF Contribution to TRF – Rank 1 | Sameer Hariani | 3190 |
| Highest per capita APF Contribution to TRF – Rank 2 | Joseph Mathew | 3181 |
| Highest Total Contribution to TRF – Rank 1 | R Madhav Chandran | 3201 |
| Highest Total Contribution to TRF – Rank 2 | Chandramohan Govindarajulu | 3232 |
| Highest Donor Participation* (%-wise) | Zameer Pasha; Sameer Hariani; A Karthikeyan; A K Natesan | 3000, 3190 3202, 2982 |
| 100% Club Participation | Zameer Pasha; A K Natesan; Girish Ratnakar Masurkar | 3000, 2982, 3170 |
| **Zone - 6A** | | |
| Highest Contribution to Annual Fund, Rank 1 | Debashish Das | 3240 |
| Highest Contribution to Endowment Fund, Rank 1 | Kiran Lal Shrestha | 3292 |
| Highest Contribution to Polio Fund, Rank 1 | Debashish Das | 3240 |
| Highest per capita APF Contribution to TRF – Rank 1 | Debashish Das | 3240 |
| Highest Total Contribution to TRF – Rank 1 | Kiran Lal Shrestha | 3292 |
| Highest Donor Participation (%-wise) | Kiran Lal Shrestha | 3292 |
| 100% Club Participation | Debashish Das | 3240 |

## All India Trophies

Nitish Laharry Trophy for All India Highest Total Contribution to TRF — RID 3141

Usha and Raja Saboo Trophy for All India Highest Annual Fund Contribution to TRF — RID 3141

Binota and Kalayan Banerjee Trophy for All India Highest Endowed Fund Contribution to TRF — RID 3141

Highest All India Polio Fund Contribution to TRF — RID 3060



# TRFன் முதல் பெருநிலைத் திட்டமாக, ஜாம்பியா மலேரியா நீக்கம்

ரோட்டரி செய்திக்குழு

உலகுக்கு இப்போது ரோட்டரியன்களுடைய சேவை முன்பு எப்போதையும்விட மிகுதியாகத் தேவைப்படுகிறது என்றார் உள்வரும் TRF அறங்காவலர் தலைவர் ஜான் ஜெர்ம். இந்த ஆண்டு மெய்நிகராக நடைபெற்ற பன்னாட்டுச் சந்திப்பில் அவர் இவ்வாறு பேசினார்.

TRF, இளம்பிள்ளைவாத வைரஸை நீக்குவதன் வழியாக, ரோட்டரி அமைதி மையங்களின்மூலம் அடுத்த தலைமுறை அமைதி மற்றும் முரண்களைத் தீர்த்தல் வல்லுனர்களுக்குப் பயிற்சியளிப்பதன் வழியாக, அல்லது, மாவட்ட மற்றும் பன்னாட்டு நல்கைகளின் வழியாக என்று பல வழிகளில் நல்லதைச் செய்ய நம் அனைவருக்கும் உதவுகிறது என்று உள்வரும் ஆளுநர்களுக்கு நினைவுபடுத்திய அவர், பன்னாட்டு நல்கைகளின் வழியாக ரோட்டரியன்கள் உலகெங்குமுள்ள உள்ளூர்ச் சமூகங்களின் தேவைகளை நிறைவுசெய்கிறார்கள் என்றார். ஜூலை 1, 2021ல் தொடங்கி, சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் திட்டங்களுக்கு ஆதரவளித்து நிதி வழங்கும் பன்னாட்டு நல்கைகளுக்கான விண்ணப்பங்களை ரோட்டரி அறக்கட்டளை பெற்றுக்கொள்ளும்.

இதன்மூலம், இந்த ரோட்டரி ஆண்டுக்கு உண்மையில் கணக்கிடப் பட்டதைவிடக் கூடுதலாக $4.4 மில்லியன் பன்னாட்டு நல்கை வழங்கல்களுக்கு வழங்கப்படுகிறது. அடுத்த ஆண்டுக்கு, உலக நிதிப் பொருத்தங்களிலும் நாங்கள் பல மாற்றங்களைச் செய்துள்ளோம், இதன் மூலம், பன்னாட்டு நல்கைகளுக்குக் கிடைக்கும் தொகைநீட்டிக்கப்படும்.

எதிர்வரும் ஆண்டில், ரோட்டரியின் வீச்சை விரிவாக்குவதற்காக TRF மூன்று முக்கியத்துவங்களை அமைத்துள்ளது என்று ஜெர்ம் குறிப்பிட்டார்.

நம்முடைய முதல் முக்கியத் துவத்தை அனைவரும் அறிவார்கள், இளம்பிள்ளைவாதத்தை நீக்குதல்.

நம்முடைய இரண்டாவது முக்கியத்துவம், ஆண்டு நிதி மற்றும் போலியோப்ளஸ்ஸுக்கான பங்களிப்புகளை மிகுதியாக்குதல், 2025க்குள் $2.025 பில்லியன் நன்கொடை நிறுவல் நிதியை அமைத்தல். இதற்காக, நாம் $410 மில்லியன் என்கிற விரிவான நிதி திரட்டல் இலக்கை அமைத்துள்ளோம்.

**இந்த இலக்குகள் இவ்வாறு பிரிக்கப் படுகின்றன:**

- போலியோப்ளஸ்ஸுக்கு $50 மில்லியன், பின்னர் கேட்ஸ் அறக்கட்டளை இதற்கு இணையான இருமடங்குத் தொகையை வழங்கும், மொத்தம் $150 மில்லியன் ஆகும். ஒவ்வொரு சங்கமும் வெறும் $1,500ஐப் பங்களித்தாலே இந்த இலக்கைத் தாண்டிவிடலாம். DDFயிலிருந்து 20 சதவிகிதத்தைப் பங்களிக்கும்படி தங்களுடைய மாவட்டங்களை ஊக்குவித்தால், தலைமைப்பண்பும் கிடைக்கும், இந்தத் திட்டத்துக்கான வேகமும் அமையும்.
- ஆண்டு நிதிக்கு $125 மில்லியன். ஆண்டு நிதிக்கான ஒவ்வொரு ரோட்டரியனும், ஒவ்வோர் ஆண்டும்" என்கிற முழக்கத்தில்

அமைந்திருக்கிற ரோட்டரியின் வலுவான கொடைப் பண்பாட்டைப் புதிய உறுப்பினர்களுக்கு அறிமுகப்படுத்தவேண்டும்.

- Endowment Fundக்கு $95 மில்லியனைத் திரட்டுகிற இலக்கும் உள்ளது.
- அதன்பிறகு, பிற முழுமையான பரிசுகளுக்கு $40 மில்லியன்.

TRFன் மூன்றாவது முக்கியத்துவம், நல்கைகளின் அளவிடக்கூடிய தாக்கத்தை மேம்படுத்துதல். போலியோப்ளஸ் உறுதியளிப்புகளின் தாக்கம் தெளிவாக இருந்தபோதும், நம்முடைய மற்ற திட்டங்களின் தாக்கத்தை எண் வடிவில் கணக்கிடும் அடுத்த நிலைக்கு நாம் நகரவேண்டும்.

இந்த முக்கியத்துவத்தை மனத்தில் கொண்டு, இந்த ரோட்டரி ஆண்டில் பெருநிலைத் திட்டங்கள் (Programme of Scale) அறிமுகப்படுத்தப்பட்டன. இது, நம்பிக்கை அளிக்கிற, ரோட்டரியன்களால் வழிநடத்தப் படுகிற, சான்று அடிப்படையிலான, மாற்றத்தை உண்டாக்குவதில் ஏற்கெனவே வெற்றியை நிரூபித்துள்ள திட்டங்களுக்கு நிதியளிக்கும் திட்டம் ஆகும். இந்த நல்கைகள் மூன்று முதல் ஐந்து ஆண்டுகளுக்குத் தொடரும் நீண்ட காலச் செயல்பாடுகளை ஆதரிக்கின்றன. முதல் பெருநிலைத் திட்டப் பெறுநர், ஜாம்பியா மலேரியா நீக்கத் திட்டம்.

இந்தத் திட்டம், ஜாம்பியாவிலுள்ள இரண்டு மாகாணங்களில் இருக்கும் 10 இலக்கு மாவட்டங்களில் மலேரியா நிகழ்வை 90 சதவிகிதம் குறைக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது, வாஷிங்டன், சியாட்டிலுக்கு அருகிலுள்ள ஃபெடரல் வே ரோட்டரி சங்கத்தால் வழிநடத்தப்படும் இந்தத் திட்டத்துக்காக RI பல ஆப்பிரிக்க மற்றும் பன்னாட்டுக் கூட்டு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுத்தும். TRFன் பங்களிப்பு $2 மில்லியனாகும், மற்றவர்கள் $4 மில்லியன் பங்களிப்பார்கள், ஆக, இந்தத் திட்டத்துக்கான மொத்தச் செலவு $6 மில்லியன். இந்தத் திட்டம் 1.3 மில்லியன் மக்களைச் சென்றுசேரும்.

ஜாம்பியாவில் நோய் மற்றும் மரணத்துக்கான ஒரு முன்னணிக்காரணமாக மலேரியா உள்ளது. ரோட்டரியும் நம் கூட்டு நிறுவனங் களும் அதை மாற்றவுள்ளார்கள்.■

Rotary PEOPLE OF ACTION

# டில்லியில் ஒரு பள்ளிக்கு ரோட்டரியின் மின்னனு கல்வி வசதி

ரோட்டரி செய்திக்குழு

RC டில்லி பஞ்சஷிலா பார்க், RID 3011 தானா கேர் ஃபவுன்டேஷன் என்னும் நிறுவனத்துடன் இணைந்து தில்லி ஷாப்பூர் என்னும் இடத்திலுள்ள MCD பெண்கள் பள்ளியில் ஒரு மின்னனு கல்வி வசதியை ஏற்படுத்தியுள்ளது. இது 250 மாணவர்களுக்கு பயன்படும். இச்சங்கத்தின் CSR-TRF தலைவர் அவினாஷ் காந்தி மற்றும் தொழிற்கல்வி இயக்குனர் Y K கபூர் தலைமையில் இந்த திட்டத் செயலாக்கப்பட்டது. சங்கத்தின் துணைத்தலைவர் Dr சரோஜ் சாகரின் பேரன் பரக்யத் கர்ணா பள்ளியிற்கு 10 மென்பொருளுடன் கூடிய கணினிகளை வழங்கினார்.

DGE அனுாப் மிட்டல் மற்றும் DGN அஷோக் கன்டூர், சங்கத்தலைவர் அனில் சஹனி முன்னிலையில் துவக்கி வைத்தனர்.■



(L to R) *தானா கார்ப்பரேஷன் CSR தலைவர் ராகேஷ் சிங், DGE அனூப் மிட்டல், DGN அஷோக் கன்டூர் மற்றும் சங்கத்தலைவர் அனில் சஹானி.*

# கோவாவில் டகோஜுக்களின் சமூக நலத்திட்டங்கள்

ரஷீதா பகத்

இது 44,000 புத்தகங்களின் பயணத்தை பற்றிய கண்கவர் கதை. உண்மையில் இந்த புத்தகங்கள் அமெரிக்காவின் தொலைதூரத்தில் உள்ள அட்லாண்டாவிலிருந்து கடல் மார்க்கமாக தூத்துக்குடி துறைமுகம் வரை பயணித்தது. அங்கிருந்து சாலை வழியாக பெங்களூரைச் சென்றடைந்தது.

RID 3190க்கு உட்பட்ட பெங்களூர் ஆர்சிட்ஸ் ரோட்டரி சங்கத்தின் தலைவராக ரவிசங்கர் டோக்ஜு இருந்தபோது இது தொடங்கியது. மறைந்த முன்னாள் குடியரசுத்தலைவர் A P J அப்துல்கலாமின் நெருங்கிய நண்பரும் அட்லாண்டாவைச் சேர்ந்தவருமான டாக்டர் விஜயராகவன், ரவிசங்கர் டோக்ஜுவுக்கு அறிமுகமானார்.

உலகில் எல்லோரும் கல்வி அறிவு பெற வேண்டும், கல்வி அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்ற கலாமின் கனவை நனவாக்கும் வகையில் ராகவன் செயல்பட்டு வருகிறார். இதற்காக We Serve Foundation என்ற அமைப்பை உருவாக்கியுள்ளார்.

இனி இந்தியாவுக்கு வருவோம். 2018ம் ஆண்டு ரவிசங்கர் டகோஜு, தனது சங்கத்தின் முக்கியத் திட்டமான 126 ரோட்டரி மகிழ்ச்சிப் பள்ளிகளை உருவாக்குவதில் ஈடுபட்டார். எழுத்தறிவு இயக்கத்தில் புத்தகங்களும் ஒருங்கிணைந்த பகுதியாகும் என்பதையும் அவர் உணர்ந்துகொண்டு செயலாற்றி வருகிறார். எனவே டகோஜுவும் அவரது மனைவி பவுலா இருவரும் தங்களின் சொந்த சேவை அமைப்பான பவுலா டகோஜு ரவிசங்கர் அறக்கட்டளை மூலம் இந்த புத்தகங்களை அட்லாண்டாவிலிருந்து கப்பல் மூலம் இந்தியா கொண்டுவரும் பணியை மேற்கொண்டனர். இதற்கான செலவு தொகை ரூ.8 லட்சத்தையும் அவர்கள் ஏற்றுக்கொண்டனர்.

இந்த புத்தகங்கள் நன்மை தரும் வகையில் பயன்பட வேண்டும்,



*RC பெங்களூர் ஆர்ச்சட்ஸ் முன்னாள் தலைவர் ரவிசங்கர் டகோஜு மற்றும் அவர் மனைவி பவுலா DG சங்கராம் பாட்டில் முன்னிலையில் RC பனாஜி தலைவர் கார்லிடோ மார்டின்ஸை 10,000 புத்தகங்கள் மத்திய நூலகத்திற்காக நன்கொடையாக அளித்ததற்கு கௌரவிக்கின்றனர்.*

அதிலுள்ள விவரங்கள் கல்வி அறிவை வளர்க்கும் விதத்திலும் வாழ்க்கையை வளமாக்கும் விதத்திலும் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் பெங்களூரிலிருந்து இந்த புத்தகங்கள் டகோஜு-பவுலா தம்பதிகள் மூலம் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப் பட்டன.

இந்த தம்பதியினர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ரோட்டரி அறக்கட்டளைக்கு ரூ.100 கோடி நன்கொடையாக வழங்கியது இந்தியாவில் மட்டுமல்ல, உலக அளவில் பேசப்பட்டது. அவர்கள் தங்களின் கனவுத்திட்டமான மணிப்பூரில் பள்ளியும், நூலகமும் கட்டி வருகின்றனர். இவர்கள் தங்களிடம் உள்ள 5,000 புத்தகங்களை மணிப்பூரில் உள்ள சங்கை கிராமத்திற்கு அனுப்பியுள்ளனர். இவற்றை அந்த மாநிலத்தில் டோகோஜுவின் திட்டங்களுடன் கூட்டு சேர்ந்துள்ள சன் பேர்டு அறக் கட்டளையின் சோனால் சேதி யால் பெறப்பட்டுள்ளன. இவை பின்னர் பல்வேறு நூலகங்களுக்கு விநியோகிக்கப்பட உள்ளன. இதேபோல RID 3190க்கு உட்பட்ட பெங்களூரு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பல பள்ளிகள், அனாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள் மற்றும் பிற நூலகங்களுக்கு 25,000 புத்தகங்கள் வழங்கப்பட்டன.

மீதமுள்ள 11,500 புத்தகங்களை வழங்குவதற்கான சரியான இடத்தை தேடிவந்த டகோஜு, RID 3170ன் முன்னாள் மாவட்ட ஆளுநர் ஜோர்ஸன் பெர்னாண்டஸிடம் தொடர்பு கொண்டார். 1963 ஜனவரியில் கோவாவில் முதல்முதலாக தொடங்கப்பட்ட பனாஜி ரோட்டரி சங்கத்தின் உறுப்பினரும், RID 3170ன் DGE கௌரிஷ் தோண்ட் உடன் பெர்னாண்டஸ் தொடர்பு கொண்டார். இதையடுத்துப தோண்ட், டகோஜுவுடன் தொடர்புகொண்டு பேசி, தாராள மனதுடன் நீங்கள் தர முன்வந்துள்ள புத்தகங்களை நான் வாங்கிக்கொள்கிறேன். கோவா மக்கள் படித்தவர்கள் மட்டுமல்ல, புத்தகங்களை வாசிப்பதில் மிகுந்த ஆர்வம் உள்ளவர்கள் என்று கூறினார்.



கோவா முதல்வர் பிரமோத் சாவந்த் மத்திய நூலகரிடம் புத்தகங்களை அளிக்கிறார்.

பனாஜி ரோட்டரி சங்கத்தின் தலைவரும் இந்த திட்டத்தை வரவேற்றார். இதையடுத்து புத்தகங்களை பனாஜி மத்திய நூலகத்தின் மூலம் விநியோகிக்க பரஸ்பரம் ஒப்புக்கொள்ளப்பட்டது. பனாஜி சங்கத்தின் 59வது நிறுவன தினமான ஜனவரி 30ஆம் தேதி, RID 3170ன் DG சங்கராம் பாடீல் முன்னிலையில், சங்கத்தின் கௌரவ உறுப்பினரும் கோவா முதல்வருமான பிரமோத் சாவந்த் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பனாஜி மத்திய நூலகரிடம் இந்த புத்தகங்கள் வழங்கப்பட்டன.

நன்கொடையாகப் பெறப்பட்ட 10,500 புத்தகங்களும் மாநிலம் முழுவதும் உள்ள 11 அரசு நூலகங்கள் மற்றும் சேவை நிறுவனங்கள் நடத்தும் 140 நூலகங்களுக்கும் பிரித்து விநியோகிக்கப்படும் என்றார்.

டகோஜு பின்னர் ரோட்டரி நியூஸிடம் தெரிவிக்கையில், கோவாவில் தமது அறக்கட்டளை மேலும் இரண்டு திட்டங்களைச் செயல்படுத்த இருப்பதாக முதல்வரிடம் உறுதியளித்ததாகக் கூறினார். முதல் திட்டத்தை PDG பெர்னாண்டஸ் மற்றும் கன்கோலிம் ரோட்டரி சங்கத்துடன் இணைந்து நடத்தப்போவதாக அவர் மேலும் கூறினார். கைதிகளின் திறனை மேம்படுத்துவது இதன் நோக்கம். சிறையில் இருப்பவர்கள் பெரும்பாலும் திருடர்களாக இருக்கிறார்கள். இதற்கு காரணம் அவர்களுக்குத் தெரிந்தது திருட்டுத் தொழில்தான். சிறையில் இருந்ததால் அவர்கள் சமூகத்தால் ஒதுக்கிவைக்கப்படுவார்கள். எனவே நாங்கள் முதல்வரின் தொகுதியில் உள்ள மத்திய சிறையில் திறன் வளர்ப்பு மையத்தை உருவாக்கி சிறைக்கைதிகளுக்கு கோப்பு அட்டைகளைத் தயாரிக்கும் பயிற்சி அளிக்கப்படும். அவர்கள் தயாரிக்கும் கோப்பு அட்டைகளை வாங்கிக் கொள்வதாகவும் உறுதியளித்துள்ளோம். கைதிகள் தண்டனைக்காலம் முடிந்து சமூகத்தை நாடிச் செல்லும்போது அவர்கள் தொழில் செய்து வாழ்க்கை நடத்த இது பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறோம்.

அரசுடன் இணைந்து முதியோர் இல்லம் கட்ட ஒப்புக் கொண்டதாகவும் மேலும், ஒரு ஏக்கர் நிலத்தை நன்கொடையாக அளிக்க இருப்பதாகவும் டகோஜு தெரிவித்தார். எங்கள் அறக்கட்டளை, RID 3170 மற்றும் பனாஜி ரோட்டரி சங்கத்துடன் இணைந்து முதியோர் இல்லம் கட்டுவோம். இதற்கான அடிக்கல் நாட்டு விழா RIPE சேகர் மேத்தா, DGE கௌரிஷ் தோண்ட் ஆகியோர் முன்னிலையில் வருகிற ஜூலை மாதம் நடைபெறும் என்றும் டகோஜு குறிப்பிட்டார்.■

# தில்லியில் சர்வதேச மாநாட்டில் RIPE மேத்தாவுடன்




**மேலே:** *பாரம்பரிய உடையில் 2021–22 வருட மாவட்டத் தலைவர்கள்.*

**கீழே:** RIDE A S *வெங்கடேஷ்,* RID *கமல் சங்வி மற்றும்* RIPE *சேகர் மேத்தா.*

**வலது:** (இடமிருந்து) RIDEs *மகேஷ் கோட்பாகி,* A S *வெங்கடேஷ் மற்றும்* PDG *ரவி வட்லாமணி.*





# DGEக்கள்











மேலிருந்து: (இடமிருந்து) TRF *அறங்காவலர் குலாம் வஹன்வதி, மாதவி,* RID *பரத் பாண்ட்யா மற்றும்* PRID *மனோஜ் தேசாய்; ராஷி மேத்தா, சுசேன் நாக் மற்றும்* RIPN *ஜெஃனிபர் ஜோன்ஸ் கணவர் நிக் க்ரேயசிச்; ராஷி,* RID *பரத் பாண்ட்யா மற்றும் மாதவி முன்னிலையில்* RIPE*சேகர் மேத்தா சர்வதேச மாநாட்டை தில்லியில் துவக்கி வைக்கிறார்.*









மேலே: ஊர்வலத்தில் RI தலைவர்கள்.

வலதில்: RIDE A S வெங்கடேஷ் (L), RID 3232 DGE ஸ்ரீதர் மற்றும் புனிதா.







**மேலே — இடமிருந்து:** RID *பாண்ட்ரயாவுடன்* PDG *ரஞ்சன் டிங்ரா;* DGE*க்கள் அவர்களின் துணைவியருடன்;* RIPE *மேத்தாவுடன் அவர் மனைவி ராஷி, மாதவி பாண்ட்யா மற்றும் குழுவினர்.*

**(கீழே) செல்ஃபி நேரம்:** DGE *ராஜேஷ் சுபாஷ்* (3204), *பரிமளாதேவி,* DGE *ஷண்முகசுந்தரம்* (3203), Dr *தீஷ்மா சுபாஷ் மற்றும்* DGE S *பாலாஜி* (2981).






மேலே: RIPE மேத்தா, ராஷி, RID பாண்ட்யா, Dr அமிதா மற்றும் RIDE மகேஷ் கோட்பாகி.

வலதில்: PDG பிரஷாந்த் தேஷ்முக் (3131), RIDE கோட்பாகி, PDGs பீனா மற்றும் ஆஷிஷ் தேசாய். PDG ஜிதேந்தர டிங்ரா (இடதிலிருந்து 2வது) அவர் மனைவி ரீது (வலதில்) DGE அஜய் மதன் மற்றும் சவிதா (3080). PRID மனோஜ் தேசாய் மற்றும் RIDE வெங்கடேஷ்.








படங்கள்: ரஷிதா பகத், வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# RIன் சமத்துவம், பன்முகத்தன்மை, உள்ளடக்கல் கொள்கையில் பங்கேற்றிடுங்கள்

ரோட்டரி செய்திக்குழு



பன்முகத்தன்மை மற்றும் அனைவருக்கும் மதிப்பு ஆகியவற்றுக்கான RIன் உறுதிப்பாட்டில் அனைத்து ரோட்டரியன்களும் பங்கேற்கவேண்டும் என்று RI தலைவர் ஹோல்கர் நாக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2019ல், பன்முகத் தன்மை, சமநிலை மற்றும் உள்ளடக்கல் (DEI) அறிக்கையை ஏற்றுக்கொண்டதன்மூலம் RI வாரியம் ரோட்டரி முழுவதும் பன்முகத் தன்மை மற்றும் உள்ளடக்கலை முன்னெடுத்துச்செல்வதற்கான ஒரு தொலைநோக்கையும் உறுதிப் பாட்டையும் வெளிப்படுத்தியது, அதைத் தொடர்ந்து, சமீபத்தில், DEIஐ ரோட்டரியன்களுடைய பகிர்ந்து கொள்ளப்படும் அனுபவங்களின் பகுதியாக ஆக்குவதற்கான முன்னோக்குகள் மற்றும் செயல்பாடு களை உருவாக்குவதற்காக, தொழில் ஆலோசனைக் குழுவான PwC வல்லுனர்களுடன் உரையாடியது.

ரோட்டரியில் இனவாதம், தற்பாலினர் வெறுப்பு, திருநங்கையர் வெறுப்பு, பாலின அடிப்படையிலான சிந்தனை, வர்க்க அடிப்படையிலான சிந்தனை அல்லது வயது அடிப்படையிலான சிந்தனைகளுக்கு இடம் இல்லை. இது ஓர் அரசியல் நிலைப்பாடு என்று நாங்கள் நம்பவில்லை; மேலும், இந்தப் பிரச்சனைகளை நம்முடைய அமைப்புக்குள் நாம் வெளிப்படையாக விவாதிக்கவேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம்'' என்று நாக் கூறுகிறார்.

பன்முகத்தன்மை என்பது, ரோட்டரியின் மைய மதிப்பீடுகளில் ஒன்று, நம் அமைப்பில் பிரதி நிதித்துவப்படுத்தப்படும் அனுபவங்கள், பண்பாடுகள் மற்றும் முன்னோக்குகளின் மிகப் பெரிய பரப்பும் வகையும் தான் நம் அமைப்பைத் தனித்துவ மாக்குகின்றன.

இதன் இலக்கு, அனைத்து உறுப்பினர்கள் மற்றும் பங்கேற்பாளர் களையும் ஆதரிப்பது, குறிப்பாக, பொதுவாக அமைப்புகளில் குறை வாகவே பிரதிநிதித்துவப் படுத்தப்படும் சமூகங்களிலிருந்து வருகிறவர்களை ஆதரிப்பது. இதன் மூலம், அவர்கள் நம் சங்கங்களை, நிகழ்ச்சிகளை மற்றும் நம்முடைய தலைமைப் பொறுப்பு களைத் தாங்கள் வரவேற்கப் படுகிற, தங்களுடைய வாழும் அனுபவங்களின் அனைத்து அம்சங்களையும் கொண்டாடும் படி ஊக்கு விக்கப்படுகிற இடங்களாக நினைப்பார்கள்.

இந்தப் பயணத்துக்கு நேரம் ஆகும் என்பதும், சவாலான உரையாடல்கள், ஆழமான சுய சிந்தனை மற்றும் கண்டறிதல் மற்றும் வளர்ச் சிக்கான புதிய வாய்ப்புகளுக்கு இது வழி வகுக்கும் என்பதும் எங்களுக்குத் தெரியும். இந்தப்பகிர்ந்து கொள்ளப்பட்ட பயணத்தின் ஒரு பகுதியாக இருப்பதற்கான கூடுதல் வாய்ப்புகளைத் தேடுங்கள். பன்முகத் தன்மை மற்றும் அனைவருக்கும் மதிப்பு ஆகியவற்றுக்கான நம்முடைய உறுதிப்பாட்டை நாம் ஆதரிக்கும் போது என்ன சாத்தியம் என்பதைக் காண்பிக்க நாம் முனைகிற இந்த நேரத்தில், உலகம் முழுவதும் உள்ள நம் உறுப்பினர்களுடைய பங்களிப்பு, கருத்துகள் மற்றும் யோசனைகள் நமக்குத் தேவை என்கிறார் அவர். ■

## STATEMENT ABOUT OWNERSHIP

Statement about ownership and other particulars about *Rotary News* to be published in the first issue of every year after the last day of February

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | Chennai - 600 008 |
| 2. | Periodicity of its publication | : | Monthly |
| 3. | Printer's Name | : | P T Prabhakar |
| | Nationality | : | Indian |
| | Address | : | 15, Sivasami Street<br>Mylapore<br>Chennai 600 004 |
| 4. | Publisher's Name | : | P T Prabhakar |
| | Nationality | : | Indian |
| | Address | : | 15, Sivasami Street<br>Mylapore<br>Chennai 600 004 |
| 5. | Editor's Name | : | Rasheeda Bhagat |
| | Nationality | : | Indian |
| | Address | : | 25, Jayalakshmipuram<br>1st Street<br>Nungambakkam<br>Chennai - 600 034 |
| 6. | Name and address of individual who owns the newspaper and partner or shareholders holding more than one percent of the total capital | : | Rotary News Trust<br>Dugar Towers, 3rd Floor<br>34, Marshalls Road<br>Egmore<br>Chennai - 600 008 |

I, P T Prabhakar, declare that the particulars given are true to the best of my knowledge and belief.

Chennai - 600 008 sd/-
1st March, 2021 P T Prabhakar

# கனவுகளுடன் வாழ்வோம்!

*RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சேகர் மேத்தா, பெரிய திட்டங்களை உருவாக்குவதற்கு பயப்படவில்லை. ஒரு சிறிய குழு இருந்தால்போதும், அவற்றை நிஜமாக்குவதற்கான வழி அவரிடம் உள்ளது.*



ரோட்டரி மாத இதழுக்கு நீண்ட பேட்டி அளித்த சேகர் மேத்தா, கனவு காண வேண்டும் என்பதை அடிக்கடி குறிப்பிட்டார். உடைந்த மனங்களைச் சரிசெய்வது குறித்து கனவு காண்பது, போலியோ இல்லாத உலகை உருவாக்குவது, இந்தியாவில் 2026ம் ஆண்டுக்குள் 95 சதவீத மக்களை எழுத்தறிவு பெற்றவர்களாக மாற்றுவது (நாட்டில் நான்கில் ஒருவருக்கு எழுதப்படிக்கத் தெரியாத நிலை உள்ளது) என பலவிதங்களில் கனவுகாணச் சொல்கிறார்.

ஒரு காரியத்தை எடுத்துக் கொண்டால் அதில் வெற்றிபெறும் அளவுக்கு நாம் பெரிதாகக் கனவுகாண வேண்டும் என்கிறார் சேகர் மேத்தா.

சேவை செய்வதையே நோக்கமாகக் கொண்ட ஒரு வீட்டில் வளர்ந்தவர்தான் சேகர் மேத்தா. அவருடைய பெற்றோர் லயன்ஸ் இன்டர்நேஷனல் சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்தவர்கள். சிறு வயதிலேயே சேவை நிறுவனங்களின் நற்பணிகள் என்ன என்பதைத் தெரிந்துகொண்டவர். நண்பர் சித்தரஞ்சன் சௌத்ரி, அவரை ரோட்டரி உறுப்பினராகுமாறு கேட்டுக் கொண்ட போது, உடனடியாக அதற்கு ஒப்புக் கொண்டார். அவருக்கு அப்போது 25 வயது தான் இருக்கும். ஆனாலும், ரோட்டரிக்குள்ளேயே கூடுதல் பணிகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

பெரியதாக கனவு காண்பது மட்டுமல்லாமல், ஒரு காரியத்தை திறம்படச் செய்வதற்கான சக்தியும் அவரிடம் உள்ளது. Operation Eyesight Universal என்ற அமைப்பின் இயக்குநராக இருப்பவர். Shelter Box அமைப்பின் முன்னாள் அறங்காவலராக இருந்தவர். (2004ம் ஆண்டு இந்திய பெருங் கடலில் சுனாமி ஏற்பட்டபோது பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 500 வீடுகள் கட்டுவதற்கு உதவியவர்.) ஆயிரக்கணக்கான பள்ளிகளில் எழுத்தறிவுத் திட்டத்தைச் செயல்படுத்த முக்கிய காரணமாக இருந்தவர். இந்த நேர்காணலின்போது அவர் இதில் எதையும் குறிப்பிடவில்லை. "நான்" என்பதைவிட "நாங்கள்" என்று கூறுவதையே விரும்புகிறார்.

அவரது குறிக்கோள், மாற்றத்தை உருவாக்க சேவை செய்யுங்கள் என்பதுதான்.

கொல்கத்தா மஹாநகர் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினரான சேகர் மேத்தா, தமது துணைவியார் ராஷி மேத்தா அருகில் அமர்ந்திருக்க, தமது கொல்கத்தா வீட்டிலிருந்து ரோட்டரி இதழின் தலைமை ஆசிரியர் ஜான் ரெஸாக் மற்றும் மூத்த எழுத்தாளர் டயானா ஷுபெர்க் ஆகியோருடன் கடந்த நவம்பர் மாதம் மெய்நிகர் மூலம் நேர்காணலில் பங்கேற்றார்.

**கேள்வி:** ரோட்டரி உறுப்பினர் என்ற முறையில் குறிப்பிடத்தக்க ஒன்றை சாதிக்க முடியும் என்பதை எப்போது நீங்கள் உணர்ந்தீர்கள்?

**பதில்:** வாழ்க்கையில் எதையாவது சாதிக்க வேண்டும் என்று எனது உள்மனது கூறிக்கொண்டே இருந்தது. நண்பர் ஒருவர், நீங்கள் ரோட்டரியில் சேர விருப்பமா என்று கேட்டதை அடுத்து 25 வயதில் நான் ரோட்டரி சங்கத்தில் உறுப்பினரானேன். முதல் மாதத்திலேயே விளம்பரங்கள் வாங்கி ஒரு மலர் தயாரிக்கும் பொறுப்பு எனக்கு தரப்பட்டது. அதை எப்படிச் செய்வது என்றுகூட எனக்குத் தெரியாது. என்னை கேட்டுக் கொண்டார்கள். நான் சரி என்று சொல்லிவிட்டேன். பலர் எனக்கு உதவ முன்வந்தனர். மலரும் வெற்றிகரமாக அமைந்தது. அதன் மூலம் அதிக நிதி திரட்ட முடிந்தது.

சில நாட்களுக்குப் பிறகு மாற்றுத்திறனாளிகளுக்கு செயற்கைக் கால்கள், கைகள் மற்றும் மூன்று சக்கர வண்டிகள் வழங்கும் முகாம் நடந்தது. ஒவ்வொருவருக்கும் ஒரு வேலை தரப்பட்டது. மூன்று சக்கர வண்டி பெறும் மாற்றித்திறனாளி, அதை ஓட்டிச் செல்லும் அளவுக்கு அவரது கைகள் வலிமையாக இருக்கிறதா என்று தீர்மானிக்கும் பொறுப்பு எனக்கு தரப்பட்டது.

முதல் நபராக வந்தவர், நடந்து வரவில்லை, தவழ்ந்தபடியே வந்தார். அவர் எழ முற்பட்டபோது நான் அவர் கையைப்பிடித்து தூக்கிவிட்டேன். உண்மையில் நான் அவரது கைகளைத் தொட விரும்பவில்லை. அவர் அழுக்கு படிந்தவராக இருந்தார். ஆனாலும், நான் அவரை தொடவேண்டியிருந்தது. நான்காவதாக வந்த நபர் ஒரு தொழுநோயாளி. ஆனால், எனக்கு வேறு வழியில்லை. நான் ஒவ்வொருவரின் கையையும் பிடிக்க வேண்டியிருந்தது. இப்படி ஏழு அல்லது எட்டு பேரின் கையை பிடித்தவுடன் எனக்குள் இருந்த தயக்கம் மறைந்தது. நான் அவர்களின் நிலையை எண்ணிப் பார்த்தேன். அப்போதுதான் நான் ரோட்டேரியனாக உணர்ந்தேன்.

**கேள்வி:** ரோட்டரியில் நீங்கள் அதிக அளவு பொறுப்பைத் தேடினீர்களா அல்லது அது உங்களைத் தேடிவந்ததா?

**பதில்:** ரோட்டரியில் நான் எதையும் தேடவில்லை, எதையும் வேண்டாம் என்று நான் ஒருபோதும் சொன்னதில்லை. இதைத் தான் நான் எல்லோரிடமும் சொல்லிக்கொண்டே



கெ.ஃபி பொர்கசன்

இருக்கிறேன். ரோட்டேரியன் ஒரு தன்னார்வலர். ஒரு தன்னார்வலர் என்றால் ஏதையும் செய்யவேண்டும். நான் ஏதாவது செய்ய விரும்புகிறேன். வேண்டாம் என்று சொன்னால் என்ன வகையான தன்னார்வலர்?

**கேள்வி:** ரோட்டரியின் தலைவராகப் போகிறீர்கள் என்று தெரிந்ததும் உங்கள் மனநிலை எப்படி இருந்தது?

**பதில்:** இனிமையாக இருந்தது. அதற்காக நான் உற்சாகத்துடன் குதித்தெழவில்லை. பொறுப்புகள் என்னிடம் வரும்போதெல்லாம், அவை சேவை செய்வதற்கு கிடைத்த சிறந்த வாய்ப்பாகவே நான் கருதுகிறேன்.

நான் உங்களுக்கு ஒரு உதாரணம் தருகிறேன். ரோட்டரி இயக்குநராக நான் பரிந்துரைக்கப்பட்டபோது, ஒரு பெரிய பாராட்டு விழாவுக்கு என்னை அழைத்தார்கள். இந்தியாவில் இதெல்லாம் சகஜம். மக்கள் வந்து எனக்கு வாழ்த்து தெரிவித்து பாராட்டினார்கள். அப்போது எனக்கு தர்மசங்கடமாக இருந்தது. என்னை புகழ்வதை நியாயப்படுத்த அசாதாரணமான காரியங்களைச் செய்ய வேண்டும் என்று நினைத்தேன். அன்று இரவு அடுத்த இரண்டு ஆண்டுகளில் நாம் ஏதாவது சாதனை செய்ய வேண்டும் என்று எழுதிக்கொண்டேன். தேவைகள் அதிகம் உள்ள உலகத்திலிருந்து நான் வருகிறேன். எனக்கு பணி செய்ய நிறைய வாய்ப்புகள் கிடைத்துள்ளதாக நினைத்தேன். இந்தியாவில் 50 கண் மருத்துவமனைகளை திறக்க வேண்டும், 5,000 குழந்தைகளுக்கு இதய அறுவைச்சிகிச்சைகள் செய்ய வேண்டும் என்று நினைத்தேன்.

நீங்கள் எதையாவது சாதிக்க விரும்பும்போது சிலர் உங்களைப் பார்த்துச் சிரிக்கக்கூடும். ஆனால், அதைப் பற்றி கவலைப்படாமல் உங்கள் குறிக்கோளைச் செயல் படுத்தினால் வெற்றி நிச்சயம். நான்கண்ட கனவுகளில் பல நிறைவேறியுள்ளன.

**கேள்வி:** ரோட்டரியின் தலைவராக நீங்கள் பதவி வகிக்கும் காலத்தில் தொடர் கனவுகளைக் காணப்போகிறோமா?

**பதில்:** நிச்சயமாக. அது நடக்கவில்லை என்றால், மனதளவில் நான் ஒரு தகுதியான தலைவர் அல்ல. ஆனால், ரோட்டரி இயக்குநராக இருந்தபோது எனது கவனம் இந்தியா மீது இருந்தது. நான் ரோட்டரியின் தலைவராக இருக்கும்போது எனது கவனம் உலகம் முழுவதும் இருக்க வேண்டும். உலகம் முழுவதும் ரோட்டரி ஒரே மாதிரியாக இருக்காது.

நாம் 116 ஆண்டு காலம் பழமைவாய்ந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள். இந்த அமைப்பு 200 நாடுகளில் பரந்துபட்டு அமைந்துள்ளது. மேலும் 1.2 மில்லியன் தலைவர்களையும் கொண்டுள்ளது. ரோட்டேரியன்கள் வெறும் தலைவர்கள் மட்டுமல்ல, ஒரு கொடிய நோயை முற்றிலுமாக ஒழிக்கும் மரபைச் சேர்ந்தவர்கள். தேசிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தும் பெரிய திட்டங்களைத்தான் நாம் செயல்படுத்த வேண்டும். நான் உலகின் மிகப்பெரிய நாடு ஒன்றிலிருந்து வந்திருக்கிறேன். ரோட்டரியின் சேவைகள் இன்று தேசிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இந்தியாவில் பள்ளிக்கல்வியில் ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு டி.வி. சேனல் இருக்க வேண்டும் என்ற யோசனை ரோட்டரியிடம் இருந்தது. அதாவது மூன்றாவது வகுப்பு எனில் 3வது சேனல், ஒன்பதாம் வகுப்பு எனில் 9-வது சேனல் என்ற வரிசையில். பள்ளி யில் மாணவர்கள் படிக்கும் அதே பாடங்கள் ஒளிபரப்பப்படும். ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் இது ரோட்டரியால் சாத்தியமானது என்ற செய்தி உள்ளது. இது ஒவ்வொரு நாளும் 100 மில்லியன் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. 100 மில்லியன் குழந்தைகளும் ரோட்டரியின் பெயரைக் கேட்பதுடன், உலகில் நன்மை செய்யும் அமைப்பு ரோட்டரி என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

ஐந்தரை ஆண்டுகளில் இதைச் செய்வதே எங்கள் திட்டமாகும். ஆனால், கோவிட் 19 இதற்கான வாய்ப்பை வழங்கியது. இதற்கு அரசும் ஆதரவு அளித்தது. ஐந்தரை ஆண்டு காலத்தில் முடிக்க தீர்மானித்த திட்டத்தை ஐந்தரை மாதங்களில் நாங்கள் செய்து முடித்தோம்.

எனவே தேசிய அளவில் எங்களால் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்று நான் கூறும்போது, எங்களால் முடியும், அதற்கான சக்தி ரோட்டரிக்கு உள்ளது.

**கேள்வி:** இந்தியாவில் ரோட்டரியின் குணாதிசயங்கள் என்ன? இவற்றில் எதை ரோட்டரி உலகின் பிறபகுதிகளில் பின்பற்ற வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?

**பதில்:** இதயத்தில் இருந்து சிந்திக்க வேண்டும், மனதில் இருந்து அல்ல. போலியோவை ஒழிப்போம் என்று கூறியவர்களை நினைத்துப் பாருங்கள். அவர்கள் மனதை மட்டும் பயன்படுத்தியிலிருந்தால் அதை ஒரு போதும் செய்திருக்க முடியாது. அது ஒரு வெறியான கனவு. பல தசாப்தங்கள் எடுக்கும் எதையும் நீங்கள் திட்டமிட்டுள்ளீர்களா? இது போன்ற விஷயத்தை கனவு காணும் துணிச்சல் நம்மிடம் இருக்கிறது.

அதே நேரத்தில் ரிஸ்க் எடுக்கவும்


ரஷீதா பகதி

RIPE *சேகர் மேத்தா உடன் ராஷி*

தயங்கக்கூடாது. தோல்விகளைப் பற்றி நான் கவலைப்படுவதில்லை. இரண்டு கனவுகள் மூலம் இரண்டையும் வென்றெடுக்கும் ஒருவரை விட நான் பத்து கனவுகள் மூலம் குறைந்தது அவற்றில் 6 கனவுகளை வென்றெடுப்பவனாக இருப்பதையே விரும்புகிறேன். வெற்றி என்பது சதவீத கணக்கில் அல்ல, உலகிற்கு நாம் என்ன நல்லது செய்யப்போகிறோம் என்பது தான். எனவே பெரியதாக கனவு காண வேண்டும்.

**கேள்வி:** உங்கள் ஆண்டில் நீங்கள் என்ன சாதிக்க விரும்புகிறீர்கள்?
**பதில்:** எனக்கு இரண்டு பரந்த குறிக்கோள்கள் உள்ளன. முதலாவது உறுப்பினர் எண்ணிக்கையை 1.3 மில்லியனாக அதிகரிக்க வேண்டும். கடந்த 20 ஆண்டுகளாக இது 1.2 மில்லியனாக உள்ளது. இதில் மாற்றம் வேண்டும். அதை மாற்றுவது கடினம் இல்லை. ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு புதிய உறுப்பினரை ரோட்டரிக்கு கொண்டுவந்தால் இது சாத்தியமே. நான் உள்பட ஒவ்வொருவரும் இதைச் செய்ய வேண்டும்.

சேவை செய்வதில் நான் மிகுந்த ஆர்வம் கொண்டவன். நமது அமைப்பு மக்களுக்கு சேவை செய்வதன் மூலம் உலகிற்கு நன்மை செய்து வருகிறது. வரும் ஆண்டில் பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதில் கவனம் செலுத்தப்படும். எல்லாக் குழந்தைகளும் கல்வி அறிவுபெற வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். குறிப்பாக பெண் கல்விக்கு கூடுதல் கவனம் செலுத்தப்படும். கழிப்பறைகள் மற்றும் இதர சுகாதார வசதிகள் செய்து தருவதிலும் கவனம் செலுத்து வோம். பெண்கள் அதிக அளவு பாதிப்புக்குள்ளாகிறார்கள். அவர்களை பாதுகாப்பது முக்கியம்.

**கேள்வி:** ரோட்டரி தலைவர் பதவிக்கு ஓர் ஆண்டு என்பது குறுகிய காலமா?
**பதில்:** நான் அப்படி நினைக்க வில்லை. 1.2 மில்லியன் உறுப்பினர்களை ஊக்குவிக்கவும், எண்ணிக்கையை வளர்க்கவும் தலைவர் சிறப்பாகச் செயல்பட முடியும்.

**கேள்வி:** ரோட்டரி தலைவர் பதவி சிறந்த வேலையா?
**பதில்:** ரோட்டரியில் நீங்கள் பெறக்கூடிய சிறந்த வேலை சங்கத்தின் அளவில் தலைவர் பதவி. ரோட்டரி தலைவராக இருந்து செயலாற்றுவதைவிட சங்கத்தின் தலைவர் என்ற முறையில் அதிக வேலைகளைச் செய்ய முடியும். அனைவருடனும் சேர்ந்து வேலை செய்வது மகிழ்ச்சியானதுதான்.

**கேள்வி:** உங்களுக்கான கருப்பொருளை நீங்கள் கொண்டுவந்தீர்களா?
**பதில்:** இல்லை. இது குழு பணி. அனைவரின் கருத்துக்களையும் நான் கேட்பேன். அறையில் 10 பேர் இருப்பார்கள். இது ரோட்டரியில் எனது தத்துவத்தை அப்படியே பிரதிபலிக்கிறது.

**கேள்வி:** எது மிகப்பெரிய சவாலாக இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?
**பதில்:** ஒரே சவால் என்னவென்றால் கொரோனா தொற்றுதான். ஏனெனில் அதுதான் நான் மக்களை நேரிடையாக சந்திப்பதைத் தடுக்கிறது. நான் மெய்நிகர் உலகத்தை நேசிக்கிறேன். ஏனெனில் அதில் பல நன்மைகள் உள்ளன. ஆனால், ரோட்டரி என்பது மக்கள் அமைப்பு. மக்கள் ஒருவரை ஒருவர் சந்திக்க வேண்டும். நான் ஒரு செய்தியை ஒலிநாடாக்கள் மூலம் சொல்வதை விட நேரில் ஒருவரை சந்திப்பதால் ஏற்படக்கூடிய தாக்கம் அதிகமாக இருக்கும். தொற்றுக்காலத்தை கடந்து விரைவில் நாம் ஒருவரை ஒருவர் சந்திப்போம்.

**கேள்வி:** நம்பிக்கையற்ற சூழ்நிலைகள் இருப்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?
**பதில்:** நான் ஒருபோதும் அப்படி நினைக்கவில்லை. இந்த தொற்றுநோயைவிட வேறு எதுவும் நம்பிக்கையற்றதாக இருக்க முடியாது. ஆனால், நாம் இன்னும் ஒருவழியைக் காண்கிறோம். நான் உங்களுக்கு ஓர் உதாரணம் தருகிறேன். எனது சங்கத்தில் 90 உறுப்பினர்கள் உள்ளனர். ஆனால், தொற்றுக்காலத் தில் எங்களது வழக்கமான வாராந்திர சந்திப்பில் 2,400 பேர் இருந்தோம். தொற்று இல்லாமல் நாங்கள் அதைச் செய்திருக்க முடியாது. எனவே நம்பிக்கையற்ற நிலைமை என்பது இல்லை. வாய்ப்புகள் இருப்பதைத்தான் காண்கிறோம்.

© Rotary

# கரூர் போர் நினைவகத்தைப் புதுப்பித்த ரோட்டராக்டர்கள்

V முத்துக்குமரன்

தமிழ் நாட்டிலுள்ள கரூரில் வசிப்போர் தங்களுடைய மிகச் சிறந்த பண்பாட்டை எண்ணிப் பெருமைப்படுவதற்கு ஒரு ரோட்டராக்ட் திட்டம் வழிசெய்துள்ளது. இவை அனைத்தும், RAC கரூர், RID 3000, தன்னுடைய வாராந்திரக் கூட்டங்களில் ஒன்றில் தன்னுடைய ஆண்டுத் திட்டங்களை நிறைவுசெய்துகொண்டிருந்தபோது உண்மையான ஒரு தாக்கத்தை உண்டாக்கக்கூடிய சில கூடுதல் திட்டங்களை நாங்கள் செய்ய விரும்பினோம்.

இதைத் தொடர்ந்து, நான்கு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு, இந்த ஊரிலிருந்து 3கிமீ தொலைவிலிருக்கும் ராயனூரிலுள்ள கரூர் போர் நினைவகத்துக்குச் சென்றது. சிதைந்த இந்தக் கட்டடத்தை நேரடியாகப் பார்த்தது, உடனடியாக, இந்த வளாகம் முழுவதையும் புதுப்பிக்க வேண்டும் என்று நாங்கள் தீர்மானித்தோம்'' என்கிறார் சங்கத் தலைவர் R சபரீஷ்.

இதற்காக, ரோட்டராக்டர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் T அன்பழகனைச் சந்தித்து 2D தள அமைப்பு, மற்றும் திட்ட மதிப்பீட்டை வழங்கினார்கள், புதுப்பித்தல் பணிக்கான முறையான அனுமதியைப் பெற்றார்கள். ரோட்டராக்டர்களில் ஒருவரும் கட்டடக் கலைஞருமான NCB கவியரசு இந்த இடத்தைப் புதிதாக வடிவமைத்து, புதுப்பித்தலுக்கான தொழில்நுட்பக் குறிப்புகளை அளிக்கவும் முன்வந்தார்.



*தமிழ்நாடு போக்குவரத்து அமைச்சர் M R விஜயபாஸ்கர் புதுப்பித்த போர் நினைவகத்தை RAC கரூர் தலைவர் R சபரீஷ் (வலது) மற்றும் மாவட்ட ஆட்சியர் T அன்பழகன் (வலதிலிருந்து 3வது) முன்னிலையில் துவக்கி வைக்கிறார்.*



சபரீஷும் அவருடைய குழுவினரும் ஏசியன் ஃபாப்ரிக்ஸை அணுகினார்கள், அவர்கள் ரூ.3.25 லட்சம் மதிப்புள்ள இந்த ஒட்டுமொத்தத் திட்டத்தையும் தங்களுடைய CSR பிரிவின் கீழ் ஆதரிப்பதற்கு உடனடியாக ஒப்புக்கொண்டார்கள்.

முதன்மைக் கட்டடம், சதுர தூபிக் குவிமாடம் ஆகிய வற்றுக்குப் புதிதாக வண்ணம் பூசப்பட்டது, இங்கிருந்த காட்டுப் புதர்கள், களைகள் மற்றும் குப்பைகள் அகற்றப்பட்டன; இந்த இடத்தை அழகாக்கி மேம்படுத்துவதற்காகப் பூச்செடிகள் வளர்க்கப்பட்டன. அதே நேரம், இந்தத் திட்டத்தின் முதன்மையான சிறப்பு, போர் நினைவகம் எதற்காக அமைக்கப் பட்டது என்ற பின்னணி வரலாற்றை விவரிக்கும் கல்வெட்டுகளைக் கொண்ட ஆறு தூண்கள் இங்கு நிறுவப்பட்டதுதான்.

இரண்டாம் ஆங்கிலோ-மைசூர் போரின்போது (கிபி 1780–1784) பிரிட்டிஷ்காரர்கள் கரூர் கோட்டையைத் திப்பு சுல்தானிடமிருந்து கைப்பற்றினார்கள்; அந்தப் போரில் கொல்லப்பட்ட வீரர்களின் நினைவாகவும், வெற்றிச்சின்னமாகவும் இது எழுப்பப்பட்டது. கரூரின் அந்தப் பழைய மரபுக்கு ஒரு சான்றாக இந்த நினைவகம் நிற்கிறது'' என்கிறார் சபரீஷ். இந்தச் சங்கத்தின் 35வது பதிவு நாளின் போது, புதுப்பிக்கப்பட்ட போர் நினைவகத்தை T N போக்குவரத்து அமைச்சர் M R விஜயபாஸ்கர் தொடங்கிவைத்தார்.■

# கோயம்புத்தூரில் ஒரு கர்மயோகி

ஜெய்ஸ்ரீ

கோவை மக்களுக்கு ஒருவரப் பிரசாதமாக அமைந்துவிட்டது SSS அதாவது சாந்தி சமூக சேவை நிறுவனம். 1986ம் ஆண்டு சாந்தி கியர்ஸ் என்ற நினுவனத்தை தொடங்கிய P சுப்பிரமணியனால் ஏற்படுத்தப் பட்டது தான் SSS மருத்துவ மையம், மருத்துவ பரிசோதனைக் கூடம், கதிரியக்க மையம், இரத்த வங்கி, மருந்தகம், கண் மருத்துவ மையம், பெட்ரோல் விற்பனை நிலையம் மற்றும் பெரிய அளவிலான கேண்டீன் என பலவற்றை செயல்படுத்தி வருகிறது. இது தவிர LPG தகன மையத்தையும் நடத்தி வருகிறது. கோவையில் கண் கண்ணாடி விற்பனை நிலையங்களையும் நடத்தி வருகிறது.

'மனிதகுலத்துக்குச் செய்யும் சேவை' என்பது கடவுளுக்குச் செய்யும் சேவையாகும் என்பது கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் மறைந்துவிட்ட சுப்பிரமணியத்தின் தாரக மந்திரமாக இருந்தது. பெரும் நன்கொடையாளர் மற்றும் பரோபகாரியாக இருந்த சுப்பிரமணியன் மிகவும் பிரபல மானவர். அவர் காலமானபோது, உள்ளூர் மக்களே தங்கள் செலவில் செய்தித்தாள்களில் விளம்பரம் கொடுத்தனர், சுவரொட்டி மூலம் இரங்கல் தெரிவித்ததுடன், அவரது சேவையையும் பாராட்டி விளம்பரம் செய்தனர் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். அந்த அளவுக்கு அவரது சேவை பரந்துபட்டிருந்தது. தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ளாத சாதாரண நபரகாவே அவர் இருந்துவந்தார். விருது, பாராட்டு எதையும் விரும்பாதவர். தாங்கள் கேள்விப்பட்ட, ஆனால், பார்க்காத ஒரு நபரின் மறைவுக்கு மக்கள் துயரத்துடன் அஞ்சலி செலுத்தியதை நான் பார்த்ததே இல்லை என்றார் SSS கேண்டீனில் பணிபுரியும் ஊழியர் ஒருவர்.

கோயம்புத்தூரின் 'கியர் மேன்' சுப்பிரமணியன் மறைந்துவிட்டாலும் அவரது தாரக மந்திரமான சுயநலமற்ற சேவை SSSன் ஒவ்வொரு சேவை யிலும் பிரதிபலிக்கிறது. கேண்டீனில் தினமும் குறைந்தது 300 பேருக்கு இலவசமாக உணவு வழங்கப்படுகிறது. 10,000 பேருக்கு குறைந்த விலையில் உணவு கிடைக்கிறது. நான் இங்கு தான் சாப்பிடுகிறேன். காலையில் முழு சாப்பாடுக்கு ரூ.10ம், இரவு சாப்பிட ரூ.15ம் தான் செலவாகிறது என்றார் ஆட்டோ டிரைவரான இப்ராஹிம் பாஷா. மதிய உணவில் சாதம், சாம்பார், கீரை, கறி, மோர் என முழு சாப்பாடு போடப்படுகிறது. இரவு இட்லி, தோசையுடன் சட்னி, சாம்பார் அல்லது பூரி- சப்ஜி, வடை, பொங்கல் வழங்கப்படுகிறது. ஐந்து ரூபாய்க்கு தேநீரும், 10 ரூபாய்க்கு காபியும் கொடுக்கிறார்கள். கேண்டீனில் வந்து சாப்பிடுபவர்களுக்கு சுத்திகரிக்கப் பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது.

நாங்கள் மைதா, அஜினோ மோட்டோ போன்ற உடலுக்கு கேடு விளைவிக்கும் எந்த பொருளையும் பயன்படுத்துவதில்லை. ராகி, கேழ்வரகு உள்ளிட்ட தானியங் களையே அதிகம் பயன் படுத்துகிறோம் என்றார் கேண்டீன் ஊழியர் ஒருவர். மக்களுக்கு நல்ல சத்தான உணவுகளை வழங்க வேண்டும். ஆரோக்கியமற்ற உணவு களைச் சாப்பிட்டு விட்டு மக்கள் நோய்களுக்கு அதிகம் செலவிடக் கூடாது என்பதில் உரிமையாளர் உறுதியாக இருந்தார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

'கடவுள் எனக்குக் கொடுத்ததை நான் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்' என்று சுப்பிரமணியன் அடிக்கடி சொல்வார் என்று அவருடன்




SSS மருந்தகம்

நெருங்கிப் பழகிய, பெயர் குறிப்பிட விரும்பாத ரோட்டரி உறுப்பினர் ஒருவர் கூறினார். நான் அவரை நன்கு அறிந்திருந்தாலும், அவர், மிகச் சிறந்த மனிதர் என்றாலும் அவரைப் பற்றி ஊடகங்களில் பேசியதில்லை. அவர் அதை விரும்பமாட்டார் என்று எங்களுக்குத் தெரியும். அவர் மறைந்தபின்பும் அதைத் தொடர்கிறோம் என்றார் அவர்.

இதே கருத்து SSS சேவை அமைப்பின் நிர்வாக மேலாளரும் எதிரொலித்தார். வலது கை கொடுப்பது இடது கைக்கு தெரியக்கூடாது என்பார் எங்கள் அய்யா. உங்களது சேவை பற்றி மற்றவர்கள் பத்திரிகைகள் மூலம் தெரிந்துகொண்டால் அவர்களும் இதுபோல பொது சேவை செய்ய உதவியாக இருக்குமே என்று அவரிடம் சிலர் யோசனை தெரிவித்த போது, நான் இதை தனிப்பட்ட முறையில் செய்கிறேன். என்னைப் போல் சமூக சேவை செய்கிறவர்கள் பலர் இருக்கிறார்கள். ஒருவர் மற்றொருவரைப் பார்த்து செயல்பட வேண்டிய அவசியமில்லை என்று கூறிவிட்டார்.

சுப்பிரமணியன், முதல் தலைமுறை தொழிலதிபர். 1962ல் ஜவுளித் துறையின் தேவையை பூர்த்தி செய் வதற்காக கியர்கள் தயாரிக்கும் உற்பத்திப் பிரிவைத் தொடங்கினார். பின்னர் 1972ல் இது 'சாந்தி கியர்ஸ்' என்ற தனியார் நிறுவனமானது. அப்போது அவர் கோயம்பத்தூரின் கியர் மேன் என்று பிரபலமானார். இந்த நிறுவனம் 2012ல் சென்னையைச் சேர்ந்த முருகப்பா குழுமத்துக்கு விற்கப்பட்டது. பின்னர் தனது மனைவியில் பெயரில் தொடங்கிய SSS சேவை நிறுவனத்தின் வளர்ச்சியில் முக்கிய கவனம் செலுத்தத் தொடங்கினார். அவரது நடவடிக்கைகள் உற்பத்தித் துறையில் இருந்தாலும், அவரது சமூக சேவை அவரை சிறந்த ஆளுமையாக மாற்றியது. வர்த்தகம் மற்றும் தொழில்துறையில் அவரின் பங்களிப்பை கௌரவிக்கும் வகையில் அவருக்கு இந்த ஆண்டு பத்மஷ்ரீ விருது வழங்கப்பட்டது.



தூய்மையான கேன்டீன்.

மருத்துவ மையமும் நகரில் உள்ள இதர மருத்துவமனைகளைவிட 75 சதவீதம் குறைவான கட்டணத்திலியே சேவையாற்றி வருகிறது. மருந்து மாத்திரைகளும் சந்தையை விட 30 சதவீதம் குறைவாக விற்கப்படுகின்றன. இவர்கள் நடத்திவரும் தகன மையத்தில் ஏழைகளுக்கு இலவசமாகவும் மற்றவர்களுக்கு குறைந்த கட்டணத்திலும் செயல்பட்டு வருகின்றன. SSS சேவை நிறுவனம் தகுதியான மாணவர்களுக்கு படிப்புச் செலவுக்கு நிதியுதவி அளித்து வருகிறது. அரசு பள்ளிகளுக்கும் ஆதரவாக இருக்கிறது.

இவர்கள் நடத்தி வரும் பெட்ரோல் விற்பனை நிலையத்தில் பெட்ரோல், டீசல் கொள்முதல் விலைக்கே விற்கப்படுகின்றன. அவர் ஒரு கர்மயோகி. ஒவ்வொரு நாளும் அவர் கேண்டீனில் இருப்பார். ஆனால், மக்கள் அவரை யார் என்று அறியாமலே பாராட்டிவிட்டுச் செல் வார்கள். ஆனால், சேவைக் குறைபாடு குறித்து விமர்சனங்கள் எழுந்தால் அதை உடனடியாக சரிசெய்து விடுவார். அவருடைய நிறுவனத்தில் வேலை செய்வதற்கு நான் மிகவும் கொடுத்துவைத்தவன் என்று அங்கு பணிபுரியும் ஒரு ஊழியர் தெரிவித்தார்.

சிங்காநல்லூர் வட்டாரத்தில் வாடகைக்கு வீடு கிடைப்பது கஷ்டம். ஏனென்றால் SSS சேவை நிறுவனத்தின் மூலம் இப்பகுதி மக்கள் அதிகம் பயனடைவதால் யாரும் இங்கிருந்து வீட்டை காலி செய்து வேறு இடத்திற்குச் செல்லமாட்டார்கள். இங்குள்ள மக்கள் ஒவ்வொருவர் மனதிலும் சுப்பிரமணியன் வாழ்கிறார். ஒவ்வொரு முறை சாப்பிடும்போது அவரை நினைத்துக் கொள்கிறார்கள் என்கிறார் ராமசாமி பெருமிதத்துடன். உண்மைதானே!■



கொள்முதல் விலைக்கே விற்கும் பெட்ரோல் விற்பனை நிலையம்.




# இந்திய மருந்துத்துறைக்கு வாய்ப்புகளைத் திறக்கிறது கோவிட்

V முத்துகுமரன்

கோவிட் தடுப்பு மருந்து வழங்கலின்போது அடிப்படை நலப் பராமரிப்புச் சேவைகளில் எந்தச் சமரசமும் இருக்காது, மத்திய அரசு கண்டிப்பான மருத்துவ வழக்கங்கள் மற்றும் நெறிமுறைகளைப் பின்பற்றும் என்றார் GoIன் திட்டமிடல் அமைப்பான நிதி ஆயோக் அமைப்பின் CEO அமிதாப் காந்த்.

நலப் பராமரிப்பு ஊழியர்கள், களத்தில் முன்னணியில் இருக்கும் போராளிகள், காவல்துறை ஊழியர்கள் மற்றும் வீட்டுப் பாதுகாவலர்கள் போன்ற குடிமையியல் பாதுகாப்புப் படையினர், இணை நோய்களைக் கொண்ட, 50 வயதுக்கு மேற்பட்டோர், நோய்களைக் கொண்ட இளைஞர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றார் அவர். மெய்நிகர் ரோட்டரி சந்திப்பில் கோவிட்-19: நோய்ப்பரவல் சவாலைக் கையாளலை நோக்கி முன்னேறுவோம்'' என்ற தலைப்பிலான குழு விவாதத்தில் அவர் இவ்வாறு கூறினார்.

*அப்போலோ மருத்துவமனை நிறுவனர் தலைவர் Dr ப்ரதாப் ரெட்டி*



இந்நிகழ்ச்சியை நெறிப்படுத்திய வொக்ஹார்ட் குழுவின் CEO Rtn ஹபில் கொராகிவாலா இந்தியாவில் நலப் பராமரிப்புச் செலவுசெய்தலை மறு கட்டமைப்பு செய்யவேண்டும் என்றார். இதை எதிரொலித்துப் பேசிய காந்த், GDP செலவில் 2 சதவிகிதத்தைவிடக் குறைவாகப் பொது நலனுக்குச் செலவிடப்படுவதை மாற்றி, அரசாங்கம் அதை 5 சதவிகிதமாக உயர்த்தவேண்டும், குழந்தைகளுடைய ஊட்டச் சத்து நிலையை மேம்படுத்து வதிலும் அதே அளவு கவனம் செலுத்தவேண்டும் என்றார். இத்துடன் ஒப்பிடும்போது, மேற்கத்திய நாடுகள் தங்களுடைய GDPல் 10–12 சதவிகிதத்தை நலப் பராமரிப்புக்குச் செலவிடுகின்றன, அமெரிக்கா 18 சதவிகிதத்தைச் செலவிடுகிறது.

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ் GoI 150,000 நலன் மற்றும் நல மருந்த கங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளது, அதில் 50,000 மருந்தகங்களை அமைத்துள்ளது. உலகின் மிகப் பெரிய ரொக்கமில்லாத காப்பீட்டுத் திட்டமான பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா (PMJJBY) திட்டத்தின் கீழ், 500 மில்லியன் இந்தியர்கள் காப்பீடு பெறுகிறார்கள், இவர்கள் பட்டியலிடப்பட்ட மருத்துவ மனைகளில் இலவசச் சிகிச்சை பெறலாம் என்றார்.

AIIMS இயக்குநர் Dr ரந்தீப் குலேரியா பேசுகையில், கோவிட் தடுப்பு மருந்துகளைப்பற்றிய பன்னாட்டுத் தரவு, UKல் சமீபத்தில் கண்டறியப்பட்ட மாறுபட்ட திரிபு களையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்றார். மாறிய திரிபுகளால் UK தன்னுடைய தடுப்பு மருந்து வியூகத்தை முற்றிலும் மாற்றியமைக்கிற நேரத்தில், நம் நாட்டிலிருக்கும் மிகப் பெரிய மக்கள் தொகைக்கு நோயெதிர்ப்பாற்றலை



*இன்ஃபோசிஸ் செயல் அதிகாரமற்ற தலைவர் நந்தன் நீலகேனி*

அளிக்கவேண்டுமென்றால், நாம் ஒரு திறந்த மனத்துடன் இருக்கவேண்டும், ஸ்புட்னிக், ஜைடஸ் கேடிலா உருவாக்கிக் கொண்டிருக்கும் மருந்து போன்ற பல தடுப்பு மருந்துகளை நாடவேண்டும் என்றார் Dr குலேரியா. வருங்காலத்தில் நோய்ப்பரவல்கள் வராதபடி தடுப்பதற்காக, சாத்தியமுள்ள மாற்றங்களுக்கான மரபணு சார்ந்த கண் காணிப்பில் முதலீடு செய்யவேண்டும்.

### இந்தியா தனித்துவமானது

UKல் நடந்ததுபோல், திடீரென்று நோய்வாய்ப்படுவோர் எண்ணிக்கை உயரக்கூடுமா என்று கொராகிவாலா கேட்டபோது, டாக்டர் குலேரியா அப்படிப்பட்ட சாத்தியம் இந்தியாவில் இல்லை என்றார், ஏனெனில், நாம் நம்முடைய RT-PCR பரிசோதித்தல் விகிதங்களைப் படிப்படியாக உயர்த்தி யுள்ளோம், தேர்தல் நடைபெறவுள்ள மாநிலங்களில் கூட, கோவிட் நோய்

வாய்ப்பட்டோர் எண்ணிக்கை சமீபத்தில் உயரவில்லை என்று கண்டறிந்தோம்.

இந்தியச் சூழல் தனித்துவமானது. ஏனெனில், நம்மிடம் மிகப் பெரிய எண்ணிக்கையில் இளைஞர்கள் உள்ளார்கள், அவர்கள் BCG தடுப்பு மருந்தால் பாதுகாப்பு பெற்றுள்ளார்கள், இப்போது மக்கள் தொகை கூட்டு நோயெதிர்ப்பாற்றலை உருவாக்கிக்கொண்டிருக்கும் என்றார் அவர். ஆனால், தடுப்பு மருந்துகள் போதுமான அளவு மக்களுக்கு வழங்கப்படும் வரை, (சமூக விலகல் மற்றும் முகமூடி அணிதல் போன்ற) கோவிடுக்கு ஏற்ற நடவடிக்கைகளை நாம் தொடரவேண்டும்.

நாடு முழுவதும், குறிப்பாக சிந்து-கங்கைப் பகுதிகளில் மாசைக் குறைக்கப் பல பிரிவு அணுகுமுறை தேவை, ஏனெனில், நுரையீரல் வீக்கத்தால் கூடுதல் இறப்பு ஏற்படும் விகிதத்துடன் இது தொடர்பு கொண்டிருக்கிறது என்றார் அவர்.

### டிஜிட்டல் தளம்

கோவிட் தடுப்பு மருந்துக்கான படிப்படியாக உயர்த்தக்கூடிய ஒரு கட்டுமானத்தை உறுதிசெய்வதற்காக, கோவின் என்ற டிஜிட்டல் இடைமுகச் செயலியை (app) GoI உருவாக்கியுள்ளது, என்றார் இன்ஃபோசிஸின் செயல் அதிகாரமற்ற தலைவர் நந்தன் நிலேகனி.

நோய்ப்பரவலால் இன்ஃபோசிஸின் பெரும்பாலான அலுவலகங்களில் ஒரு கலப்புப் பணியாற்றல் மாதிரி பின்பற்றப்படுகிறது, 240,000 ஊழியர்களைக் கொண்ட இந்நிறுவனத்தில் மூன்றில் ஒரு பங்கு ஊழியர்கள் வீட்டிலிருந்து பணிபுரிகிறார்கள் என்றார் அவர். இந்தியத் தொழில் நிறுவனங்கள் தங்களுடைய அலுவலக இடத்தை மறுவடிவமைப்பு செய்தல், 'புதிய இயல்பு'க்கு ஏற்றபடி தங்கள்



*நிதி ஆயோக் CEO அமிதாப் காந்த்*

ஊழியர்களுக்குப் புதிய திறன்களில் பயிற்சியளிப்பதன்மூலம் கூடுதல் பணியோட்டத்தை நீக்கித் தொழில் செயல்முறைகளை மீண்டும் கண்டறிதல் ஆகியவற்றில் ஈடுபட்டுவருகின்றன என்றார் அவர்.

ஜைடஸ் கேடிலா நலப் பராமரிப்பு நிறுவனத்தின் CMD பங்கஜ் படேல் பேசுகையில், ஒரு DNA தளத்தின் அடிப்படையிலான ஒரு கோவிட் தடுப்பு மருந்தை உருவாக்குவதற்கான மருத்துவப் பரிசோதனைகளில் எங்கள் நிறுவனம் மூன்றாம் நிலையில் உள்ளது'' என்றார், இந்தப் பரிசோதனை நிறைவடைந்ததும், நாங்கள் அரசுக்கு ஆண்டுக்கு 150 மில்லியன் மருந்தளவுகளை வழங்குவோம்.

நம்மிடம் ஒரு மிகப் பெரிய சந்தை இருப்பதால், இந்திய நிறுவனங்கள் தடுப்பு மருந்துகளை உருவாக்கும் என்று உலகம் எதிர்பார்க்கிறது. கோவிடுக்கான சரியான சிகிச்சைச் செயல்முறையும் நமக்குத் தேவை, அதில் நாங்கள் பணியாற்றிவருகிறோம்'' என்றார் அவர்.

### மருத்துவத் தானியங்கியாக்கல்

அப்போலோ மருத்துவமனைகளில் இருக்கும் ஒரு 24x7 உதவித் தொலைபேசி எண், கோவிட் நோயாளிகளுக்கு ஆலோசனைகளை வழங்குகிறது, ஆபத்தில் உள்ள மக்களிடையே அச்சத்தைக் குறைக்க இது உதவியுள்ளது'' என்றார் அதன் நிறுவனர் தலைவர் டாக்டர் பிரதாப் ரெட்டி. இந்த மருத்துவமனைச் சங்கிலியில் கோவிட் நோயாளிகளுக்கென்றுமட்டும் 3,000 விடுதி அறைகளும் 40,000 படுக்கைகளும் உள்ளன என்றார் அவர். 2021ல் நாம் நோய்த் தடுப்பில் கவனம் செலுத்தவேண்டும். மேலும், 4 பில்லியன் மதிப்புள்ள பன்னாட்டு மருத்துவச் சுற்றுலாத்துறையை இந்தியா பயன்படுத்திக்கொள்ளலாம். ஏனெனில், மேற்கு நாடுகளைச் சேர்ந்த பல நோயாளிகள் சென்னை மருத்துவ மனைகளில் குறைந்த விலையில் வழங்கப்படும் தரமான மருத்துவச் சேவைகளில் ஆர்வம் காட்டியுள்ளார்கள்'' என்றார் டாக்டர் ரெட்டி.

உலக அளவில் 80 சதவிகித மரணங்கள் தொற்றாத நோய்களுடன் (NCD) தொடர்புடையவையாக இருக்கும் என்றும், 25–40 வயதுக் குழுவில் உள்ளவர்களிடையே இதய அதிர்ச்சிகள், பக்கவாதங்கள் மற்றும் NCDகள் பொதுவாகி விட்டதால்,



*வொக்ஹார்ட் குழு*
*CEO ஹபில் கொராகிவாலா*

இந்த இறப்பு விகிதத்தின் ஒரு பகுதி இந்தியாவிலும் காணப்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

தடுப்பு மருந்து வழங்கலுடைய பொருளாதார அம்சங்களைப்பற்றிப் பேசிய ஆதித்ய பிர்லா குழுவின் தலைவர் மற்றும் பொருளாதார வல்லுனரான அஜித் ரானடெ, ஒவ்வொரு மருந்தளவும் ரூ.200-300 விலையுடன் 500 மில்லியன் மருந்தளவுகள் வழங்கப்படும். இந்தியப் பொருளாதாரத்துக்கு ரூ.1.4 லட்சம் கோடி நிதித் தூண்டுதல் மதிப்பைக் கொண்டது இது என்றார். ''ஊட்டச்சத்து குறைவாக உள்ள குழந்தைகளுக்கு நாம் ஒரு தம்ளர் பால் தரலாம். உலகிலேயே மிகப் பெரிய அளவில் 180 மில்லியன் டன் பாலை உற்பத்தி செய்யும் இந்தியாவுக்கு இது சாத்தியம்'' தான் என்றார் ரானடெ.

விவாதத்தைத் தொகுத்துப் பேசிய கோரகிவாலா, கோவிடுக்குப் பிந்தைய உலகத்தில் புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளும் நிலையில் இந்தியா உள்ளது என்றார். ஒவ்வோராண்டும் நலப் பராமரிப்புக்கு $4 டிரில்லியன் செலவு செய்த போதும், நோய்ப்பரவல் தாக்கியபோது, உலகம் அதற்குத் தயாராக இல்லை. 50 மில்லியன் மக்கள் இதனால் பாதிக்கப்பட்டார்கள். கடந்த ஒன்பது மாதங்களில் உலகப் பொருளாதாரம் $10 டிரில்லியனை இழந்துள்ளது. ஆனால், இதில் நல்ல செய்தி ஒன்றும் உண்டு, கடந்த காலத்தில் பல நோய்களுக்குத் தடுப்பு மருந்துகளை உருவாக்கப் பல ஆண்டுகள் ஆகின, ஆனால், கோவிடுக்கு நாம் ஓராண்டுக்குள் தடுப்பு மருந்துகளை உருவாக்கிவிட்டோம் என்பதுதான் அந்த நல்ல செய்தி. ■

இது எங்கள்
செயல் திட்டம்

# நம் முக்கியத்துவம்: நாம் நம்முடைய மாறும் திறனைப் பெருக்குகிறோம்

Rotary

## அனைத்து விதமான தலைவர்களையும் வரவேற்கிறோம்

செயல்வீரர்கள் எல்லாப் பின்னணிகளிலிருந்தும், எல்லாச் சமூகங்களிலிருந்தும் வருகிறார்கள். ஆனால், மாற்றத்தின் முன்னணியில் இருக்கும் தலைவர்களுக்காக ரோட்டரி உருவாக்கப்பட்டிருந்தாலும், நாங்கள் கணக்கெடுப்பு நடத்தியவர்களில் வெறும் 35 சதவிகிதத்தினர்தான்*, ரோட்டரி என்பது தங்களைப் போன்ற மக்களுக்கான ஓர் அமைப்பு என்று காண்கிறார்கள். அது நமக்குப் போதாது.

மக்கள் இணைவதற்கான, வளர்வதற்கான மற்றும் மாற்றத்தை வழிநடத்துவதற்கான கூடுதல் வரவேற்பு கொண்ட ஓர் இடமாக நாம் ஆகவேண்டும், அதற்கு நாம் நம்மை அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும். சமூகத்திலும் உலகெங்கிலும் செயல்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தங்களை அர்ப்பணித்துக்கொண்டிருக்கிற நிறுவனங்களுடன் புதிய கூட்டணிகளை மற்றும் சேர்ந்து பணிபுரிதல்களை நாம் நாடுவோம். நாம் வழங்கும் மதிப்பை நாம் உலகுக்குக் காண்பிப்போம், புதிய மக்களை மற்றும் அவர்களுடைய வழிகளை ரோட்டரிக்குள் சேர்த்து உதவுவோம்.

## நாம் என்ன செய்வோம்.

- பன்முகத்தன்மை கொண்ட மக்களுக்குப் பிடிக்கும்படியான பங்கேற்பு மாதிரிகளை உருவாக்குவோம்
- நெகிழ்வுத்தன்மை கொண்ட பங்கேற்பு மாதிரிகளை உருவாக்குவோம்
- உலகெங்கும் நம்முடைய பிணைப்புகளை வலுவாக்குவதற்கு, ரோட்டரி தோழமைகளை ஆதரிப்போம்
- நம்முடைய சமூக ஊடக இருப்பு மற்றும் அணுகுதல் வளங்களை மேம்படுத்துவோம்

## உங்கள் சங்கம் என்ன செய்யலாம்.

**பகிரலாம்**
உங்கள் செயல் வீரர்களுடைய கதைகளை (என் ரோட்டரியில் பிராண்ட் மையத்துக்கு வாருங்கள்)

**ஊக்கப்படுத்தலாம்**
புதுமைச் சிந்தனை கொண்ட சங்கங்கள் மற்றும் நெகிழ்வுத்தன்மை கொண்ட தெரிவுகளை

**அணுகலாம்**
புதிய குழுக்களை, பங்கேற்பாளர்கள் அல்லது கூட்டணிகளுக்காக

**மேம்படுத்தலாம்**
உங்கள் சங்கத்தின் இணையத் தளம் மற்றும் சமூக ஊடகங்களை

* 2015 பொது மக்கள் பன்னாட்டுக் கணக்கெடுப்பு

**மேலும் அறிந்துகொள்ள விருப்பமா?**
முழுச் செயல் திட்டத்தை இங்கு படியுங்கள்: *rotary.org/actionplan*

© Rotary




# உலகளாவிய நீடித்த அமைதி முயற்சியில் ரோட்டரி

கிரண் ஜெஹ்ரா



*ரோட்டரி அமைதி மையங்களின் தலைவர் PRID லாரி லுன்ஸ் ஃபோர்டு*

ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தை உருவாக்கியதில் ரோட்டரிக்கு முக்கிய பங்கு உண்டு என்றார் ரோட்டரி இயக்குநர் பீட்டர் கயில். ஒடிஸி மெய்நிகர் மண்டல கழகக் கூட்டத்தில் நடந்த குழு விவாதத்தில் பேசுகையில் இதைக் குறிப்பிட்டார். 1921ம் ஆண்டு ஸ்காட்லாந்தின் எடின்பர்கில் நடந்த 12வது ரோட்டரி மாநாட்டில் நடந்த சம்பவங்களை அவர் நினைவுகூர்ந்தார். அரசமைப்புச் சட்டத்தில் ரோட்டரி அமைதி மற்றும் நல்லெண்ணத்தை எவ்வாறு மேம்படுத்தி வருகிறது என்பதை குறிப்பிட்டார். 1945ம் ஆண்டு அமெரிக்கா விடுத்த அழைப்பின் பேரில் போரில் ஈடுபட்ட நாடுகள் இடையிலான மோதல்களைத் தீர்க்க உதவும் வகையில் சான் பிரான்ஸிஸ்கோவில் மாநாடு நடைபெற்றது. அப்போது ரோட்டரி தலைவர் ரிச்சர்டு H வெல்ஸ் தலைமை யிலான பதினொரு ரோட்டேரியன்கள் இணைந்து தீர்மானங்களை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றினர். இதையடுத்து பிறந்ததுதான் ஐக்கிய நாடுகள் சபை.

போலியோவை எதிர்த்துப் போராடுவதில் கிடைத்த வெற்றி ரோட்டரிக்கு மிகப்பெரிய நம்பகத் தன்மையை பெற்றுத்தந்துள்ளது. சர்வேதச பிரச்னைகள் எதுவானாலும் அதை ரோட்டரியால் தீர்த்துவைக்க முடியும் என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது என்றார் கயில். போலியோவை ஒழிப்பதில் ரோட்டரியின் பங்கு பற்றி உலகிற்கு தெரியாது என்று நாம் அடிக்கடி புகார் கூறி வந்தோம். முழு உலகமும் அதைத் தெரிந்துகொள்ளத் தேவையில்லை. கொள்கை வகுப்பாளர்களும், சர்வேதச நிறுவனங்களும் அதைத் தெரிந்து கொண்டால் போதுமானது. ஐ.நா. மற்றும் பிற சர்வதேச அமைப்புகளின் முக்கிய கொள்கை வகுப்பாளர்களுடன் இருந்த உறவானது போலியோ ஒழிப்பை முன்னெடுத்துச் செல்ல போதுமானது. இந்த உறவுகளை நாம் ஆழப்படுத்துவதுடன் விரிவுபடுத்தவும் வேண்டும். உலகளவில் அமைதி ஏற்படுத்துவதற்கான முயற்சி ஏதேனும் நடந்தால் அதில் ரோட்டரியின் பங்கு நிச்சயமாக இருக்கும். ஏனெனில் அமைதி என்பது ரோட்டரியின் மரபணுவில் ஊறியது.

ருமேனியாவுக்கான சுவிஸ் தூதர் ஆர்தர் மட்டி பேசுகையில், அமைதி என்பது எங்களது அரசமைப்புச் சட்டத்தின் பிரிக்க முடியாத பகுதி யாகும். இது ரோட்டரியின் மரபணு போன்றது என்று குறிப்பிட்டார். சுவிட்சர்லாந்து ஏன் அமைதியை விரும்புகிறது என்று அவர் விளக்கினார். உலகின் எந்த பகுதி யிலும் வன்முறை ஏற்பட்டால் துயரங்கள் தான் அதிகரிக்கும், நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்துவிடும், அனைவரும் பாதிக்கப்படுவார்கள். அதனால்தான் மக்கள் அமைதியை கட்டெழுப்புவதற்கான வாய்ப்புகளை நாங்கள் உருவாக்கி வருகிறோம் என்றார்.

உலகில் அமைதியை ஏற்படுத்து வதற்கான வழிகளை ரோட்டரி நன்று அறிந்துள்ளது. அமைதியை மேம்படுத்த இந்த வளங்களை எப்படி பயன்படுத்தலாம் என்று நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். ஜெனீவாவில் ரோட்டரி அமைதிக் காவலர்கள் 50 பேரை நாங்கள் வைத்துள்ளோம். ரோட்டேரியன்கள் மற்றும் ரோட்ராக்டர்கள் இணைந்து அமைதி திட்டத்துக்கான 20 சர்வதேச மானியங்களைத் தயாரிப்பதில் இணைந்து செயல்பட்டு வருகின்றனர் என்றார் ஆர்தர் மட்டி.

ரோட்டரி அமைதி மையங்களின் தலைவரான PRID லாரி லுன்ஸ்போஃர்டு, ரோட்டரியின் அமைதித்திட்டங்கள் மரபு வாய்ந்தது. இன்று உலகின் ஏழு மையங்களை உள்ளடக்கிய இந்த திட்டத்துக்கான

வடிமைப்பாளர்களில் ஒருவராக 20 ஆண்டுகளுக்கு முன்பு PRIP ராஜேந்திர சாபூவும் இருந்தார். இதற்காக இந்திய ரோட்டேரியன்கள் பெருமைப்பட வேண்டும். இவற்றின் மூலம் இதுவரை 1,300 பேர் பட்டம் பெற்று 115 நாடுகளில் அமைதி மற்றும் வளர்ச்சிக் காக பணியாற்றி வருகிறார்கள்.

5,6,7 மற்றும் 8 ஆகிய நான்கு மண்டலங்களை பாராட்டிய லுன்ஸ்ஃபோர்டு, அமைதிக்கான உதவித்தொகை பெற தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள 170 பேர்களில் 9 பேர் உங்கள் மண்டலத்தைச் சேர்ந்தவர் கள். இந்தியாவிலிருந்து 4 பேர், நேபாளத்திலிருந்து 3 பேர் இலங்கை யிலிருந்து 2 பேர் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஐ.நா. அமைதி கட்டமைப்பை மறுஆய்வு செய்யும் சுயாதீனமான உறுப்பினரும், அமெரிக்காவுக்கான தான்ஸானிய நாட்டு தூதருமான லிபரட்டாமுலாமுலா, உலகளாவிய அமைதி மற்றும் வளர்ச்சியின் மீட்புக்கான மறு ஆய்வு நடைமுறை களில் உள்ள பலவீனங்கள் மற்றும் இடைவெளிகள் குறித்து பேசினார். போர்கள் நிறைந்த உலகம், எந்த ஒரு நாட்டுக்கும் அல்லது அரசுக்கும் பெரும் சுமையாகவே கருதப்படும்.



RI *இயக்குனர் பிரைன் ஸ்டைல்ஸ்*

இந்த சந்திப்பின் முக்கியத்துவத்தை நான் இங்குதான் காண்கிறேன் என்றார்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்ற நீதிபதியும் ரோட்டரியின் முன்னாள் அறிஞருமான சில்வியா அலிஜாண்ட்ரா பெர்னாண்டஸ் டீ குர்மென்டி பேசுகையில், ஒவ்வொரு முறையும் நாம் அமைதி அல்லது போரைப் பற்றி பேசும்போது அது நம்மிடமிருந்து வெகுதொலைவில் இருப்பதாக நினைக்கிறோம். போர் உண்மையாக இருக்கலாம். அது சண்டையிடுபவர்களுக்கு மட்டுமல்ல, நமக்கும் தான் என்றார்.

PRID பிரைன் ஸ்டைல்ஸ் நிறைவு உரையாற்றுகையில், அமைதி முயற்சியில் ஆர்வமும் அனுபவமும் கொண்ட மூத்த ரோட்டரி தலைவர்களையும், அமைதிக்காக பணியாற்றிய ராஜதந்திரிகளையும் ஒருங்கிணைத்தமைக்காக நிகழ்ச்சியின் அமைப்பாளர் RID கமல் சங்விக்கு நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொண்டார்.■

TRF **உதவியுடன் நற்பணி**

# அஸ்ஸாம் மருத்துவமனைக்கு ரோட்டரியின் இயந்திர மனிதர்கள்

அஸ்ஸாம் CM சர்பானந்த சோணோவால், அஸ்ஸாம் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் முதல்வர் டாக்டர் சஞ்சீப் ககாடியிடம் இரண்டு இயந்திர மனிதர்களை வழங்கினார். நோயாளிகளுக்கு உணவு மற்றும் மருந்தை வழங்கப் பயன்படுத்தப்படும் இந்த இயந்திர மனிதர்களை RC தாக்கா ராயல், RID 3281 ஆதரவுடன் ஒரு பன்னாட்டு நல்கை முன்னெடுப்பின்கீழ் RC திப்ருகர்க், RID 3240 ஆதரித்தது.



*அஸ்ஸாம்* CM *சர்பானந்த சோணோவால் மருத்துவமனை தலைவர்* Dr *சஞ்ஜீப் ககாடியிடம் இயந்திர மனிதர்க்கான* App*ஐ அளிக்கிறார்.*

யந்த்ரபாட் என்று பெயரிடப்பட்ட இந்த இயந்திர மனிதர்கள் IIT-குவஹாத்தியில் உள்ள தொழில்நுட்ப அடைகாத்தல் மையத்தில் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப் பட்டன. இந்தப் பன்னாட்டு நல்கையின்கீழ், வேறு மூன்று மருத்துவமனைகளுக்கு இதேபோன்ற கூடுதல் கருவிகள் வழங்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில் பார்வையாளர்களிடம் பேசிய சோணோவால், ஆத்மநிர்பர் பாரத் திட்டத்தைப்பற்றி விவரித்தார், நோய்ப்பரவலை எதிர்க்கும் நோக்கத்துடன் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் எடுக்கப்படு முன்னெடுப்புகளைப்பற்றிப் பேசினார்.

மனித குலத்துக்கு ரோட்டரியின் சேவைகளை அவர் பாராட்டினார், ரோட்டரியன்கள் தங்களுடைய செயல்பாடு களில் கல்வி, விளையாட்டு மற்றும் பண்பாட்டில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

உணவு பதப்படுத்தலுக்கான ஒன்றிய MoS ராமேஷ்வர் தேலி, மாவட்ட மருத்துவமனைகளுக்குக் கோவிட் உள்கட்டுமானத்தை வழங்கியதற்காக ரோட்டரியைப் பாராட்டினார்.

PDG கல்பனா கௌண்ட் இந்தத் திட்டத்தின் முதன்மைத் தொடர்பு நபராகச் செயலாற்றினார்.■

# டிஜிட்டல் உலகம் மேலும் விரிவாகும்

V முத்துக்குமரன்



பார்க்லேஸ் வங்கி தலைவர் அஷோக் வாஸ்வானி

நோய்ப்பரவல் தாக்கியபிறகு, நீங்கள் முன்பை விடக் கூடுதலான டிஜிட்டல் பணம் செலுத்தல்களைச் செய்கிறீர்களா? வருங்காலத்திலும் அதைத் தொடர் வீர்களா? நீங்கள் உங்களுடைய மொபைல் தொலைபேசிக்கும் கணினிக்கும் தீய மென்பொருள்கள், ஊடுருவல் மற்றும் பிற எலக்ட்ரானிக் மோசடிகளுக்கு எதிராகக் கணினி சார்ந்த பாதுகாப்பு அளித்துள்ளீர்களா? டிஜிட்டல் தொழில்நுட்பங்களில் இந்தியா ஒரு முன்னெடுத்துக்காட்டு நகர்வைக் காண்கிறது. எலக்ட்ரானிக் பரிமாற்றங்கள் நாள்தோறும் இயல்பாகிவிட்டன. அதே நேரம், டிஜிட்டல் பொருளாதாரம் விரிவாகவேண்டுமென்றால், ஒரு நம்பகமான, பாதுகாப்பான மற்றும் நம்பிக்கைக்கு இடமளிக்கும் கட்டுமானத்தை அமைக்கவேண்டும் என்ற சவாலை அரசாங்கம், வங்கிப் பிரிவு, நிதி அமைப்புகள் மற்றும் பணம் செலுத்தல் நிறுவனங்கள் தொடர்ந்து சந்திக்கின்றன என்று மெய்நிகர் ரோட்டரி சந்திப்பின் இரண்டு நிகழ்வுகளில் பங்கேற்ற வல்லுனர்கள் தெரிவித்தார்கள்.

*ஃப்ரான்ஸில் உள்ள அடோஸ் நிறுவனத்தின் தலைமை டிஜிட்டல் அலுவலர் தலைவர் ஃபிலிப் மரெய்னெ*



டிஜிட்டல் தொழில்துறையைப் பற்றிய ஐரோப்பியப் பார்வையை அளித்த ஃபிரான்ஸின் அடோஸ் நிறுவனத்தின் தலைமை டிஜிட்டல் அலுவலர் மற்றும் CSR தலைவர் ஃபிலிப்பெ மரெய்னெ, ஏகப்பட்ட இணையப் பொருள் வாங்கல் வசதிகள் வந்துவிட்டன, நுகர்வோர் ஒரு புதிய, எளிமையான பணம் செலுத்தல் அனுபவத்தை மகிழ்ச்சி யாக அனுபவிக்கிறார்கள். கொரோனா வைரஸுக்குப் பிறகு, மோசடியைக் கண்டறிதல் மற்றும் தடுத்தலுக்காகச் செயற்கை அறிவைப் பயன்படுத்தி டிஜிட்டல் பரிமாற்றங்களின் பாது காப்பு அம்சங்களில் நாங்கள் பல மேம்பாடுகளைச் செய்துள்ளோம் என்றார்.

பன்னாட்டுக் கார்பன் உமிழ்வைக் குறைந்தது 15–20 சதவிகிதம் குறைப்பதில் டிஜிட்டல் தீர்வுகள் ஒரு மிகப் பெரிய தாக்கத்தைக் கொண்டிருக்கலாம் என்றார் அவர்.

டிஜிட்டல் தளங்களில் தரவுகளைப் பரிமாறிக்கொள்ளும்போது நம்பகத் தன்மையையும் நம்பிக்கையையும் உறுதி செய்வதற்கான புதிய தரங்கள் ஐரோப்பாவில் உருவாக்கப் படுகின்றன. அத்துடன், மின் குப்பையைக் குறைப்பதற்காக, தயாரிப்பவர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்களிடையே நெருங்கிய உறவுடன் பொருட்கள் மறுசுழற்சி செய்யப்படுகின்றன என்றார்.

### மாற்றத்தின் ஆண்டு

பல பணம் செலுத்தல் வலைப் பின்னல்கள் மற்றும் வளர்ந்துவரும் புதிய நிதித் தொழில்நுட்பக் கட்டு மானத்தைப் பயன்படுத்தி மிகப்பெரிய வளர்ச்சியை எட்டும் மிகச் சிறந்த வாய்ப்பு, முன்னணி நிறுவனங்கள், தொடக்க நிலை நிறுவனங்கள், நிதி அமைப்புகள் மற்றும் பணம் செலுத்தல் நிறுவனங்களுக்கு உள்ளது என்றார் பார்க்ளேஸ் வங்கியின் CEO அசோக் வாஸ்வானி.

டிஜிட்டல் பொருளாதாரத்தில் நான்கு முக்கியப் பங்குபெறுவோர் உள்ளார்கள்: நுகர்வோர் மற்றும் சிறு தொழில்கள்; அரசாங்கம் மற்றும் கட்டுப்படுத்துவோர்; வங்கிகள் மற்றும் நிதி அமைப்புகள்; மற்றும்

வலைப்பின்னல் நிறுவனங்கள்.

பணத்தைக் கையில் கொண்டு சென்று பயன்படுத்தும் தேவை குறையும்போது, டிஜிட்டல் தளங்களின் வழியாகப் பணத்தின் ஓட்டத் திசைவேகம் பல மடங்கு கூடுதலாகும். ஒரு வசதி நிலையுடன், நாம் மோசடிகள், ஏமாற்றுகளைப்பற்றிக் கவலைப்படவேண்டும், கட்டுப் படுத்துவோர் இதைச் சரிசெய்ய வேண்டும் என்றார் அவர்.

பார்க்லேஸ் வங்கி ஒவ்வொரு பரிமாற்றத்துக்கும் அங்கேயே, அதே நேரத்தில் டிஜிட்டல் ரசீதுகளை வழங்கிவருகிறது. ஒருவர் பொருட்களை வாங்க ஒரு கடன் அல்லது பற்று அட்டையைப் பயன்படுத்தினால், QR குறியீட்டு அடிப்படையிலான ஒரு திரும்ப வழங்கல் செயல்முறையானது, சூப்பர்மார்க்கெட் கடையில் நீங்கள் என்ன வாங்கினீர்கள் என்பதை காண்பிக்கும். இதன் மூலம், நிறுவனங்கள் நுகர்வோருடைய விருப்பங்களையும் சந்தைப் போக்கு களையும் அறிந்துகொள்ளலாம்.

ரொக்கப் பணத்தைக் கையாள் வதில் இருக்கும் அச்சம் மற்றும் தளவாடங்களின் செலவுகள் உயர்ந்து வருதல் ஆகியவற்றால், சமூகத்தின் எல்லாப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் முன்பைவிட இன்னும் விரைவாக டிஜிட்டல் பணம் செலுத்தல்களை ஏற்றுக்கொள்ளவேண்டியிருக்கும் என்றார் சொடெக்ஸோ BRS இந்தியா நிறுவனத்தின் CEO அனீஷ் சர்கார்.

மொபைல் பணம் செலுத்தல் என்பது, டிஜிட்டல் பரிமாற்றங்களின் ஒரு பகுதியாகும், இதுமட்டும் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 60 சதவிகிதத்துக்கு மேல் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதே நேரத்தில், இந்தியாவில் வங்கிகளைப் பயன்படுத்துவோருடைய எண்ணிக்கை மிக மிகக் குறைவு. ஆகவே, நிதித் தொழில்நுட்ப முகவர்கள் இந்த மிகப் பெரிய வளர்ச்சி வாய்ப்பால் பலன் பெறுவார்கள்'' என்றார் சர்கார்.

### வங்கிக் கிளைகள் இனி தேவையில்லை

அடுத்த 5–6 ஆண்டுகளில், வங்கிகள் தங்களுடைய பெரும்பாலான கிளைகளை மூடிவிடும். ஏனெனில், வாடிக்கையாளர்கள் பரிமாற்றங் களுக்காகக் கிளைகளுக்குச் செல்ல வேண்டியிருக்காது. வருங்காலத்தில், தனிநபர் வங்கிச்சேவை என்பது, உங்கள் மொபைல் செயலிகளில் சில பொத்தான்களைத் தொடுவதன் மூலம் செய்யப்படும் என்றார் அவர்.

பல நிதி அமைப்புகளும் வங்கிப் பிரிவும் வாடிக்கையாளர்களுடைய தேவைகளை ஒரு நியாயமான முறையில் கையாள்கின்றனவா, சரிசெய்கின்றனவா என்று கட்டுப் படுத்துவோர் சரிபார்க்கவேண்டும்.

PayTM நிறுவனத்தின் CEO வருண் ஸ்ரீதர், ஏஜிஸ் தரவு அறிவியல் பள்ளியின் CEO பூபேஷ் தஹெரியா ஆகியோர், சந்தையில் புதிதாக நுழைகிறவர்கள் லாபம் சம்பாதிக்கவேண்டுமென்றால், தங்கள் தொழில் அளவை மிகுதியாக்க வேண்டியிருக்கும், அதே நேரம், வாடிக்கையாளர்களுக்கு டிஜிட்டல் பணம் செலுத்தல் தளங்களின் தெரிவுகள் கூடுதலாக இருக்கும் என்று விளக்கினார்கள்.

அடோஸ் இந்தியா நிறுவனத்தின் HR தலைவர் மற்றும் VPஆன நசீர் ஷைக் இந்தக் குழு விவாதங்களை வழிநடத்தினார்.■

TRF உதவியுடன் நற்பணி

# ஹோஷியார்பூரில் கருவிழிப் படல ஒட்டுச் சிகிச்சை முகாம்

ரோட்டரி செய்திக்குழு

RC ஹோஷியார்பூர் மிட்-டவுன், RID 3070, தன்னுடைய முதன்மைத் திட்டமாகிய 'பார்வைக்கு ஒளி அளிப்போம் திட்டம்' என்பதன்கீழ், RC ப்ளானோ மெட்ரோ, டெக்ஸாஸ், RID 5810 உடன் இணைந்து, கருவிழிப் படலப் பார்வையின்மையால் துன்பப்பட்டு வந்த 40 நோயாளிகளுக்கு அறுவைச் சிகிச்சையை ஆதரித்தது. இந்தப் பன்னாட்டு நல்கைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக இந்தச் சங்கம் சண்டிகரில் உள்ள குரு கா லாங்கர் கண் மருத்துவ மனை மற்றும் அம்ரித்ஸரில் உள்ள ஷீன் கண் மற்றும் பல் மருத்துவமனையுடன் ஓர் MoUல் கையெழுத்திட்டுள்ளது.

இந்தக் கருவிழிப் படல அறுவைச் சிகிச்சைகளுக்கான அனைத்துச் செலவுகளையும் எங்கள் சங்கம் ஏற்றுக்கொண்டது என்றார் RC ஹோஷியார்பூர் மிட்-டவுன் செயலாளர் பர்வீன் பலியல். பெரும்பாலான நோயாளிகள் பஞ்சாப், ஹரியானா, இமாச்சலப் பிரதேசம், UP மற்றும் ஜம்மு மற்றும் காஷ்மீரிலிருந்து வந்திருந்தார்கள். மக்கள் கண் தானம் செய்யவேண்டும், கருவிழிப் படலப் பார்வை யின்மையால் துன்பப்படும் பிறருக்கு விழியொளி அளிக்க வேண்டும் என்பதற்காக இந்தச் சங்கம் விழிப்புணர்வு முகாம்களை நடத்திவருகிறது.■



# கர்நாடக ரோட்டரியின் ‘செவித்திறன்’ திட்டம்

ரோட்டரி செய்திக்குழு

முதல் முறையாக 12 வயதான நம்ரதா, மனிதர்களின் குரல்கள் மற்றும் தன்னை சுற்றியுள்ள ஒலிகளைக் கேட்க முடிந்தது. RID 3190க்கு உட்பட்ட பெங்களூர் பிரிகேட்ஸ் ரோட்டரி சங்கம், தனது செவித்திறன் திட்டத்தின் கீழ் அவருக்கு காது கேட்கும் கருவியை வழங்கியிருந்தது. பிறவியிலேயே அவருக்கு காது கேளாமை பிரச்னை இருந்துள்ளது. ஆனால், அவருக்கு 6 வயது ஆனபோது தான் இது தெரிய வந்துள்ளது. சிகிச்சை பெற்று காது கேட்கும் கருவி பொருத்தப்பட்ட பின்பு அவரது முகத்தில் பொலிவைப் பார்ப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது என்றார் சங்கத்தின் தலைவர் அஸ்வனி கிங்கர்.

மற்றவர்களைப்போல நம்ரதா பேசுவதற்கு, வீட்டிலும் பள்ளியிலும் பேச்சுப் பயிற்சி தேவைப்படும். காது கேட்கும் கருவிகள் அவரது வாழ்க்கையில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்றார் செவித் திறன் திட்டக்குழுவின் தலைவர் டாக்டர் M P ரகு. இந்த திட்டத்தின் மூலம் கர்நாடகத்தில் நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள ஏழை மக்களில் செவித்திறன் குறைபாடு உள்ள குழந்தைகளின் குறைபாடுகளை நீக்கி அவர்களது வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த சங்கம் முயன்று வருகிறது. இதற்காக நாங்கள் ஐந்து முனை செயல் திட்டத்தை உருவாக்கியுள்ளோம். முதலில் குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனை நடத்தி அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பது. செவிப்புலன் கருவி மற்றும் பேச்சுப் பயிற்சி தேவைப்படும் குழந்தைகளுக்காக காதுகேளாமை தடுப்பு சிகிச்சைக் கான அறக்கட்டளை நிதியத்தை ஏற்படுத்தியுள்ளோம்.

### குழந்தைகள் பூங்கா

உள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் ராமலிங்க ரெட்டி, DG B L நாகேந்திர பிரசாத் மற்றும் கமாண்டன்ட் M V ராமகிருஷ்ண பிரசாத் ஆகியோர் இணைந்து, குழந்தைகள்

*நம்ரதா தன் தாயுடன். DG B L நாகேந்திர ப்ரசாத் RC பெங்களூர் ப்ரிகேட்ஸ் தலைவர் அஸ்வனி கிங்கர் முன்னிலையில் காது கேட்கும் கருவியை நம்ரதாவிற்கு வழங்குகிறார்.*



பூங்காவை திறந்துவைத்தனர். இந்த பூங்கா, ரோட்டரி சங்கம் மற்றும் ஐந்து ரோட்ராக்ட் சங்கங்கள் மற்றும் கர்நாடக மாநில ரிசர்வ் போலீஸ் மற்றும் இரண்டு தனியார் நிறுவனங்கள் உதவியுடன் உருவாக்கப்பட்டது. சங்கத்தின் செயலாளர் ரவி ஜெரார்டு, இங்கு குழந்தைகளுக்கான விளையாட்டுக் கருவிகளை நிறுவுவதில் முக்கியப் பங்கு வகித்தார்.

### எல்பிஜியில் இயங்கும் இஸ்திரிப் பெட்டிகள்

மேலும் சங்கம் தனது வாழ்வாதாரம் அளிக்கும் திட்டத்தின் கீழ், துணிகளை தேய்த்து இஸ்திரி போட்டுத்தரும் பல பயனாளிகளுக்கு திரவ எரிபொருளில் இயங்கும் (எல்பிஜி) இஸ்திரிப் பெட்டிகளை வழங்கியது.
DG பிரசாத், இதற்கான முன்முயற்சியை எடுத்ததுடன், DGE ஃபஸல் முகமது முன்னிலையில், இந்தக் கருவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார். இத்திட்டத்தின் கீழ் பயனாளிகள் தங்களால் முடிந்த தொகையை செலுத்துவார்கள். மீதித் தொகையை சங்க உறுப்பினர்கள், நண்பர்கள் மற்றும் நலம் விரும்பிகள் தரும் நன்கொடைகள் மூலம் ஈடு செய்கிறது என்றார் அவர்.■



RC *பெங்களூர் ப்ரிகேட்ஸ் கோரமங்களாவில் நிறுவியுள்ள பூங்கா.*

---

# கொல்கத்தா இன்டராக்டர்கள் தொடங்கியுள்ள “தெரு நூலகம்”

ரோட்டரி செய்திக்குழு

சில்வர் பாயின்ட் பள்ளியின் இன்டராக்ட் சங்கம் (ஆசியாவில் மிக நீண்ட காலமாக இயங்கிவரும் சங்கமாகிய கல்கத்தா ரோட்டரி சங்கத்தால் உருவாக்கப்பட்டது), ஐலீட் (iLead, UGCஆல் அங்கீகரிக்கப்பட்ட, புகழ் பெற்ற ஓர் உயர் கல்வி அமைப்பு) என்ற அமைப்புடன் இணைந்து, தங்களுடைய பள்ளி வளாகத்தில் ஓர் “இலவசத் தெரு நூலகத்தை” அமைத்துள்ளார்கள்.

RID 3291 DG சுதீப் முகெர்ஜீ, ஐலீட் தலைவரான பிரதீப் K R சோப்ரா ஆகியோர் இந்தத் தொடக்க விழாவில் பங்கேற்றார்கள். RC கல்கத்தா இளைஞர் சேவைகள் தலைவர் தேபசிஷ் பிஸ்வாஸ் இந்தத் திட்டத்தைப்பற்றிப் பேசுகையில், “இந்த ஊரில் நூல்களை விரும்பிப் படிக்கும் மக்கள் பலர் உள்ளார்கள், எல்லா வயதைச் சேர்ந்தவர்களும் நூல்களைப் படிக்க விரும்புகிறார்கள், ஆனால், விலை உயர்ந்த புத்தகங்களை வாங்கிப் படிக்கும் வசதி இவர்களுக்கு இல்லை, இவர்களுடன் நூல்களையும் அறிவையும் பகிர்ந்துகொள்வதுதான் இந்த இலவசத் தெரு நூலகத்தின் மைய நோக்கம்” என்றார்.

DG முகெர்ஜீ இன்டராக்டர்களுடைய முயற்சிகளைப் பாராட்டினார், இந்த நிகழ்ச்சியில், இந்தப் பள்ளியின் இன்டராக்ட் சங்கம், அரசாங்கப் பதிவு செய்யப்பட்ட, ஏழை மற்றும் சேரிப் பகுதிகளில் வாழும் குழந்தைகளுடைய கல்வியை ஆதரிக்கிற “டிவைன் சோஷியல் வெல்ஃபேர் சொசைட்டி” என்ற NGOக்கு ஆங்கிலம், கணக்கு, பொது அறிவு, அறிவியல் மற்றும் கதை சார்ந்த 600க்கும் மேற்பட்ட நூல்களை நன்கொடையாக வழங்கியது என்றார் அவர்.




மாவட்ட இன்டராக்ட் தலைவர் சுலக்னா டாவ், சில்வர் பாயின்ட் பள்ளியின் செயலாளர் பானி ராய் சௌத்ரி, பள்ளியின் அறங்காவலர் உறுப்பினரான பூர்ணேந்து ராய் சௌத்ரி மற்றும் RID 3291 பிராந்தியச் செயலாளர் டெபசிஷ் பிஸ்வாஸ் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள்.■

THE ODYSSEY
ROTARY INSTITUTE 20-21

# பாராட்டப்படாத நாயகர்களைக் கொண்டாடியது பிராந்தியச் சந்திப்பு

கிரண் ஜெஹரா

ரோட்டரியின் கவனப் பகுதிகளான பொருளாதார மேம்பாடு, நலன், எழுத்தறிவு மற்றும் நீர், தூய்மை மற்றும் சுகாதாரம் ஆகிய வற்றில் மிகச் சிறந்த பணியைச் செய்துள்ள ஐந்து பேர் ரோட்டரி சந்திப்பில் பெருமைப்படுத்தப் பட்டார்கள், இவர்கள் ஒவ்வொரு வருக்கும் பாராட்டிதழும் ரூ.1 லட்சம் பரிசும் வழங்கப்பட்டது.

**ரோட்டரி நாயகர் பரிசு பெற்ற சாதனையாளர்கள்:**

**அய்யப்ப மசாகி:** தண்ணீர்க் காந்தி என்று அழைக்கப்படுகிறவர், நீர்ப் பற்றாக்குறையை வெல்வதற்கான தீர்வுகளை உருவாக்கியதற்காகவும், நீரை இன்னும் செயல்திறனுடன் பயன்படுத்திக்கொள்ளச் சமூகங்களுக்கு உதவியதற்காகவும் விருது பெறுகிறார்.


ஜாதவ் பயெங்



அய்யப்ப மசாகி

**ஜாதவ் பயெங்:** இந்தியக் காட்டு மனிதர் என்று புகழ் பெற்றவர், சுற்றுச் சூழல் செயல்பாட்டாளர்

**குல்விந்தர் கௌர் மின்ஹாஸ்:** சமூகப் பணியாளர், கல்வியாளர், தன்னுடைய ஜுக்கிவாலா பள்ளியின் வழியாக, லூதியானாவில் சேரிப் பகுதியில் வசிக்கும் குழந்தைகளுக்குச் சேவை புரிவதற்காகத் தன்னுடைய ஆசிரியர் பணியைத் துறந்தவர்.

**தஸ்லிமா நஸ்ரின்:** திருநங்கைப் பெண், முற்றிலும் திருநங்கையரால் நிர்வகித்து நடத்தப்படும் ஹலால் கேடரிங் என்ற உணவு பரிமாறும் தொழில் நிறுவனத்தைத் தொடங்கியவர்.

**டாக்டர் அபிஜீத் சோனாவனெ:** புணே நகரில் உள்ள பிச்சைக்காரர்கள் மற்றும் தெருவில் வாழ்வோருக்கு இலவச சிகிச்சை அளிப்பவர்.

**பாலினச் சமநிலை:** இந்தச் சந்திப்பில் பேசிய வாழ்க்கை முறைப் பயிற்சியாளர் ஜெய்மதன் பாலினச் சமநிலையைப் பற்றிய கூடுதல் விழிப் புணர்வுக்கான தேவையை வலியுறுத்தினார். பெண்களுக்குத் தங்களுடைய உரிமைகள் மற்றும் வாய்ப்புகளைப்பற்றிய நுண்ணுணர்வை உண்டாக்குவது அவர்களுக்கு ஆற்றல் வழங்குவதில் பெரிதும் உதவும் என்று தொடர்ந்து கூறினார்.

பெண்களைப் பழமை வாதத்துக்குப் பழக்கப்படுத்துவதை விட, மேலும் மதிப்புடன் நடந்து கொள்ளும்படி ஆண்களுக்குக் கற்றுத்தரவேண்டும். ஆண்களையும் பெண்களையும் ஒரு சமநிலையான தளத்தில் நாம் வளர்க்கவேண்டும். பெண் ஒருவர் பணத்துக்காக வேலை செய்யத் தீர்மானித்தாலும் சரி, தன் பேரார்வத்தைத் தொடரத் தீர்மானித்தாலும் சரி, வீட்டில் இருந்துவிடத் தீர்மானித்தாலும் சரி, அவருடைய தெரிவுகளை மதிக்கவேண்டும், அவரை எப்போதும் கண்ணியத்துடன் நடத்தவேண்டும்'' என்றார் அவர். பெண்களுக்கான மதிப்பு வீட்டில் தொடங்கவேண்டும் என்று தொடர்ந்து குறிப்பிட்டார். தந்தை அளவுக்குத் தாயையும் மதிக்கவேண்டும் என்று உங்கள் குழந்தைகளுக்குக் கற்றுத்தாருங்கள். பல சூழ்நிலைகளில், தந்தை வழங்குபவராக இருக்கலாம், ஆனால், எல்லாச் சூழ்நிலைகளிலும் தாய்தான் ஊட்டமளிப்பவர்.■


குல்விந்தர் கௌர் மின்ஹாஸ்


Dr அபிஜீத் சோனாவனெ

THE ODYSSEY
ROTARY INSTITUTE 20-21

# நோய்ப்பரவல் ஒரு புதிய நீதி ஒழுங்கைக் கொண்டுவரும்

V முத்துக்குமரன்

ஒருவர் ஆற்றல் மிக்க பொறுப்புக்கு உயரும்போது, நீதி மதிப்பீடுகளைத் தக்க வைத்துக்கொள்வது எப்படி? இதற்கு எனக்குக் கிடைக்கிற ஒரே பதில், “சங்கத்” என்ற இந்தியச் சொல், அதாவது, உங்களைச் சுற்றி யார் இருக்கிறார்கள் என்பது. இது ஓர் ஆற்றல் மிக்க யோசனை. ஆனால், நீங்கள் சரியான சூழ்நிலைகளை உருவாக்குவதும், உங்களைச் சுற்றியுள்ளவர்கள் உங்கள் பிழைகளைச் சுட்டிக்காட்டும்போது அதைத் திறந்த மனத்துடன் எதிர்கொள்வதும் இன்னும் கூடுதல் முக்கியம் என்றார் ஹார்வர்ட் பிஸினஸ் ஸ்கூல் கல்வி நிறுவனத்தின் தலைவர் (டீன்) நிதின் நொஹ்ரியா. மெய்நிகர் ரோட்டரி சந்திப்பில் பேசினார்.

உங்களைச் சுற்றி உண்மையான நண்பர்களை, இணையானவர்களைக் கொண்டிருப்பதும், அவர்களுடைய விமர்சனங்களுக்கு மனத்தைத் திறந்து வைத்திருப்பதும்தான் ஆற்றல்மிக்க பொறுப்புகளிலும் உயர் பதவிகளிலும் நெடுங்காலத்துக்கு நீதி அடிப்படையில் பணிவாகத் தொடர்ந்த மக்களிடம் நான் பார்த்த ஒரே அமைப்புரீதியிலான பாதுகாப்பு என்றார் நொஹ்ரியா.

இந்த நோய்ப்பரவல் நேரத்தில், சில மதிப்புத் தோல்விகள் இன்னும் ஆழமாக வெளிப்பட்டன. ஆனால், எப்போதும் நம்பிக்கையுடன் சிந்திக்கிற ஒருவர் என்றமுறையில், அதுபோன்ற நீதித் தோல்விகள் இப்போது இன்னும் கூர்மையாக வெளிப்படுகின்றன என்றால், மீட்சிக்கான வாய்ப்புகளும் உள்ளன என்று நான் உணர்கிறேன்.

ரோட்டரியின் நான்கு வழிப் பரிசோதனை அசாதாரணமானது என்றும், அதை நாம் இன்றைக்குச் செயல்படுத்தினால், உலகம் இன்னும் சிறப்பாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.



*நிதின் நொஹ்ரியா, தலைவர் (டீன்) ஹார்வர்ட் பிஸினஸ் ஸ்கூல்*

எந்தவொரு சோகத்தின் துன்பத்தையும் யார் தாங்குகிறார்கள் என்று பார்த்தால், நம்மைப் போல் வீட்டுக்குள் வசதியாக அமர்ந்து கொண்டு, சமூக விலகல் விதிமுறைகளைப் பின்பற்றி நம்மைப் பாதுகாத்துக்கொள்கிற சலுகை பெற்றவர்களை விட, பாதிக்கப் படக்கூடிய குழுக்கள் தான் அதைப் பெருமளவு தாங்குகிறார்கள். இந்தப் பரவலான சமத்துவமின்மையையும் நியாயமின்மையையும் கோவிட் வெளிப்படுத்தியுள்ளது” என்று அவர் விளக்கினார்.

பார்ப்பதற்கு நல்லவர்களாகத் தோன்றுகிற மக்கள் சில நேரங்களில் மோசமாக நடந்துகொள்வது ஏன்? நெறிமுறை அல்லது நீதித் தோல்வி எடுத்துக்காட்டுகளைப் பார்க்கும்போது, நம்முடைய உடனடி எதிர்வினை, அந்த மனிதர் மோசமானவர் என்று கூறுவதுதான்.

பலப்பல ஆண்டுகளாக மக்கள் கேட்டுவந்த மிகச் சிறந்த நீதிக் கேள்விகளில் ஒன்று இது.

நம்முடைய சொந்த நீதி மதிப்பீடுகளைத் தோற்கடிக்கும் வழிகளில் நம்மை நடந்துகொள்ளச் செய்யக் கூடிய பல சமூகத் தாக்கங்கள் உள்ளன. எடுத்துக்காட்டாக, சில விஷயங்களை நியாயப்படுத்துதல், ஏற்கெனவே நடக்கிறவற்றை ஏற்றுக்கொண்டு பின்பற்றும் செயல்பாடுகள் (எடுத்துக்காட்டாக, வேலை நடக்கவேண்டுமென்றால் கையூட்டு கொடுக்கத்தான் வேண்டும் என்ற நம்பிக்கை), ஊக்கத்தொகைகளின் அழுத்தம் மற்றும் நேர அழுத்தம் போன்றவை.

### அமெரிக்க இனவாதம்

கோவிட் நேரத்தில் இனவாதத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் யார் என்று பார்த்தால், அமெரிக்காவில் குறைவாகப் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகிற சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களின் விகிதம் மிகுதியாக உள்ளது. ஜார்ஜ் ஃப்ளாய்ட் கொல்லப்பட்டபோது, அமெரிக்க மக்கள் தங்கள் நாட்டில் இருக்கும் இனவாத மற்றும் சமத்துவமின்மைப் பிரச்சனைகளைப் புரிந்து கொண்டார்கள்” என்று அவர் கருத்து தெரிவித்தார். திரும்பத் திரும்ப அப்பாவிக் கருப்பின ஆண்களும் பெண்களும் காவல்துறையால் திடுக்கிட வைக்கும் சூழல்களில் கொல்லப்படுவது எப்படிச் சாத்தியம் என்று அவர் கேட்டார். நம்முடைய நீதித் தோல்விகள் வெளிப் படுத்தப்படுகிற கூர்மையான முறை, இந்த நோய்ப்பரவல் நேரத்தில் ஒரு நீதி விழிப்புக்கு நம்மை வழிநடத்தும்” என்று அவர் தொடர்ந்து குறிப்பிட்டார்.■

# இந்தியாவை மதிக்கும், நேசிக்கும் ஆப்கானிஸ்தான்

ரஷீதா பகத்

2005ம் ஆண்டு ஆப்கானிஸ்தான் சென்றுவந்த எவரும் நான் கூறியதுபோலவே பாலின வகையில் எந்த முன்னேற்றமும் இல்லை என்பதை கனத்த இதயத்துடன் கூறுவார்கள். 2001ம் ஆண்டு அவர்கள் ஆட்சியிலிருந்து வெளியேறினாலும், அவர்கள் இரண்டாவது பாலினம் எப்போதும் வீட்டிலேயே முடங்கிக் கிடப்பதை உறுதிசெய்வதன் மூலம் சிறுமிகள் கல்வி கற்பதையும், பெண்களின் நம்பிக்கையையும் தகர்த்து விட்டார்கள். ஆப்கானிஸ்தானின் புரட்சிகர பெண்கள் அமைப்பு (RAWA) தலிபான் ஆட்சிக் காலத்திலேயே ஏன் அதற்கு முன்னரும்கூட பெண்களின் உரிமைகளுக்காக போராடி வந்தது. அந்த அமைப்பின் செயற்பாட்டாளரான பர்வீன் என்பவரை நான் சந்தித்தேன். அவர் என்னிடம், “தலிபான் ஆட்சி காலத்துடன் ஒப்பிடும் போது பாலின பாகுபாட்டில் நிலைமை இப்போது நிலைமை முன்னேறியுள்ளது என்றாலும் இன்னும் செய்ய வேண்டியது அவசியம்” என்றார்.

தலிபான் ஆட்சிக் காலத்தில் அவர் நாட்டைவிட்டு வெளியேறி பாகிஸ்தானின் பெஷாவரில் இருந்து கொண்டு RAWAக்காக செயலாற்றி வந்தார். அடுத்து வந்த ஹமீத் கர்சாய் ஆட்சி காலத்தில் பாலின சமத்துவத்தில் பெரிய முன்னேற்றம் ஏற்படாவிட்டாலும் சில தளர்வுகள் இருந்தன. இதற்கு அமெரிக்கா கொடுத்த அழுத்தமும் காரணமாக இருக்கலாம். அரசாங்கத்தில் உயர் பதவி வகிக்கும் அமைச்சர்கள், மத அடிப்படைவாதிகள் இப்போது வரை அமெரிக்கர்களை திருப்தி படுத்துவதற்காக உதட்டளவில் பெண்கள் விடுதலை பற்றி பேசி வருகிறார்கள்.



*பாழடைந்த பாமியன் பள்ளத்தாக்கில் விளையாடும் சிறுவர்கள்.*

அடுத்து அவர் சொன்னது, நமது நாடு உள்பட அனைத்து நாடுகளுக்கும் பொருந்துவதாக இருந்தது. அதாவது இரண்டாம் பாலினத்தவருக்காக பாடுபடுவதாக உதட்டளவிலேயே எல்லா நாடுகளும் கூறிவருகின்றன. ஆப்கன் நாட்டு பெண், தனது வீட்டிற்குள்ளேயே துன்புறுத்தப்படுகிறார். தந்தை, கணவர், சகோதரர் இவர்கள்தான் அவளை மிகவும் சித்ரவதை செய்கிறார்கள். பல வீடுகளில் குடும்ப வன்முறை தலைதூக்கியுள்ளது. பெண்கள் புர்கா அணியும் கட்டாயத்தில் உள்ளனர். சிறுமிகள் பள்ளிக்கோ அல்லது கல்லூரிக்கோ அல்லது வேலைக்கோ செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. பெண்கள் ஒருபோதும் ஆண்களுக்குச் சமமாக இருக்க முடியாது என்பதை பதிவு செய்யும் வகையில் நீதித்துறை உள்ளிட்ட எல்லா துறைகளிலும் ஆணாதிக்கம் இருப்பதாக RAWA ஆர்வலர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

மேலைநாட்டைச் சேர்ந்த, உலக வங்கியின் ஆப்கானிஸ்தான் நாட்டுத் தலைவரான ஜீன் மஸூரெல்லே என்பவரிடம் பாலின நிலைமை மற்றும் ஆப்கானிஸ்தானில் பெண்களின் நிலையை மேம்படுத்துவதில் சர்வதேச சமூகத்தின் பங்கு குறித்தும் நான் கருத்து கேட்டபோது, இது மேற்கத்திய சேவை நிறுவனங்கள் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய ஒரு பகுதி என்று கருதுவதாக குறிப்பிட்டார். புர்கா இல்லாமல் வெளியில் செல்லுமாறு ஒரு வெள்ளைக்காரர் கூறும்பட்சத்தில் அது அழிவுக்குத்தான் காரணமாக இருக்கும். நாங்கள் அவ்வாறு செய்தால் ஆப்கானியப் பெண்கள் மீது மேற்கத்திய நாகரீகத்தை திணிக்க முற்படுவதாக நினைப்பார்கள். எனவே எந்தவித பின்னடைவும் ஏற்படாமல் நாங்கள் கவனமாகச் செயல்பட வேண்டும் என்றார்.

ஆனால், அந்த பிரெஞ்சுக் காரர் மேலும் சில தகவல்களைக் கூறினார். இந்தியப் பெண்கள் கணிசமான எண்ணிக்கையில் தன்னார்வத் துறையிலும், ஐ.நா. அமைப்புகளின் பிரதிநிதிகளாகவும் செயலாற்றி வருகின்றனர். அவர்கள் நல்ல நிலையில் உள்ளனர். ஆப்கானிஸ்தானை புனரமைக்கும் பணியில் இந்தியாவின் பங்கு பாராட்டத்தக்கது. தில்லியில் உள்ள உலக வங்கியில் பணிபுரியும் எனது சகாக்களில் பலர் ஆப்கானிஸ்தானுக்கு வந்துசென்றார்கள் அல்லது பணிபுரிந்தார்கள் என்றார் அவர். ஆப்கானிஸ்தானியர்களுடன் உரையாடியபோது அவர்கள் இங்குள்ள சூழலை மதிக்கிறார்கள். அதேநேரத்தில் பாலின பிரச்னையில்



கோப்பு படம்



உடைக்கப்பட்ட
ஒரு பாமியன் புத்தர்.

அவர்கள் இங்குள்ளவர்களை சமாதானப்படுத்தி வருகிறார்கள். ஈரான் அல்லது பாகிஸ்தானனைவிட ஆப்கானிஸ்தானியர்கள் இந்தியாவின் வளர்ச்சிப் பாதையைத்தான் விரும்புகிறார்கள். அப்படி நடந்தால் நான் மகிழ்ச்சி அடைவேன் என்றார்.

### இந்தியாவை நேசிக்கிறார்கள்

இந்தியா மற்றும் அதன் செல்வாக்கு பற்றி மஸுரெல்லா என்ன சொல்கிறார் என்பது மட்டுமல்ல, இஸ்லாமிய உலகில் அது இராக் ஆக இருக்கட்டும், அல்லது துருக்கியாக இருக்கட்டும் இந்தியாவை மதிக்கிறார்கள், விரும்புகிறார்கள். ஏன் ஆப்கானியர்கள்கூட இந்தியாவையும் இந்தியர் களையும் நேசிக்கிறார்கள். இந்தியப் படங்களை விரும்பிப் பார்க்கிறார்கள். நடிகர் ஷாரூக்கான், நடிகை ஐஸ்வர்யா ராய் பற்றி அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. அதுமட்டுமல்ல, பொருளாதாரம், கல்வி, சுகாதாரத் துறைகளிலும் இந்தியா வேகமாக முன்னேறி வருவதைப் பார்க்கிறார்கள்.

ஆப்கானிஸ்தானுக்கான இந்திய தூதராக அப்போதிருந்த ராகேஷ் சூட், ஆப்கானிஸ்தான் மறு சீரமைப்பு பணிகளுக்காக இந்திய அரசு 600 மில்லியன் டாலர் நிதியுதவி அளித்துள்ளதாகச் சுட்டிக்காட்டினார். ஆப்கானிஸ்தானை மீண்டும் கட்டமைப்பதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட முதல்நாடு இந்தியாதான். பாதுகாப்பு காரணங்களுக்காக பல நன்கொடையாளர்கள் காபூலிலேயே தங்கிவிட்ட நிலையில் நாங்கள் தான் நாடு முழுவதும் சென்று பணியாற்றினோம் என்றார்.



எனவே 90 மில்லியன் டாலர் மதிப்பிலான சல்மா நீர்மின் திட்டம், நூற்றுக்கணக்கான தொலைதூர சாலை அமைக்கும் திட்டம், மின்தொகுப்புகள் அமைக்கும் பணி, காந்தஹாரில் முதல் குளிர்பதனக் கிடங்கு பணி, இதன் மூலம் பழங்களை சேமித்து வைத்து பதப்படுத்தி ஏற்றுமதி செய்ய முடியும். ஒரு காலத்தில் கர்சாய் மாணவராக இருந்த காபூலில் உள்ள பிரபலமான ஹபீபியா பள்ளி மறுசீரமைப்பு, 250 படுக்கைகள் கொண்ட இந்திரா காந்தி குழந்தைகள் மருத்துவமனை 3 மில்லியன் டாலரில் புனரைமைப்பு, ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களுக்குப் பயிற்சி என அனைத்துவகை பணிகளிலும் இந்தியாவின் பங்கு இருப்பது தெரியவந்தது.

இதில் சுவாரஸ்யமானது என்னவெனில் ஆப்கானிஸ்தானின் அண்டை நாடுகளான ஈரான், பாகிஸ்தான் இரண்டையும் மக்கள் ஏதோ சில காரணங்களுக்காக வெறுப்பு இல்லாவிட்டாலும் சந்தேகக் கண்களுடன் பார்த்தனர். அதே நேரத்தில் இந்தியாவை நேசித்தனர். காபூலின் பிரபலமான வர்த்தகப் பகுதியான சிக்கன் தெருவில் தரைவிரிப்புகள் கடை வைத்திருந்த ஹாஜி அப்துல் ஹக்கீம் என்பவருடன் நான் பேசினேன். இந்தியாவின் தீவிர ரசிகரான அவர் சொன்னார், இந்தியாவில் கல்வி முறை சிறப்பாக உள்ளது. உங்கள் கல்வி நிலையங்களிலிருந்து சிறந்த மாண வர்களை நீங்கள் வெளிக்கொண்டு வருகிறீர்கள் என்றார்.

ஆப்கானிஸ்தானுடன் உள்ள உறவுகள் தொடர்பாக இந்தியாவை பிறநாடுகளுடன் ஒப்பிட்டு அவர் பேசினார். உங்களுக்குத் தெரியும் ஆப்கானிஸ்தான் நீண்ட காலமாக சிக்கலான வரலாற்றைக் கொண்டி ருக்கிறது என்று. இங்கு வன்முறையும் இரத்தக்களறியும் அதிகமாக இருந்தது. இன்னும் சொல்லப்போனால், ஆப்கானிஸ்தான் ஒரு சேறு,

*காபுலில் உள்ள 'பாகே ஜனானா' என்னும் பெண்களுக்கான ஒரு தோட்டம்.*



சகதிகள் நிறைந்த நதியைப்போல இருந்தது. இதில் அமெரிக்கா, சோவியத் யூனியன், ஈரான், பாகிஸ்தான் உள்ளிட்ட பல நாடுகள் கலங்கிய நீரில் மீன்பிடிக்க ஆவலாகவும் எங்களைச் சுரண்டவும் முயன்றனர். ஆனால், இந்தியாதான் எங்களுக்கு உற்ற நண்பன் போல இருந்து வருகிறது. ஆப்கானிஸ்தான் மக்களை சுரண்டவும் இல்லை, மக்கள் நலனுக்கு எதிராக எந்தச் செயலிலும் ஈடுபடவில்லை என்றார்.

எனவே பாழடைந்த தேசத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு இந்தியா என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்கள் என்று அவரிடம் நான் கேட்டேன். அதற்கு, இந்தியாவிடம் இருந்து நாங்கள் அதிகமாக எதையும் எதிர்பார்க்கவில்லை. உங்களது கல்வி முறைதான் உலகத்தில் சிறந்தது. உங்களால் முடிந்தால் இங்கிருந்து, அதாவது காபூல், மஸார், காந்தஹார், பாமியான் உள்ளிட்ட இடங்களிலிருந்து 500 குழந்தைகளைத் தேர்ந்தெடுத்து அழைத்துச் சென்று அவர்களுக்கு இந்தியாவில் நல்ல கல்வியைக் கொடுங்கள். அவர்கள் படித்து முடித்து விட்டு சிறந்த அறிஞர்களாகவும் தொழில் முனைவோர்களாகவும் திரும்பும்போது ஆப்கானிஸ்தானை மாற்றியமைக்கும் திறன்பெற்றவர்களாக அவர்கள் இருப்பார்கள். இதுதான் நீங்கள் எங்களுக்குச் செய்யும் சிறந்த உதவி என்றார்.

### இந்திய டாக்டர்களுக்கு மதிப்பு அதிகம்!

இந்திய கல்விமுறையைப் பாராட்டும் ஆப்கானிஸ்தானியர்கள், இந்தியாவைச் சேர்ந்த மருத்துவர்களையும், இங்கு தயாரிக்கப்படும் மருந்துகளையும் விலைமதிப்பற்றதாகக் கருதுகிறார்கள். நான் தில்லியிலிருந்து காபூலுக்கு விமானம் மூலம் சென்றபோது அதில் இரண்டு மருத்துவக் குழுவினரும் வந்தனர். தனியார் துறையினர், குறிப்பாக இதயநோய் சிகிச்சை மருத்துவர்கள் வணிக நோக்கத்துடன் வந்திருந்த போதிலும், இந்திய அரசு, மத்திய அரசு சுகாதாரத் துறையைச் சேர்ந்த மருத்துவர்கள் குழுவை அனுப்பியிருந்தது. போரினால் சீர்குலைந்து போயிருந்த சுகாதாரச் சேவைகளை தூக்கி நிறுத்துவதே அவர்களின் நோக்கமாக இருந்தது.

காந்தஹார், மஸார்-இ-ஷெரீப் போன்ற முக்கிய இடங்களில் 5 இந்திய மருத்துவக் குழுவினர் பணியாற்றி வருவதாக இந்தியாவுக்கான தூதர் ராகேஷ் சூட் தெரிவித்தார். பாதுகாப்பு பற்றி அவர்களுக்கு கவலை இல்லையா என்று நான் கேட்டேன். அதற்கு அவர், இந்திய மருத்துவர்களை அவர்கள் நேசிக்கிறார்கள். அவர்கள் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இந்திய மருத்துவர்களின் நோய் அறியும் திறனும் இந்திய மருத்து வர்கள் கொடுக்கும் மருந்துகள் மீதும் அவர்களுக்கு நம்பிக்கை உள்ளது. ஏனெனில் இங்குள்ள சந்தைகளில் கலப்படம் செய்யப்பட்ட மருந்துபொருள்கள் நிறைய உள்ளன. இந்திய மருத்துவர்களிடம் சென்று அவர்கள் கொடுக்கும் மாத்திரைகளைச் சாப்பிட்டால் குணமாகிவிடும் என்ற பொதுவான நம்பிக்கை அவர்களிடம் உள்ளது. சில சமயங்களில் மருந்துகள் தீர்ந்துவிட்டால், வெளிச்சந்தையில் அவற்றை வாங்குவதைவிட இந்தியா விலிருந்து சப்ளை வரும் வரை இரண்டு அல்லது மூன்று நாட்கள் காத்திருக்கவும் அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

சில சமயங்களில் மருந்துகள் தீர்ந்து விட்டால், வெளிச்சந்தையில் அவற்றை வாங்குவதைவிட இந்தியாவிலிருந்து சப்ளை வரும் வரை இரண்டு அல்லது மூன்று நாட்கள் காத்திருக்கவும் அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

**பாரம்பரிய புத்தர் சிலைகள் அழிப்பு**

எனினும் இந்து குஷ் பிராந்தியத்தின் மையப்பகுதியில் உள்ள பாமியான் பள்ளத்தாக்குப் பகுதியில் இருந்த 6-ஆம் நூற்றாண்டின் பண்டைய புத்தர் சிலைகளை தலிபான்கள் அழித்த செய்திகளை அனைவரும் படித்திருப் பார்கள். மிகுந்த வேலைப்பாடுகளுடன் நுணுக்கமாக உருவாக்கப்பட்ட அந்த புத்தர் சிலைகளை தலிபான்கள் வெடிவைத்து தகர்த்துவிட்டனர். இப்போது அங்கு சென்றால் குண்டு துளைத்த ஓட்டைகளைத் தான் காணமுடிகிறது. அது மிகவும் வேதனை அளித்தது. ஒரு காலத்தில் மலைச்சரிவில் செதுக்கப்பட்ட புத்தர் சிலைகள், (ஒன்று 55 மீட்டரும் மற்றது 35 மீட்டரும் நீளம் கொண்டது) இந்திய-கிரேக்க கலைகளின் கலப்பு பாணிக்கு (காந்தாரக் கலைக்கு) எடுத்துக்காட்டாக விளங்கின. மணல் கற்பாறையில் செதுக்கப்பட்டு மண்ணையும் வைக்கோலையும் கலந்து நுணுக்கமான வேலைப்பாடு கள் அதன் மீது சாந்து பூசி வண்ணக் கலவைகளுடன் அமைக்கப்பட்டிருந்தன அந்த புத்தர் சிலைகள்.

1998ம் ஆண்டு இறுதியில் மஸார்-இ-ஷெரீப் மற்றும் அந்த இடத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் அதிகாரத்தை கைப்பற்றிய தலிபான்கள் 2001ம் ஆண்டு இது இஸ்லாத்துக்கு எதிரானது என்று கூறி, யுனெஸ்கோ புத்தர் சிலைகளை மரபுச்சின்னமாக அறிவித்திருந்த போதிலும் அதை கொடூரமாக அழித்துவிட்டனர். ஒவ்வொரு ஆண்டும் ஆப்கானிஸ்தான் மற்றும் வெளிநாடுகளிலிருந்து பௌத்த மதத்தைச் சேர்ந்த யாத்ரீகர்கள் இங்கு வந்து பிரார்த்தனை செய்வது வழக்கம். கலாசாரத்தின் அடையாளச் சின்னமாக இருந்ததாலும் பலரும் இங்கு வந்து சென்றனர்.

புத்தர் சிலைகளை வழிபடமுடியாத நிலையில், அவை சர்வதேச சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடமாக இருப்பதால் அதை பாதுகாத்து அதன் மூலம் பணம் சம்பாதிக்கலாம் என்று நினைத்து 1999ம் ஆண்டு தலிபான் தலைவர் முல்லா முகமது உமர் முடிவு செய்தார்.

ஆனால், 2001ம் ஆண்டு தலிபான்கள் தங்கள் நிலையை மாற்றிக்கொண்டு புத்தர் சிலைகளை அழிக்க முடிவு செய்தனர். இது சர்வதேச அளவில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது. யுனெஸ்கோவில் நடைபெற்ற கூட்டத்தில் இஸ்லாமிய நாடுகள் அமைப்பு தலிபான்களின் முடிவுக்கு கண்டனம் தெரிவித்தன. இந்தியாவும், ஜப்பானும் அந்த சிலைகளை தங்கள் செலவில் அகற்ற முன்வந்தன. சிலைகளை மூடி பராமரிக்கவும், தலிபான்களுக்கு கூடுதலாக இழப்பீடு தொகை வழங்கவும் ஜப்பான் முன்வந்தது. அப்போது பாகிஸ்தான் அதிபராக இருந்த பர்வேஸ் முஷாரப், இஸ்லாத்துக்கு எதிரான இந்த நடவடிக்கையை கைவிடுமாறு தலிபான்களைக் கேட்டுக்கொண்டார். ஆனால், தலிபான்கள் எதையும் காதில்போட்டுக் கொள்ளவில்லை. மிகப்பெரிய புத்தர் சிலைகளை வெடிவைத்து தகர்த்தனர். ஆனாலும் உறுதியான மரபுச் சின்னமான கலைப்பொருள்களை அவர்களால் முற்றிலுமாக அழிக்க முடியவில்லை.

பெரிய புத்தர் சிலைகள் தங்க முலாம் பூசப்பட்ட விலைமதிப்பற்ற ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு பிரகாசமாக ஒளிவிசியது என்ற பார்வையாளர் ஒருவரின் கருத்தைத் தான் நம்மால் பிரதிபலிக்க முடிகிறது.

பாமியானுக்கு நாங்கள்



*காபுலில் ஒரு தரைவிரிப்பு விற்பனையாளர்.*

Pinterest



*இந்தி திரைபடங்கள் மற்றும் பாலிவுட் நடிகர்களுக்கு இங்கு அதிக வரவேற்பு உண்டு.*

டொயோட்டா ஏஸில் செய்த பயணம் மறக்கமுடியாததாக இருந்தது. கரடுமுரடான பாதையில் நாங்கள் நெடுநேரம் செல்லவேண்டியிருந்தது. நாங்கள் காரில் புறப்பட்டபோது, காபூலில் உள்ள பிரெஞ்சு தூதரகத்தில் நட்புறவுக்கான ஆலோசகர் ஆலிவர் குய்லாமேயிடம் பாமியான் போவதற்கு எவ்வளவு நேரமாகும் என்று மெதுவாகக் கேட்டேன். அவர் புன்னகையுடன், ஆப்கானிஸ்தானில் நாங்கள் தொலைவு பற்றி பேசு வதில்லை. எவ்வளவு நேரமாகும் என்றுதான் கேட்போம் என்றார்.

சரி செல்லவேண்டிய தூரம் 250 கி.மீ. கரடு முரடான சாலையில் சென்று சேருவதற்கு 11 மணி நேரம் பிடித்தது. அந்த சாலையில் செல் வதற்குள் முதுகுவலியே வந்து விட்டது. அப்படியென்றால் குண்டும் குழியுமான சாலையில் வண்டியை ஓட்டிச் செல்ல டிரைவர் என்ன சிரமப் பட்டிருப்பார் என்பதை நினைத்துப் பாருங்கள். மலையிலிருந்து பனி உருகியோடி சாலையில் ஏற்பட்ட பனிக்குவியலை கடந்து சென்றது பற்றி நான் குறிப்பிடவில்லை. ஆனால், அழகிய நிலப்பகுதி, அங்கு ஓடும் ஆறுகள் மனதைக் கவரும் வகையில் ரம்மியமாக இருந்தன. எங்கு பார்த்தாலும் வசந்த காலத்தின் பசுமை. வழக்கத்தைவிட அதிக அளவில் பெய்த மழையால் கோதுமை விளைச்சல் அதிக நம்பிக்கை அளிக்கும் வகையில் இருந்தது.

சாலைகள் தான் மோசமான நிலையில் நம்மை வரவேற்றனவே தவிர அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் நம்மை அன்புடன் வரவேற்றனர். எங்களுக்கு தேநீர் கொடுத்தார்கள். நாட்டின் தற்போதைய சூழ்நிலை, வறுமை ஆகியவை இருந்தபோதிலும் வெளிநாட்டினரிடம் அவர்கள் பணம் பறிக்க முயலவில்லை.

ஆப்கானிஸ்தான் பயணத்தை நான் திரும்பிப் பார்க்கும்போது, 16 வருடங்கள் கழிந்துவிட்டது நினைவுக்கு வந்தது. என்றாவது ஒருநாள் அங்கு நிலைமை சீராகும் என்று கருதுகிறேன். கோவிட் தொற்று பயணத்தை விலைமதிக்கமுடியாததாக மாற்றிவிட்டது. பாலிவுட் நடிகர்களை பொருத்தவரை அவர்களுக்கு இப்போது யாரைப் பிடிக்கும் என்பது தெரியவில்லை. ஆனால், அப்போது அவர்கள் நடிகர் ஷாரூக்கான், மாதுரி தீட்சித், அஜ்ய்தேவ்கன், ஐஸ்வர்யா ராய், பிரீத்தி ஜிந்தா ஆகியோரைத்தான் விரும்பினார்கள். தலிபான்கள் ஆட்சியில் சினிமா பாடல்களுக்குத் தடைவிதிக்கப்பட்டது. இப்போது மீண்டும் அவை எழுச்சிபெற்றுள்ளன. காபூல் நகர வீதிகளில் பாலிவுட் பாடல்களை நீங்கள் கேட்கலாம். பாலிவுட் திரை நட்சத்திரங்களின் போஸ்டர்களையும் அங்கு பார்க்க முடிந்தது.

ஆனால், ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனத்தில் பணிபுரியும் ஈரானியப் பெண் என்னிடம் கூறியது சிந்திக்க வைக்கிறது. இந்தியா சிறந்த திரைப்படங்களை தயாரித்து வருவது எனக்குத் தெரியும். ஆனால், துரதிருஷ்டவசமாக ஆப்கானிஸ்தானில் எங்களுக்கு கிடைப்பது காதல் படங்கள் தான். இங்குள்ள பெண்களின் நிலை மற்றும் இந்தியாவின் புகழ் ஆகியவற்றை கருத்தில்கொண்டு நல்ல தரமான, பாலின மேம்பாட்டுக்கு உதவிடும் கருத்துள்ள படங்களை உங்கள் அரசாங்கம் ஊக்குவிக்க வேண்டும். சிறுமிகளின் கல்வி மற்றும் பெண்களுக்கான பொருளாதார சுதந்திரம் தொடர்பான விஷங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டும். அது போன்ற திரைப்படங்கள் வந்தால் இங்குள்ள நிர்வாகத்தினருக்கு அது தூண்டுகோலாக இருக்கும் என்றார். அவர் கூறியது என்னை சிந்திக்கவைத்தது.

ஒருங்கிணைப்பு: ரஷீதா பகத்

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# கழிவு மேலாண்மையை வீட்டிலிருந்து தொடங்குவோம்

ப்ரீதீ மெஹ்ரா




நமது வீடுகளில் தினமும் உருவாகும் கழிவுகளை தொட்டியில் கொட்டும் வெறும் குப்பையாக எண்ணாமல் அதை நிர்வகிப்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். உண்மையில் வீட்டிலுள்ள குப்பை மற்றும் கழிவுகளை அகற்றுவதில் நாம் சிறிது கவனம் செலுத்தினால் உலகத்தை சுகாதாரமான, தூய்மையான இடமாக மாற்றுவதற்கு பயனுள்ளதாக இருக்கும்.

அதிகாரப்பூர்வ தகவல்களின்படி இந்தியாவில் ஆண்டுக்கு 145 மில்லியன் டன் கழிவுகள் உருவாக்கப் படுகின்றன. இதுவே 2047ம் ஆண்டில் ஒரு நாளைக்கு 260 முதல் 300 டன் என்ற அளவை எட்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

நிலைமையச் சமாளிக்க போது மான நடவடிக்கைகள் எடுக்கப் படவில்லை என்பது சிக்கலை அதிகப் படுத்தியுள்ளது. மத்திய மாசுக்கட்டுப் பாட்டு வாரியம் வெளியிட்டுள்ள தரவுகளின்படி 117,644 மெட்ரிக் டன் கழிவுகள் சேகரிக்கப்படுகிறது என்றால், அதில் 49,401 மெட்ரிக் டன் மட்டுமே சுத்திகரிக்கப்படுகின்றன அல்லது மறு சுழற்சி செய்யப்படுகின்றன. மீதமுள்ள கழிவுகள் அல்லது குப்பைகள் நகர நிலப்பரப்புகளில் மலைபோல் குவிந்து கிடக்கின்றன. துரதிருஷ்டவசமாக இந்த குப்பைகள் நாளுக்கு நாள் அதிகரித்தே வருகிறது.

பிரச்னையின் தன்மை அதிகரித்து வரும் நிலையில் குடிமக்கள் என்ற முறையில் நாம் என்ன செய்ய முடியும்? என்று கேட்கலாம். நாம் நிறைய செய்ய முடியும். கழிவுகள் மேலாண்மையை நாம் வீட்டிலிருந்தே தொடங்குவோம்.

குப்பைகளை பிரிப்பது எளிய செயலுடன் தொடங்குகிறது. இதற்காக மூன்று குறியிடப்பட்ட குப்பைத் தொட்டிகளையும், ஒரு பெரிய துணிப்பையையும் வைத்திருக்க வேண்டும். உலர்ந்த கழிவுகளுக்கு ஒரு பெரிய தொட்டி, ஈரமான கழிவுகள் மற்றும் அபாயகரமான கழிவுகளுக்கு இரண்டு சிறிய தொட்டிகள் இருக்க வேண்டும். மறுபயன்பாட்டிற்காக அவ்வப்போது கொடுக்கக்கூடிய பிளாஸ்டிக் பொருள்களை சேகரிக்க ஒரு பெரிய துணிப்பையை வீட்டின் ஓர் மூலையில் வைத்திருக்கவும்.

அட்டைப் பெட்டிகள், கேன்கள், அலுமினியச் சுருள்கள், தகடுகள், பிளாஸ்டிக், உலோகப் பொருள்கள் மற்றும் காகிதங்கள் உலர் கழிவுகள் எனப்படும். இவை அனைத்தும் மறு சுழற்சி செய்யக்கூடிய பொருள்களால் ஆனவை. கண்ணாடி பொருள்களும் உலர் கழிவு பட்டியலில் வருகிறது.

ஈரமான குப்பைகள் அன்றாடம் வெளியேற்றப்பட வேண்டியவை. தேயிலை இலைகள், காபி போடும் போது வடிகட்டப்படும் கசடுகள், சமை யலுக்காக காய்கறி வெட்டும்போது ஏற்படும் கழிவுகள், மாமிசத் துண்டுகள், மிஞ்சிய உணவுப் பொருள்கள், காய்ந்த மலர்கள், இலைகள் போன்றவற்றை ஈரமான குப்பைகள் எனலாம். இவற்றை உடனே வெளியேற்றிவிட வேண்டும். இவற்றை உரமாகவும் தயாரிக்கலாம்.

நீங்கள் முதலீடு செய்ய முன் வந்தால் இயற்கை பொருள்களால் ஏற்படும் குப்பைகளை மீண்டும் பயன்படுத்தும் வகையில் உரமாக மாற்றியமைக்க முடியும். நீங்கள் அடுக்குமாடி குடியிருப்புகளில் வசித்து வந்தால் உங்கள் பிளாக் கிலேயே ஒரு பொதுவான உரம் தயாரிக்கும் யூனிட்டை தொடங்கலாம்.

அபாயகரமான கழிவுகள் சற்று

சிக்கலானவை. இவை காலாவதியான மருந்துகள் அல்லது அழகுசாதனப் பொருள்கள், காய்ந்துபோன ஷூ பாலிஷ், உலர்ந்த வண்ணப்பூச்சு, வீணான பல்புகள், டியூப்லைட்டுகள், மருந்து தெளிக்கும் கேன்கள், பேட்டரிகள், உரம், பூச்சிக் கொல்லி கொள்கலன்கள் ஆகியவை அடங்கும். அவை தனித்தனியாக ஒரு தொட்டியில் சேகரித்து அவை அபாயகரமான கழிவுகள் என்று பெட்டியில் குறிப்பிடப்பட வேண்டும். சானிடரி நாப்கின் உள்ளிட்ட சுகாதார கழிவுகளை அகற்றுவதற்கு தனி காகிதப் பைகள் தேவைப்படுகின்றன.

துணிப்பை எதற்கு என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். மரக்கன்றுகளை வளர்ப்பது, குப்பைகளை பணமாக்குவது, குழந்தைகளுக்கு பொம்மைகள் அல்லது விளையாட்டு பொருள்கள் தயாரிக்கும் இலாப நோக்கு இல்லாமல் செயல்படும் அமைப்புகளுடன் வீட்டில் இருப்பவர்களும், வீடு கட்டும் சங்கங்களும் தொடர்பில் இருக்கின்றன. இந்த அமைப்புகள் பயன்படுத்தப்பட்ட பால் பாக்கெட்டுகள், மளிகைச் சாமான் பைகள், அமெசான் கூரியர் பைகள் மற்றும் இதர பொதி பொருள்களை வாங்கிச் செல்கின்றன. இவற்றை தனியாக ஒரு துணிப்பையில் போட்டு வைத்திருந்தால் மாதத்திற்கு ஒரு முறை அவற்றை மறுசுழற்சிக்காக கொடுக்கலாம்.

இது தவிர நம் வீட்டிலும் மின்னணு கழிவுப் பொருள்கள் உருவாகின்றன. அவை முறையாக வெளியேற்றப்பட வேண்டும். அது ஒரு பழைய செல்லிடபேசி கருவியாகவோ, மின்னேற்றியாகவோ (சார்ஜர்), விசைப்பலகையாகவோ, கணினி மவுஸாகவோ, விளக்கு, இரும்பு அல்லது ஹெட்போனாகவோ இருக்கலாம். இவற்றை பழைய சாமான்கள் வாங்கும் வியாபாரிகளிடம் விற்றுவிடுவது நல்லது. அதை எப்படிக் கையாள்வது என்பது அவருக்குத் தான் நன்றாகத் தெரியும்.

பல இடங்களில் குடியிருப்பு நலச் சங்கங்களே உலர்ந்த, ஈரமான மற்றும் அபாயகரமான குப்பைகள், கழிவுகளை தனித்தனியாகப் பிரித்துப் போடுவதற்கு ஏற்பாடு செய்ய முன்வந்துள்ளது வரவேற்கத்தக்கது. சேகரிப்பட்ட கழிவுகள், குப்பைகள் குறிப்பிட்ட இடத்தை சென்றடைவதை உறுதி செய்கின்றன.

கழிவுகளை தரம் பிரிப்பதை எளிதாக எடுத்துக் கொண்டுவிட முடியாது. இதை நாம் வசிக்கும் இடத்தில் முறையாகச் செய்யா விட்டால் எதிர்காலத்தில் மலையாக குவிந்திருக்கும் குப்பைகளை அகற்றுவது பெரு முயற்சி தேவைப்படும். தற்போது இந்த குப்பை மலைகள் சில கழிவுகளை மீட்பதற்கும், அகற்றுவதற்காகவும் பெரும் செலவில் தோண்டப்பட்டு வருகின்றன.

நிலையான வாழ்க்கை முறைக்கு மாறுவது என்பது Reduce, Reuse, Recycle and Recover ஆகிய நான்கு "R"களை பின்பற்றுவதைப் பொருத்தது. தேவையில்லாத பொருள்களின் நுகர்வை குறைக்க வேண்டும். மறுசுழற்சிக்கு முன்னர் பயன்படுத்திய பொருள்களை மீண்டும் அதிகபட்சம் பயன் படுத்துவது, எதை மீட்க முடியுமோ அதை மீட்பது பயன்படுத்த பொருள்களை மறுசுழற்சி செய்து மீண்டும் பயன்படுத்துவதை இது பரிந்துரைக்கிறது.

*எழுத்தாளர் மூத்த இதழாளர், சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.*

---

TRF உதவியுடன் நற்பணி

# அகமத்நகரில் ரோட்டரி டயாலிசிஸ் மையம்

ரோட்டரி செய்திக்குழு



RIDE *மகேஷ் கொட்பாகி மற்றும்* Dr *அமீதா,* DG *ஹரீஷ் மோத்வானி,* DGE *ஓம் ப்ரகாஷ் மோட்டிபாவலே மற்றும்* DRFC *ப்ரமோத் பாரீக் டயாலிசிஸ் மையத்தில்.*

மகாராஷ்டிரத்தில் உள்ள அகமத்நகர் மேக்கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் ஐந்து டயாலிசிஸ் கருவிகளுடன் ரோட்டரி மிட்-டவுன் டயாலிசிஸ் மையத்தை அமைத்துள்ளது RC அகமத்நகர் மிட்-டவுன், RID 3132.

$48,000 மதிப்புள்ள இத்திட்டம் TRF; RC மியாமி ஏர்போர்ட் RID 6990க்கு மற்றும் RC ஃபரீதாபாத் ஆஸ்தா (RID 3011) ஆகியோரின் ஒரு பன்னாட்டு நல்கையின் வழியாக ஆதரிக்கப் பட்டது என்று சங்கத் தலைவர் க்ஷிதிஜ் ஜவாரெ தெரிவித்தார்.

இச்சங்கம், இயந்திரங்கள், ஜென்செட், RO நீர் தூய்மைப்படுத்தி, காற்றைக் கட்டுப்படுத்தும் கருவிகள் மற்றும் படுக்கைகளை இந்த மருத்துவ மனைக்கு வழங்கியது. இந்தச் சேவைகள் மானிய விலைகளில் வழங்கப்படும் என்றும், இந்த வளாகத்தில் ஒரு நாளைக்கு 400 டயாலிசிஸ்களைச் செய்யலாம் என்றும், இதன்மூலம், 50 முதல் 80 நோயாளிகள் பலன் பெறுவார்கள் என்றார் ஜவாரெ.

DG ஹரீஷ் மோத்வானி, DGE ஓம் பிரகாஷ் மோடிபவாலெ, DRFC பிரமோத் பாரிக், திட்டத் தலைவர் விஜய் இங்ளெ மற்றும் ஜவாரெ முன்னிலையில் RIDE மகேஷ் கொட்பாகி இந்த மையத்தைத் தொடங்கிவைத்தார்.■

# ரோட்டரி ஆளுநர்களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்

## ஆரஞ்சுத் திட்டம் கண் பராமரிப்பில் பெரிய மாற்றத்தைக் கொண்டுவரும்

**S முத்துப்பழனியப்பன்**
**ரியல் எஸ்டேட் துறை வல்லுனர்,**
RC **மெட்ராஸ் சென்ட்ரல் ஆதித்யா,** RID 3232



இந்த ரோட்டரி ஆண்டின் நிறைவில், தமிழ் நாட்டில் ரூ.30 கோடி செலவில் 200 பார்வை மையங்கள் இருக்கும் என்று மகிழ்ச்சியுடன் பகிர்ந்துகொள்கிறார் இவர். “ஆரஞ்சுத் திட்டம்” என்னும் மாவட்டத் திட்டத்தின்கீழ், 2020க்குள் இந்தியாமுழுவதும் 20,000 பார்வை மையங்களை அமைக்கும் GoIன் இலக்கில் உள்ள பெரிய இடைவெளியை நிரப்புவதற்கான ஒரு கலவை மாதிரியை இந்த மாவட்டத்தின் குழு கண்டறிந்துள்ளது, WHO, தடுக்கக்கூடிய பார்வையிழப்புக்கான பன்னாட்டு அமைப்பு மற்றும் இந்தியாவிலுள்ள ஆறு மிகப் பெரிய மருத்துவமனைகள் இதற்கு ஆதரவளித்துள்ளன என்கிறார் S முத்துப்பழனியப்பன். நாங்கள் RID 3232லும் அருகிலுள்ள மாவட்டங்களிலும் 200 கண் பராமரிப்பு வளாகங்களை அமைப்போம். பிப்ரவரி நிறைவுக்குள், 104 பார்வை மையங்களின் முதல் தொகுப்பை நாங்கள் அமைப்போம். இதற்காக 32 சங்கங்களின் ஆதரவுடன் ஏழு GGPள் (1.6 மில்லியன்) ஏற்கப்பட்டுள்ளது” என்று தொடர்ந்து கூறுகிறார் இவர். இந்த மைல்கல், ரோட்டரிக்கும் கண் பராமரிப்புப் பிரிவுக்கும் ஒரு பெரிய மாற்றத்தைக் கொண்டுவரும் என்கிறார் இவர்.

இந்த மாவட்டத்தில் ஏற்கெனவே உள்ள 10 டயாலிசிஸ் மையங்களுடன், மேலும் நான்கு மையங்களை டேங்கெர் அறக்கட்டளை ஆதரவுடன் இந்த மாவட்டம் அமைத்தது. ஏப்ரலில், ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு ஒரு நடமாடும் இதய நோய் கண்டறிதல் பிரிவு (GG: $180,000) நன்கொடையாக அளிக்கப்படும்.

இதுவரை, $2.2 மில்லியன் மதிப்புள்ள 13 GG விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன, இவற்றில் $1.9 மில்லியன் மதிப்புள்ள 10 நல்கைகள் ஏற்கப்பட்டுள்ளன. மாற்றுத் திறனாளிகளுக்கு உதவுவதற்காக, 100 நடமாடும் விற்பனை வண்டிகள் படிப்படியான முறையில் வழங்கப்படுகின்றன. இதன்மூலம், இந்த விற்பனையாளர்கள் நோய்ப்பரவலின்போது சந்தித்த சிரமங்களைத் தாண்டி வரலாம்.

சுந்தரி திட்டத்தின்கீழ், 100 பெண்களுக்கு அழகுப் பராமரிப்புத்துறையில் பயிற்சியளிக்கும் ஓர் இலக்கை நிர்ணயித்துள்ளார் முத்துப்பழனியப்பன். பல அழகு சேர்க்கும் சலூன்களின் சங்கிலியாக உள்ள நேச்சுரல்ஸ் நிறுவனம் இந்தத் திட்டத்தில் எங்களுடன் இணைந்து செயல்படுகிறது, இந்தப் பெண்கள் அனைவரும் அந்நிறுவனத்தில் வேலைக்குச் சேர்க்கப்படுவார்கள்” என்று விளக்குகிறார் அவர்.

129 சங்கங்கள், மொத்தம் 5,400 ரோட்டரியன்களைக் கொண்டுள்ள இவர், உறுப்பினர் எண்ணிக்கையில் 10 சதவிகித வளர்ச்சியை இலக்காகக் கொண்டுள்ளார். இந்த மாவட்டம் உலகின் மிகப் பெரிய ரோட்டராக்ட் மாவட்டமாக (130 சங்கங்கள், 25,000க்கும் மேற்பட்ட ரோட்டராக்டர்கள்) உள்ளதால், உறுப்பினர்களைத் தக்க வைத்துக் கொள்ளவேண்டும், இளைஞர்களுடன் உரையாடவேண்டும் என்று இவர் ஆவலாக உள்ளார், அதன்மூலம், அவர்கள் ரோடராக்ட் சங்கங்களில் மதிப்பைக் காண்பார்கள். TRF வழங்கலுக்கு இவருடைய இலக்கு, $1 மில்லியன்.

## மரம் நடுதல், சாலைப் பாதுகாப்புத் திட்டங்களில் முதன்மைக் கவனம் செலுத்தவுள்ளார் இவர்



**K S வெங்கடேசன்**

**உணவு எண்ணெய் உற்பத்தி, RC சின்னசேலம், RID 2982**

மிகப் பெரிய மரம் நடுதல் திட்டம் உள்ளிட்ட சுற்றுச்சூழல் தொடர்பான திட்டங்களில் இவர் கூடுதல் கவனம் செலுத்துவார். இந்த மாவட்டம்முழுவதும் குறைந்தது 50,000 மரக் கன்றுகளை நடவேண்டும் என்று இலக்கு நிர்ணயித்துள்ளார் K S வெங்கடேசன். இதுவரை 20,000 மரங்கள் நடப்பட்டுள்ளன என்கிறார் இவர்.

இவருடைய இரண்டாவது முக்கியத்துவம், சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு. இதற்காக, இவருடைய மாவட்டம் ஒரு மிகப் பெரிய இரு சக்கர வாகனப் பேரணியை நடத்தும். இதுவரை, 12 சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் இதுபோல் 30 முகாம்களை நடத்தவேண்டும் என்ற இலக்கை நாங்கள் எளிதாகத் தாண்டிச்செல்வோம்.

உறுப்பினர்கள் எண்ணிக்கையைப் பொறுத்தவரை, இவர் 15 சதவிகித வளர்ச்சியை இலக்காகக் கொண்டுள்ளார். இப்போது, 3,180 ரோட்டரியன்கள் உள்ளார்கள், இவர்களில் 120 பேர் புதிதாகச் சேர்ந்தவர்கள். இத்துடன், RC மேட்டூர் டேம் சிட்டி என்ற ஒரு புதிய சங்கம் 46 புதிய உறுப்பினர்களுடன் சமீபத்தில் பதிவு செய்யப்பட்டது. 83 ரோட்டராக்ட் சங்கங்களில் 1,500க்கும் மேற்பட்ட ரோட்டராக்டர்கள் உள்ளார்கள், 200 புதிய உறுப்பினர்களைச் சேர்க்க இவர் திட்டமிடுகிறார்.

மாவட்டம்முழுவதும் 30 ரத்த தான முகாம்களை நடத்தவேண்டும் என்று திட்டமிட்டுள்ளார். தன்னுடைய மாவட்டத்திலிருந்து TRFக்கு $400,000 பங்களிக்கவேண்டும் என்ற இலக்குடன் இவர் செயல்படுகிறார். PRID C பாஸ்கர் சங்கத் தலைவராக இருந்தபோது, அவரைக் கண்டு ஊக்கம் பெற்ற வெங்கடேசன், 1989ல் ஒரு ரோட்டராக்டராகச் சேர்ந்தார். பின்னர், 1997ல் நான் RC சின்னசேலத்தின் பதிவுச் செயலாளராக ஆனேன். ரோட்டரியில் பாஸ்கர்தான் என்னுடைய லட்சிய பிம்பம்'' என்று தொடர்ந்து கூறுகிறார்.

## புதிய வழிகாட்டுதல்களின்கீழ் உறுப்பினர் எண்ணிக்கையை வளர்த்தல் ஒரு பெரிய சவால்



**ராஜன் கன்டோத்ரா**

**ரியல் எஸ்டேட் துறை வல்லுனர், RC தன்பாத், RID 3250**

சமூக சேவைத் திட்டங்களை முன்னிறுத்தி ரோட்டரியன்களுக்கு ஊக்கம் அளிக்கலாம் என்று ராஜன் கன்டோத்ரா ஆவலுடன் எதிர்பார்க்கிற நேரத்தில், பிப்ரவரி 1 அன்று, ஆளுநர்கள் சங்கங்களை மாதந்தோறும் சென்று பார்த்தல் மற்றும் தனி நபர்களைச் சந்தித்தல் ஆகியவற்றுக்கு இனி நிதி வழங்கப்படாது என RI வாரியம் வழங்கிய சுற்றறிக்கை எனக்கு வியப்பளித்தது என்கிறார் இவர்.

RI சுற்றறிக்கை இவருக்குக் கிடைத்தபோது, இவர் ஓர் அதிகாரப்பூர்வப் பயணத்தின் நடுவில் இருந்தார். 500 புதிய உறுப்பினர்களைச் சேர்க்கவேண்டும் என்ற இலக்குடன் இவர் செயல்படுகிற நேரத்தில், சங்கக் கூட்டங்களுக்கான புதிய வழிகாட்டுதல்களைத் தொடர்ந்து, இது சாத்தியமாகுமா என்று எனக்கு உறுதியாகத் தெரியவில்லை. ஜூம் கூட்டங்களின் வழியாகச் சங்கங்கள் ஊக்கம் பெறுவதில்லை, அவர்கள் தங்களுடைய ஆளுநர்களை நேருக்கு நேர் சந்திக்க விரும்புகிறார்கள் என்கிறார் இவர்.

இந்த மாவட்டத்தின் 101 சங்கங்களில் 3,870க்கும் மேற்பட்ட ரோட்டரியன்கள் உள்ளார்கள். 58 ரோட்டராக்ட் சங்கங்களில், 1,200க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் என்கிற இப்போதைய கணக்கில் 200 புதிய ரோட்டராக்டர்களைக் கூடுதலாகச் சேர்க்க இயலும் என்று நம்புகிறார்.

ஆனால், இதில் ஒரு பிரச்சனையும் உள்ளது. இந்த மாவட்டத்தில் உள்ள சங்கங்களில் 60 சதவிகிதத்தினர்தான் தங்களுடைய திட்டங்களை, சங்கச் செயல்பாடுகளை ரோட்டரி இந்தியா இணையத் தளத்தில் அறிக்கையிடுகிறார்கள். மற்றவர்களுக்கு இந்த இணையத் தளத்தில் தங்கள் பணியை மேம்படுத்தும் தொழில்நுட்ப வழிகள் இல்லை. நாங்கள் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கிறோம்'' என்கிறார் இவர்.

1.2 மில்லியன் மரங்களை நடும் இலக்கைக் கொண்ட வசுந்தரா திட்டத்தை, RIPE சேகர் மேத்தா மெய்நிகர் முறையில் தொடங்கிவைத்தார். என்னுடைய பொறுப்புக்காலத்தில் 50 மகிழ்ச்சிப் பள்ளிகளை அமைக்கவேண்டும் என்று நான் திட்டமிட்டுள்ளேன்'' என்கிறார் இவர். நலப் பராமரிப்புத்துறையைப் பொறுத்த வரை, பீகார் மற்றும் ஜார்கண்டில் உள்ள ஒரு தனியார் மற்றும் ஐந்து தொண்டு மருத்துவமனைகளில் தலா மூன்று இயந்திரங்களைக் கொண்ட ஆறு டயாலிசிஸ் மையங்கள் அமைக்கப்படும். இரண்டு கண் மருத்துவமனைகள் மற்றும் இரண்டு ரத்தப் பகுதி பிரிப்பான் பிரிவுகள் GGகளின் வழியாக அமைக்கப்படவுள்ளன.

1996ல், கன்டோத்ரா-வுடைய பள்ளித் தோழரான PDG சந்தீப் நாரங் இவரை RC தன்பாதில் சேரும்படி ஊக்குவித்தார். தன்னுடைய சங்கத்திலிருந்து வருகிற நான்காவது ஆளுநர் இவர்.

Rotary PEOPLE OF ACTION

# கறவை மாடுகளை வளர்த்து வருமானம் ஈட்டும் ஷிமோகா கிராமப்புற பெண்கள்

கிரண் ஜெஹரா

ரோட்டரி நட்புறவு பரிமாற்றத் திட்டத்தின் கீழ் அமெரிக்காவின் RID 7890க்கு உட்பட்ட RC வெஸ்ட் ஸ்பிரிங்பீல்டு, PDG ராபர்ட் மெக்டொனால்டு மற்றும் அவரது துணைவியார் கடந்த ஆண்டு ஷிமோகாவுக்கு வந்து ஷிமோகா ரோட்டரி சங்கத்தின் பசு நன்கொடை திட்டத்தின் கீழ் பலனடைந்த பயனாளிகளை சந்தித்துப் பேசினார்.

PDG மெக்டொனால்டு, தனது சொந்த நாட்டுக்குத் திரும்பியதும், சங்கக் கூட்டத்தில் இந்த வெற்றிக் கதைகளை பகிர்ந்து கொண்டார். இதன் விளைவாக அவரது சங்கம், RID 3182க்கு உட்பட்ட ஷிமோகா ரோட்டரி சங்கத்துக்கு மேலும் உலகளாவிய 6 மானியத் திட்டங்களில் நான்கிற்கு ஆதரவளிக்க முன்வந்தது.

RID3182க்கு உட்பட்ட ரிப்பன்பேட் ரோட்டரி சங்கத்துடன் இணைந்து, TRF மற்றும் RC வெஸ்ட் ஸ்பிரிங்பீல்டு 73 உயர்ரக கறவை மாடுகளை ஷிமோகா மற்றும் ரிப்பன்பேட் பகுதியில் உள்ள கிராமத்தைச் சேர்ந்த ஏழை குடும்பங்களுக்கு வழங்கின. இத்திட்டம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியுள்ளது என்றார் சங்கத்தின் தலைவர் சுனிதா ஸ்ரீதர். இந்த திட்டத்தை முன்னெடுத்தவர் இவர்தான்.

இந்த கறவை மாடுகள் DG ராஜாராம பட் மற்றும் PDG B N ரமேஷ் முன்னிலையில் கோ பூஜைக்குப் பின்னர் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. ரூ.30 லட்சம் மதிப்பிலான பசு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இதுவரை 500 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. கறவை பசு மாடுகள் வளர்ப்பது குறித்து போதிய அனுபவம் உள்ளதா என்பதை அறிந்துகொண்ட பின்னர்தான் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டனர். மாடுகள் வளர்க்க தேவையான இடம் மற்றும் தண்ணீர் வசதி அவர்களிடம் உள்ளதா என்பதும் உறுதிசெய்யப்பட்டது என்றார் சுனிதா. விபத்து மற்றும் நோய்களுக்கு எதிராக தங்களிடம் உள்ள பசுக்களுக்கு காப்பீடு எடுக்கும் படி அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். நோய்த்தடுப்பு சிகிச்சை, தடுப்பூசி போடுதல் மற்றும் செயற்கை கருவூட்டல் போன்ற இலவச சேவைகளுக்காக உள்ளூர் அரசு கால்நடை பராமரிப்புத்துறையுடன் ரோட்டரி புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. பசுக்களை பயனாளிகள் தங்கள் வீடுகளுக்கு அழைத்துச் செல்லும் முன்னர் கால்நடை மருத்துவர்கள் மூலம் அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

மாடுகளை நன்றாகப் பராமரிப்பதாகவும் எந்த காரணம் கொண்டும் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு அவற்றை விற்றுவிட மாட்டோம் என்றும் பயனாளிகள் ரோட்டரி சங்கத்திடம் உறுதியளித்துள்ளனர்.

தங்களின் முதல் கன்றுக்குட்டியை ரோட்டரி வழிகாட்டுதல் பேரில் தகுந்த மற்றொரு பயனாளிக்கு வழங்கவும் அவர்கள் உறுதியளித்தனர். இது மேலும் ஏழைக் குடும்பங்கள் பசுக்களை வளர்க்கவும், திட்டம் நிலைத்திருக்கவும் உதவும் என்று புன்னகையுடன் தெரிவித்தார் சுனிதா.■

*PDGs P நாராயணா, B N ரமேஷ், DG B ராஜாராம பட் மற்றும் RC ஷிமோகா தலைவர் சுனீதா ஸ்ரீதர் பசுமாடுகளை கிராமத்தினருக்கு அளிக்கின்றனர்.*



# RI தெற்காசிய அலுவலகத்தின் செய்தி

**சங்க அங்கீகாரம்:** ரோட்டரி அறக்கட்டளையின் நல்கைகள், திட்டங்களுக்குப் பல சங்கங்கள் ஆதரவளித்து வருகின்றன. இதற்கான அங்கீகாரத்தை அந்தச் சங்கங்கள் பெறவேண்டும் என்பதற்காக, அறக்கட்டளை, பல வாய்ப்புகளை வழங்குகிறது. 'மை ரோட்டரி'யில் மாவட்ட/சங்கத் தலைவர்களுக்குக் கிடைக்கும் சங்க அறக்கட்டளைப் பதாகை அறிக்கை, 100% அறக்கட்டளைக்கு வழங்கும் சங்கம்; 100% ஒவ்வொரு ரோட்டரியனும், ஒவ்வோர் ஆண்டும் சங்கம்; ஆண்டு நிதி வழங்கலில் ஒவ்வொரு வருக்குமான தொகையில் மிகச் சிறந்த மூன்று; 100% பால் ஹாரிஸ் சமூகச் சங்கம்; 100% பால் ஹாரிஸ் தோழமைச் சங்கம் (ஒருமுறைமட்டும் வழங்கப்படும் பதாகை).

2015-16 நிலவரப்படி, புதிய சங்க உறுப்பினர்கள் (இந்த ரோட்டரி ஆண்டின்போது சேர்ந்தவர்கள் அல்லது இன்னொரு சங்கத்திலிருந்து மாறி வந்தவர்கள்) சங்கப் பதாகைகளுக்கான பங்கேற்புத் தேவைகளில் சேர்க்கப் படுவதில்லை (100% பால் ஹாரிஸ் தோழமைப்பதாகை நீங்கலாக). அதே நேரம், புதிய உறுப்பினர் களுடைய பங்களிப்புகள் ஒவ்வொரு வருக்குமான கணக்கீடுகளில் பயன்படுத்தப்படும்.

உறுப்பினர்கள் மாறுவதால், மற்றும், கூடுதல் அல்லது மறுபகிர்ந்தளிக்கப்படும் பங்களிப்புகளால், சங்க அறக்கட்டளைப் பதாகை அறிக்கையில் உள்ள பதாகை பெறுவோர் பட்டியல் ரோட்டரி ஆண்டுமுழுவதும் மாறலாம். நீங்கள் இந்த மின்னஞ்சல் முகவரியில் மாவட்ட அறக்கட்டளைப் பதாகை அறிக்கையைக் கோரலாம்: *rotarysupportcenter@rotary.org*. சங்க/மாவட்டத் தலைவர்கள் தங்களுடைய என் ரோட்டரி உள்நுழைவு மூலமாகவும் இதைப் பெறலாம்.

**ரோட்டரியின் கோவிட் உதவிப் பணிகளை முன்னிறுத்துங்கள்:**

- RIன் அதிகாரப்பூர்வ ஃபேஸ்புக், ட்விட்டர் மற்றும் இன்ஸ்டாகிராம் பக்கத்தைப் பின்பற்றுங்கள், பன்னாட்டு அளவிலும் உள்ளூர் அளவிலும் நடைபெறும் இணைய நிகழ்ச்சிகளில் பங்குபெறுங்கள்
- People Of Action மற்றும் Rotary Responds ஆகிய ஹேஷ்டேகுகளைப் பயன்படுத்துங்கள், நல்ல பணி மற்றும் நம்பிக்கைக் கதைகளை முன்னிறுத்த உதவுங்கள்
- சிறிய சமூக ஊடகப் பதிவுப் பொதிகளை உருவாக் குங்கள், அவற்றை உங்கள் டிஜிட்டல் சானல்களில் வாரந்தோறும்/இரு வாரங்களுக்கு ஒரு முறை பதிவு செய்யுங்கள்
- பல கவனப் பகுதிகளில் செய்யப்பட்டுள்ள பணியைச் சுற்றி இன்ஃபோகிராஃபிக்குகளை (தகவல் படங்கள்) உருவாக்குங்கள். உலகத் தண்ணீர் நாள் (மார்ச் 22), உலக நல நாள் (ஏப்ரல் 6) போன்ற முக்கிய நாட்களில் அவற்றைப் பதிவு செய்யுங்கள்.
- சங்க மற்றும் மாவட்டத் தலைவர்களிடம் சிறு வீடியோ பதிவுகளைப் பெற்று வெளியிடுங்கள், முக்கிய நிகழ்ச்சிகள் அல்லது பிரச்சனைகளைப்பற்றிய ஃபேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் கதைகளை உருவாக்குங்கள்
- உங்கள் சமூக ஊடகப் பதிவுகளில் RIன் பன்னாட்டுப் பக்கங்களை இணையுங்கள், இதன் மூலம் உங்கள் தகவல்கள் பரவலாகச் செல்லும், பன்னாட்டு ரோட்டரி உறுப்பினர்களுக்குக் கிடைக்கும்
- Rotary Showcaseல் திட்டங்கள் மற்றும் படங்களை தரவேற்றுங்கள்.

### பங்களித்தல்: செய்யவேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை

**செய்யவேண்டியவை:** நன்கொடையாளர் தகவல்களுடன் தகவல் குறிப்பு: பெயர்; காசோலை/வரைவோலை எண்ணுக்கு எதிராக ரோட்டரி ID; பரிசுப் பட்டம்; PAN (தொகை என்னவாக இருந்தாலும், ஒவ்வொரு பங்களிப்புக்கும் இது கட்டாயம்); பெருநிறுவனக் கடிதம் (குடும்பத்தால் கட்டுப்படுத்தப்படும் தொழில்/அறக் கட்டளைக் கணக்கிலிருந்து பங்களிப்பு பெறப்பட்டிருந்தால்); ஒவ்வோர் உறுப்பினருக்கும் தனித்தனிக் காசோலை/வரைவோலை; மிகப் பெரிய நன்கொடையாளர் மற்றும் அதற்குமேலிருக்கும் அங்கீகாரங்களுக்குத் தனிப்பட்ட/துணைவர் பங்களிப்புமட்டும்.

**செய்யக்கூடாதவை:** நன்கொடையாளர் தகவல்கள் இல்லாத காசோலைகள்/வரைவோலைகள்; உறுப்பினர்கள் சார்பாகச் சங்கம் வழங்கும் ஒருங்கிணைத்த காசோலை/வரைவோலை; பிற உறுப்பினர் சார்பாகப் பங்களிப்பு.

**முக்கியக் குறிப்பு:**

இணையப் பங்களிப்புகளுக்கு, தயவுசெய்து, என் ரோட்டரி உள்நுழைவை அல்லது உங்கள் அதிகாரப்பூர்வ மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்துங்கள், இதன்மூலம் போலி ID உருவாக்கத்தைத் தவிர்க்கலாம், உங்கள் பங்களிப்புக்குச் சரியான நேரத்தில் அங்கீகாரம் பெறலாம். இத்துடன், சங்கத் தலைவர்கள் தங்களுடைய என் ரோட்டரி உள்நுழைவின் வழியாகப் பயன்படுத்தக் கிடைக்கும் "உறுப்பினர்கள் சார்பாகப் பங்களியுங்கள்" என்ற தெரிவைப் பயன்படுத்தும்போது, நிதியை அனுப்புபவர் பெயரில்தான் 80G ரசீது வழங்கப்படும், தனிப்பட்ட உறுப்பினர்களுடைய பெயர்களில் வழங்கப்படாது. சங்க உறுப்பினர்கள் சார்பாக இணையத்தில் நன்கொடை அளிப்பது எப்படி என்பதுபற்றி மேலும் தெரிந்துகொள்ள, இந்த இணைப்பைக் க்ளிக் செய்யுங்கள்: *http://www.highroadsolution.com/file_uploader2/files/give_online_on_behalf_of_club_or_club_members_instructions.pdf*.

இசையும் & இனிமையும்

# பாப் இசை ராணி ஆஷா!

S R மது

இறந்துவிட்ட ஒரு மனிதனை உயிர்ப்பிக்கும் அளவுக்கு சக்திவாய்ந்த ஒரு பாடல் உண்டு என்றால் அது 1971ம் ஆண்டு வெளியான ஹரே ராமா ஹரே கிருஷ்ணா படத்தில் வரும் "தம் மேரே தம்" பாடல்தான். இந்தப் பாடலை ஆஷா போஸ்லே அவ்வளவு துடிப்பாக பாடியிருக்கிறார் என்று விவரித்தார் கிஷோர் குமார். நடிகர் தேவ் ஆனந்திற்காக, R D பர்மன் இசையமைப்பில் உருவான இந்த பாடல் ஹிப்பி இயக்கத்தின் சர்வதேச கீதமாக அமைந்தது. இது உலகம் முழுவதும் பாப், ஜாஸ், ராக் இசைப்பாடல்களை ஈர்த்தது. பாலிவுட் திரையுலகில் அனைவரையும் உலுக்கியது.

இந்தப் பாடலை முதலில் லதா மங்கேஷ்கர்தான் பாடுவதாக இருந்தது. ஆனால், நடிகர் தேவ் ஆனந்த், இதை ஆஷா போஸ்லே பாடினால்தான் சரியாக இருக்கும் என்று கூறினார். அவரது கணிப்பு சரியாகவே இருந்தது. ஆஷாவின் துடிப்பான பாடல், மங்கிய ஒளிவெள்ளத்தில் நடிகை ஜீனத் அமனின் துள்ளலான நடிப்பு ஆகியவை பாடலுக்கு வெற்றியைத் தேடித்தந்தது.

ஹிந்தி திரைப்பட உலகில் இனிமையான மெல்லிசை பாடல்களின் ராணி, லதா மங்கேஷ்கர் என்றால் இளமை துள்ளும் துடிப்பான பாடல்களின் ராணி, ஆஷா போஸ்லே என்று சொல்லலாம். ஹிந்தி பாடல்களில் ஒரு மாற்றத்தையும் திருப்பு முனையையும் ஏற்படுத்தியவர் ஆஷா. தனது 60 ஆண்டுக்கால திரையுலக வாழ்க்கையில் காரவன் படத்தில் அவர் பாடிய காபரே பாடல் "பியா தூ அப்து ஆஜா" மிகவும் பிரபலமானது. மதுபாலாவுக்காக ஹௌரா பிரிட்ஜ் படத்தில் வரும் "ஆயியே மெஹர்பன்" என்ற பாடலும் ஆஷாவின் சிறந்த பாடல்களில் ஒன்று. தேவ் ஆனந்தின் சிறந்த காதல் பாடலான "அபி நா ஜாவ் சோட்கர்" (ஆஷா-ரஃபி இருவரும் இணைந்து பாடியது) மற்றும் உம்ராவ் ஜான்சுச்சில் வரும் "தில் சீஸ் கியா ஹே ஆப் மெரி" மற்றும் "ஜஸ்டுஜு ஜிஸ்கி தி" உள்ளிட்ட கஜல் பாடல்களும் பிரபலமானவை.

விமல் ராயின் பரினீட்டாவில் ஆஷா பாடிய "கோரே கோர் ஹாத்தான் மெய்ன் மெஹந்தி லகாகே" மற்றும் சுஜாதாவில் அவர் பாடிய பிறந்தநாள் பாடல் "தும் ஜியோ ஹஸாரன் சால்" பாடல், மேரா சாயாவில் அவர் பாடிய "ஜும்கா கீரா ரே" என்னும் ஜிப்ஸி பாடல் மறக்க முடியாதவை. 1963ம் ஆண்டு விமல் ராயின் "பாந்தினி" படத்தில் S D பர்மன் இசையில் ஆஷா பாடிய "அப்கே பராஸ் பெஹ்ஜோ பையா கோ பாபுல்" அனைவரது மனதையும் உருக்கும் வகையில் அமைந்திருந்தது.



முகமது ரஃபி மட்டும் இல்லையென்றால் ஆஷாவை எனக்கு பின்னணி பாடுமாறு கேட்டுக் கொண்டிருப்பேன் என்று ஷம்மிகபூர் ஒரு முறை சொன்னார். கிஷோர் குமார் போன்றவர்கள் நூற்றாண்டுக்கு ஒரு முறைதான் பிறப்பார்கள் என்று ஆஷா ஒரு முறைகூறியதை கிஷோரின் மகன் அமித் குமார் சுட்டிக்காட்டி, “ஆஷாஜி போன்றவர்கள் நூறாண்டுகளுக்கு ஒரு முறைகூட பிறப்பதில்லை” என்று குறிப்பிட்டார். இசையமைப்பாளரின் இசைக்கு தனது குரலால் உயிர்கொடுக்கும் திறன் பெற்றவர் ஆஷா என்று பிரபல இசைக்கலைஞர் அசோக் டா ரானடே ஒரு முறை கூறினார்.



1943ம் ஆண்டு தனது முதல் திரைப்படப் பாடலை பாடியபோது ஆஷாவுக்கு 10 வயது. இன்று அவருக்கு 87 வயது. ஏறக்குறைய 20 மொழிகளில் 13,000த்துக்கும் மேலான பாடல்களை அவர் பாடியுள்ளார். சிலர் அவர் 20,000 பாடல்களைப் பாடியுள்ளதாகக் குறிப்பிடுகின்றனர். பாப், கஜல், பஜனைப்பாடல்கள், கவாலி பாடல்கள், நாட்டுப்புற பாடல்கள், பாரம்பரிய பாடல்கள் மற்றும் ரவீந்திர சங்கீத் ஆகிய பாடல்களும் இதில் அடங்கும். பத்மபூஷண் (2008), தாதா சாகேப் பால்கே விருது (2000), பிபிசியின் வாழ்நாள் சாதனை யாளர் விருது (2002), இரண்டு தேசிய விருதுகள் (உம்ராவ் ஜான்-1981) மற்றும் (இஜாஸத் (1987) மேரா குச் சாமன் என்ற பாடல்). 7 முறை பிலிம்பேர் விருதுகளைப் பெற்றுள்ளார். 2001ம் ஆண்டு பிலிம்பேர் வாழ்நாள் சாதனையாளர் விருதும் இவருக்கு வழங்கப்பட்டது.

காபரே நடனப் பாடல், பாப் இசைப் பாடல்களைப் பாடுபவர் என்று ஆஷா முத்திரை குத்தப்பட்டாலும் ஹிந்தி திரையுலகில் ஓர் மாற்றத்தையும் புதுமையையும் ஏற்படுத்திய பெருமை ஆஷாவுக்கு உண்டு.

ஆனால், ஆஷாவைப் போல சில பாடகர்கள்தான் தனிப்பட்ட வாழ்க்கையிலும் தொழில் ரீதியாகவும் துன்பங்களை அனுபவித்திருப்பார்கள். அதேபோல ஒரு சிலர்தான் தங்கள் மீதான தவறான அபிப்பிராயங்கள் மற்றும் பின்னடைவையும் மனஉறுதியுடன் எதிர்கொண்டிருப்பார்கள்.

நானும் கிஷோர்குமாரும் அப்போது முகம் தெரியா தவர்கள். பின்னணி குரல் கொடுக்க மிகவும் கஷ்டப்பட்டோம். ஒரு முறை இசை



R D *பர்மனுடன்.*

யமைப்பாளர் கெம்சந்த் பிரகாஷ், பாடல் பதிவு ஒத்திகைக்காக என்னையும் கிஷோரையும் அழைத்தார். பின்னர் நாங்கள் நிராகரிக்கப்பட்டோம். இரவு நேரத்தில் மகாலெட்சுமி ஸ்டேஷனுக்கு நாங்கள் நடந்து சென்றபோது எங்கள் வாழ்க்கையே இருண்டுவிடும் போல் இருந்தது. இதுபோன்ற பல தருணங்களை சந்தித்திருக்கிறேன் என்கிறார் ஆஷா.

ரவி மற்றும் கய்யாம் ஆஷாவுக்கு சில வாய்ப்புகளைக் கொடுத்தாலும், A R ரஹ்மான் 1995ல் ரங்கீலா படத்தில் ஆஷாவின் திரை வாழ்க்கையில் புதிய திருப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தாலும், ஹிந்தி திரை யுலகில் ஆஷா பின்னணிப் பாடகியாக வலம் வந்ததற்கு S D பர்மன், O P நய்யார் மற்றும் R D பர்மன் ஆகிய மூன்று இசையமைப்பாளர்கள்தான் முக்கிய காரணம்.

ஹிந்தி திரையுலகில் பின்னணிப் பாடகியாக அவர் நுழைந்தாலும் 1957 வரை அவரது பயணம் சிரமம் நிறைந்ததாகவே இருந்தது. 16 வயதில் தன்னைவிட 16 வயது மூத்தவரான பக்கவீட்டுக்காரரான கண்பத்ராவ் போஸ்லே என்பவரை எதிர்ப்புகளுக்கிடையே திருமணம் செய்துகொண்டார் ஆஷா. இதுவும் அவரது கலைப் பயணத்தில் பாதிப்பை ஏற்படுத்தியது. தொழில்முறையில் ரேஷன் இன்ஸ்பெக்டரான கண்பத் ராவ், பாடகி ஆஷாவின் திறமைகளைப் பயன்படுத்திக் கொண்டார். வீட்டில் இருந்த தொலைபேசியை அகற்றினார். ஆஷாவுடனேயே ஸ்டூடியோவுக்கு பின் தொடர்ந்தார். ஆஷாவின் பாடல் பதிவுக்கு அவரே கட்டணங்களை நிர்ணயித்தார்.

இந்த சமயத்தில் லதா பிரபலமான பின்னணிப்பாடகியாக உருவானார். இசையமைப்பாளர் களும், படத் தயாரிப்பாளர்களும் அவரைத் தேடிவந்தனர். இந்தச் சூழலில் மற்றவர்கள் நிராகரித்த பாடல்களைத்தான் ஆஷா பாட வேண்டி வந்தது. இவை பெரும்பாலும் கிளப் டான்ஸ் பாடல்கள்தான் (கவர்ச்சி நடிகை ஹெலன் நடித்தது), ஆனாலும் லதாவுக்கு அடுத்த இரண்டாவது இடம் என்று இல்லாமல் தனக்கென ஒரு இடத்தை பிடிப்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

1957ல் அவருக்கு ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. S D பர்மன் இசையமைப்பில் தேவ் ஆனந்தின் இரண்டு படங்களுக்கு அங்கோன் மெய்ன் கியா ஜி (நா தே கியாராவில் கிஷோருடன்), சூட் தோ ஆஞ்சல் (பேயிங் கெஸ்ட் படத்தில் கிஷோருடன்) பாடும் வாய்ப்பு கிடைத்தது. இந்த இரண்டு பாடல்களுமே பிரலமாகி ரசிகர்களால் விரும்பப்பட்டது.

**மாற்றத்தை ஏற்படுத்திய படம்:**
ஆனால், அவரது வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்திய படம் 1957ல் வெளியான “நயா தர்”. இந்தப் படத்தின் கதாநாயகி வைஜயந்திமாலா, கதா நாயகன் திலீப்குமார். படத்தை தயாரித்தவர் B R சோப்ரா. O P நய்யார் இசையமைப்பில், ஆஷா-ரஃபி பாடிய “மாங் கே சாத் துமாரா” பாடலை முணுமுணுக்காதவர்களே இல்லை என்று சொல்லலாம்.

O P நய்யார், எனக்கு சக்தி வாய்ந்த, அடிநாதத்திலிருந்து பாடும் திறமையான குரல் தேவை என்பார். அதை அவர் ஆஷாவிடம் கண்டார். இருவரும் சேர்ந்து 324 பாடல்களை உருவாக்கினர்.

1960ம் ஆண்டு ஆஷா. தனது இருகுழந்தைகளான ஹேமந்த் மற்றும் வர்ஷாவுடன் கணவரை விட்டுப்பிரிந்தார். அந்த சமயத்தில்அவர் மூன்றாவது குழந்தைக்காக கர்ப்பமாக இருந்தார். குடும்பத்துக்காக அவர் தனது சேமிப்பை கரைக்க வேண்டியிருந்தது. காரையும் விற்கநேர்ந்தது. 60களின்





*லதா மங்கேஷ்கருடன்.*

நடுவில் ஆஷா, O P நய்யாருடன் சேர்ந்து வாழ்ந்தார். காதலுடன் இசையும் மலர்ந்தது. ஆஷாவும் பிரபலமானார்.

O P நய்யாரின் நிழலில் ஆஷா சில அருமையான தனிப்பாடல்களைப் பாடினார். ''ஆயீயே மெஹர்பன் பூச் சோநா ஹமே ஹம் உன்கே லியே'' (மிட்டிமெய்சோனா, 1963), மனதைக் கிளரும் ''ஜாய்பீ ஆப் கஹான் ஜாயேங்கே'' (மேரிசனம், 1964) இரண்டுமே பெண்களுக்கான காதல் பாட்டுகள். 1962ல் ''ஏக் முஸாஃபர் ஏக் ஹஸீனா'' மற்றும் 1964ல் ''காஷ்மீர் கி காளி'' ஆகிய இரண்டு டூயட் பாடல்களும் ரசிகர்கள் மனதில் இடம்பிடித்தவை. ''ஆவோ ஹஸீர் தும்கோ'' (கிஸ்மத், 1968, படம் பபிதா) இந்த பாடலும் ஹிட்டானது.

இந்த நிலையில் 1972ம் ஆண்டு ஆஷா, திடீரென நய்யாருடன் இணைந்து செயல்படுவதை நிறுத்தினார். வயதுக்கு வந்த தனது மகள் வர்ஷாவை நய்யார் ஒரு முறை அடித்துவிட்டார். இதையடுத்து பட்டது போதும் என்று அவரைப் பிரிந்தார் ஆஷா. O P நய்யாருக்காக 1972ம் ஆண்டு ஆஷா ''செயின் ஸே ஹம் கோ கபி'' பாடல் (படம் பிரான் ஜாயே பர் வாசன் நா ஜயே 1972) என்ற பாடலைப் பாடினார். அந்த பாடலுக்கு பிலிம்பேர் விருது கிடைத்தது. ஆனால், O P நய்யார் மேல் இருந்த கோபத்தால் சிறந்த பின்னணிப் பாடகிக்கான அந்தவிருதை பெற்றுக்கொள்ள மறந்துவிட்டார் ஆஷா.

**ஆஷாவும், R D பர்மனும்:**

S D பர்மன், தனது மகன் R D பர்மனை (பஞ்சம் என்று செல்லமாக அழைப்பார்கள்) ஆஷாவுடன் ''நவ் தோ கியாரா'' படத்தின் பாடல் பதிவு ஒத்திக்கைக்காக நியமித்தார். இது ஆஷாவுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியது. ஆனால், விரைவிலேயே R D பர்மனை தனித்தன்மையையும், அவரது திறமைகளையும் மதிக்க கற்றுக்கொண்டார் ஆஷா.

1966ல் தீஸ்ரி மன்ஸில் படத்தில் வழக்கத்துக்கு மாறான பாடல்கள் மற்றும் இசையுடன் தனது திறமையை பஞ்சம் நிரூபித்தார். தீஸ்ரி மன்ஸில் படத்தில் ஆஷா பாடிய ''ஓ மேரே ஸோனா ரீ ஸோனா ரீ ஸோனா'' சாதாரண மக்களிடம் மட்டுமல்ல, அவரது விமர்சகர்களே பாராட்டும் படியாக இருந்தது. இதைத் தொடர்ந்து ஆஷா-பஞ்சம் இணைந்து செயலாற்றினர். ''பியா தூ அப்து ஆஜா'' (காரவன்-1971), ''தம் மேரே தம்'' (ஹரே ராமா, ஹரே கிருஷ்ணா), மனதை கிளர்ந்தெழச் செய்யும் சுராலியா-யாதோங்கி பாரத்-1973) பாடல்கள் வெற்றிப்பாடல்களாக அமைந்தன.

1979ல் இருவரும் திருமணம் செய்துகொண்டு தங்களது வலுவான பிணைப்பை வெளிப் படுத்தினர். பல ஆண்டுகளாக பஞ்சம் எனக்கு அநாமதேயமாக



*கிஷோர் குமாருடன்*

கணவர் R D பர்மனுடன்.



பூங்கொத்துகளை அனுப்பி வந்துள்ளார். ஒருநாள் பாடலாசிரியர் மஜ்ரூசாஹிப் மற்றும் பஞ்சம் முன்னிலையில் எனக்கு ஒரு பூங்கொத்து வழங்கப் பட்டது. யாரோ ஒரு முட்டாள் ரோஜாக்களை எனக்கு அனுப்பி வீணாக்குகிறார் என்று நான் கோபத்தில் சொன்னபோது பஞ்சம் முகம் வாடிப்போனது. உடனே மஜ்ரூ சாஹிப் சிரித்துக்கொண்டே, அந்த முட்டாள் வேறு யாரும் அல்ல, பஞ்சம்தான் என்று சொன்னார் என ஆஷா ஒரு பத்திரிகை பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

நான் ஆஷாவைத் திருமணம் செய்துகொள்ளவில்லை. அவரது குரலைத்தான் திருமணம் செய்து கொண்டேன் என்றார் பஞ்சம். அது இசை மற்றும் நட்பும் துணையம் சேர்ந்த திருமணம். அவர்கள் இருவருக்குமே இசையில் அதிக ஈடுபாடுகள் இருந்தன.

### தொடர் துயரங்கள்:

1994ம் ஆண்டு பஞ்சம் இறந்த போது ஆஷா நிலைகுலைந்து போனார். மேலும் துயரங்கள் தொடர்ந்தன. 2012ம் ஆண்டில் ஆஷா சிங்கப்பூரில் இருந்தபோது மகள் வர்ஷா 56 வயதில் தற்கொலை செய்துகொண்டார். 2015ல் மகன் ஹேமந்த் 66 வயதில் ஸ்காட்லாந்தில் புற்று நோய் காரணமாக உயிரிழந்தார்.

பஞ்சம் மறைவுக்குப் பிறகு 13 ஆண்டுகள் அவரது தாயாரை ஆஷா கவனித்துக்கொண்டார். தன்னுடைய முதல் கணவர் கணபத்ராவ் போஸ்லேயின் தாயாரையும் நான்கு ஆண்டுகள் கவனித்துக் கொண்டார்.

1996ல் “Rahul and I” என்று தாம் R D பர்மனுடன் பாடிய பாடல்களை ஒரு கலவையாகத் தயாரித்து ஆல்பமாக வெளி யிட்டார் ஆஷா. இதில் அவருக்கு விருப்பமில்லை என்றாலும் வேறு யாரும் இதைச் செய்துவிடக்கூடாது என்பதற்காக இந்த ஆல்பத்தை தயாரித்தார்.

### சர்வதேச நிகழ்ச்சிகள், கூட்டுறவுகள்:

1980களிலும் 1990களிலும் ஆஷா, அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட உலக நாடுகளுக்குச் சென்று பலவேறு இசைநிகழ்ச்சிகளை நடத்தினார். சர்வதேச அளவில் இசையில் கூட்டுறவு வைத்துக் கொண்டு அவர் பாடிய பாடல்கள் வெளிநாடுகளில் பிரபலமாயின. 1991ம் ஆண்டு பிரிட்டிஷ் பாடகரும், பாடலாசிரியருமான பாய் ஜார்ஜ், Boy George Sings, Bow Down Mister என்ற தலைப்பில் ஒரு பாடலைத் தயாரித்தார். இது மகாபாரதத்தின் வண்ணமயமான காட்சியமைப்புகளுடன், பகவத் கீதையின் வசனங்களை ஆஷா


மொஹமது ரபிஃயுடன்.



*ஹெலன், மதுபாலா, வைஜயந்திமாலா — இவர்களுக்கு ஆஷா நிறைய பாடல்கள் பாடியுள்ளார்.*

சொல்வது போல் இருந்தது. இந்தியாவின் ஆன்மிகத்தை பாய் ஜார்ஜ் ஆங்கிலத்தில் விளக்குவது போல் அது அமைந்திருந்தது.

1997ம் ஆண்டு பிரிட்டிஷ் இசைக்குழுவான கார்னர்ஷாப், ஆஷாவுக்கு சர்வதேச அளவில் வெற்றியைத் தேடித்தந்த "Brimful of Asha" பாடலை இசைத்து அவருக்கு மரியாதை செய்தது. நான் ஒரு முறை ஹீத்ரூ விமானநிலையத்தில் குடியேற்றத்துறை கவுன்டர் முன்பு நின்றுகொண்டிருந்தபோது இளம் அதிகாரி ஒருவர், பிரிம்புல் ஆப் ஆஷா பாடலைப் பாடியது நான்தான் எனத்தெரிந்து கொண்டு என்னுடன் உற்சாகமாக பேசியதுடன், தனது நண்பர்களையும் என்னை சந்திக்க அழைத்துவந்தார். இது என்னால் மறக்க முடியாது என்று என்கிறார் ஆஷா.

நான் மட்டும் இசைத் துறைக்கு வந்திருக்காவிட்டால் சமையல்காரியாக இருந்திருப்பேன் என்று ஆஷா அடிக்கடி கூறுவார். சமையல் இதயத்திலிருந்து வருகிறது. இசையை ரசிப்பதைப் போலவே சமையலையும் மற்றவர்கள் ரசிக்க வேண்டும் என்பார் ஆஷா.

### ஆஷா கீ ஆஷா:

ஆஷா திரையுலகில் "பாடத் தொடங்கியதிலிருந்து ஒவ்வொரு பத்தாண்டு காலத்திலும் மும்பை இசை உலகை மேன்மைபடுத்தி வந்துள்ளார். இப்போது ஆன்லைன் மூலம் இசைப் போட்டிகளை நடத்தி எதிர்காலத்தில் மும்பை திரையுலகத்தில் இசையை மேலும் மேம்படுத்த திட்டமிட்டு செயல்பட்டு வருகிறார். இதற்கென "ஆஷா கி ஆஷா" என்ற தலைப்பில் போட்டிகளை நடத்தி வருகிறார். இசையில் ஆர்வம் உள்ளவர்கள் தங்களின் இரண்டு நிமிட பாடல்கள் அடங்கிய விடியோவை அவரது இணையதளத்தில் பதிவேற்றம் செய்தால், சிறந்த, இனிமையான குரலுக்கு ரூ.1,00,000 பரிசாக வழங்கப்படும். இதர தேர்ந்தெடுக் கப்பட்ட சிறந்த குரல்கள் யூடியூப் மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலம் விளம்பரப்படுத்தப்படும்.

எனது 70 ஆண்டுக்கால அனுபவத்தை இளைஞர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கும் அதிலிருந்து எனக்கு கிடைத்ததை மீண்டும் இசைக்கு வழங்குவதற்கும் இதுதான் சரியான சந்தர்ப்பம் என்கிறார் ஆஷா.

### சக பாடகர்கள் பற்றி

ஆஷா ஒரு பேட்டியில், தன்னுடன் இணைந்து பாடிய (டூயட்) மூத்த பின்னணிப் பாடகர்கள் பற்றி இப்படிக் கூறினார். முகமது ரஃபி: எந்தப் பாடாலனாலும் அதில் ஒரு ஒழுங்குமுறையை கடைபிடிப்பவர். மன்னாடே: கர்நாடக இசையை முறையாகப் பயின்ற பின்னணிப் பாடகர். கிஷோர்குமார்: காற்றினிலே வரும் கீதம். அவரை யாராலும் வீழ்த்த முடியாது. நானும் கிஷோரும் ஒத்த கருத்துடையவர்களாக இருந்ததால் நாங்கள் இணைந்து பல சாதனைகளைப் புரிய முடிந்தது. எங்களுக்கு ஏற்பட்ட சோதனை களைக்கண்டு நாங்கள் அஞ்ச வில்லை. எல்லா பாடகர்களும் ஒருவிதத்தில் நடிகர்கள்தான். எங்கள் குரல் மூலம் நடிக்கிறோம் அவ்வளவுதான்! என்கிறார் ஆஷா. அது உண்மைதானே!

### எடிட்டருக்கு பிடித்தது

- *ஆப் கே பராஸ் பெஹோ பையா கோ பாபுல்*
- *மாங் கே ஸாத் துமாரா*
- *ஆங்கோன் மே கியா ஜி*
- *தில் சீஸ் கியா ஹை, ஆப் மேரி ஜான் லீஜியே*
- *தீவானா ஹுவா பாதல்*
- *ச்சோட் தோ ஆஞ்சல்*

கட்டுரையாளர் RC மெட்ராஸ் சவுத் உறுப்பினர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

Wordsworld

# Games People Play

**Sandhya Rao**

In the backdrop of the Indian cricket team winning the recent Test series in Australia, thus lifting spirits, it is logical to showcase a cricket-related book. I have picked *The Commonwealth of Cricket* by Ramachandra Guha, a personal memoir by a historian with a passion for the game. As the author description on the jacket flap says, 'He says he writes on history for a living; and on cricket to live.' A few years ago, I had read his *A Corner of a Foreign Field: The Indian History of a British Sport* practically at one go. Constructed on a foundation of solid research, sound argument and felicitous writing, that's a book anyone can, should, read: you don't need to be a cricket aficionado. Just as you don't have to be a rifle shooter to read *A Shot at History*, the story of Abhinav Bindra brilliantly written by journalist Rohit Brijnath.

*The Commonwealth of Cricket*, however, requires some degree of familiarity and interest in the game because much of it is about Guha's own 'real action' engagement with the game as a school boy and university student.

Those who have read him know that he takes the fight to the front. 'I am by nature and instinct an anti-Establishment man,' he writes in this book. 'I left the academy 30 years ago, and have since had no allegiance to a formal institution. I could not cope with working in a university, and would have found it impossible to work in a newspaper or corporate office. I have never been a member of a political party. The Friends Union Cricket Club is an exception to this rule, but there is nothing formal about this lone institution to which I belong. The FUCC has no office, owns no property, and has no paid employees.'

You may ask what the connection is between cricket, politics, twitter and being anti-establishment. Guha is the connection. Woven into this book which is on the one hand a journey down memory lane with all the fine print intact, including who scored how many runs and who took how many wickets, is a ringside view of the games people play when they play games. But be warned: it takes patience to get to those bits.

Be prepared for juicy stories, facts and all. The outside stories concern Guha's personal cricketing on-field achievements, or rather, non-achievements, by his own admission. The inside stories are analytical, insightful, and definitely distressing, even though it's no secret that sporting organisations in India are rife with nepotism and corruption. There are a few brave ones still standing, but these are few, too few. Guha's person of such standing is the redoubtable left-arm spinner Bishen Singh Bedi whom he refers to several times in the book. The author revives memories of several moments and personalities in the cricketing history of this game as he revisits different eras and the prodigious talent and prowess of cricketers from his club, state, country and other parts of the world.

While reading, I experienced several moments of *déjà vu*. I remember the last time the maverick Pakistani cricketer Javed Miandad appeared for Pakistan in an ODI; it was a match against India, a World Cup fixture in Bengaluru. The image of him walking off the field after he got out, turning back every now and then to look at the pitch as if to imprint the picture in his mind… that television image remains vivid in my mind. I remember standing up to applaud him in my living room, not because he was my

> "One of the most interesting bits of cricket's political history that Guha sheds light on relates to the Lodha Committee.



> I couldn't cope with working in a university, and would have found it impossible to work in a newspaper or corporate office. I've never been a member of a political party.
>
> **— Ramachandra Guha**

favourite but because he had dared so much. Guha refers to this very moment in the book as he recalls that match: 'Nine an over were required when he was run out by a direct hit. When he walked off the ground I stood up to applaud him. "Why are you clapping?" asked an obnoxious fellow from a row behind. "You should clap too," I answered, recklessly. "This is the last time any of us will see him bat." "Thank God I shall never see the bastard again," came the reply. How did I think that an uncertain internationalism would be equal to a single-minded patriotism?'

One of the most interesting bits of cricket's political history that Guha sheds light on relates to the Lodha Committee. In the wake of several public interest litigations after the match-fixing scandals and instances of conflict of interest exacerbated by the IPL, the Supreme Court set up a three-man committee headed by a former chief justice, R M Lodha to clean up Indian cricket. This committee in turn set up a Committee of Administrators (COA) and invited the author as a member. Guha recounts the experience of engaging with Rahul Dravid on the question of conflict of interest, which is insightful. He refers to an email he wrote to Dravid who, at the time, was coaching the India 'A' team and during the IPL was coach of the Delhi Daredevils, and the resulting stand-off between the two. Luckily this was bridged thanks to the cricketer taking on board some good advice from a mutual friend, the former England captain Mike Brearley.




Individuals, institutions, everything comes under the glare of Guha's keen study and astute analysis — and this includes himself. He describes with candour the less than cordial nature of his relationship with the original Little Master, Sunil Gavaskar, even as he holds nothing back in praising Sunny's remarkable achievements on the playing field. The tension between them had a lot to do with the questions Guha raised as a member of the COA.

He also makes bold to spell out what many, at the time, may have thought but did not voice. A former cricket captain, Vijay Merchant, had once famously said one should quit at the right time, when people ask why and not why not. 'He stayed on, and on,' Guha says of SachinTendulkar, and wishes that 'Tendulkar had taken his cues from Merchant and Gavaskar instead. It was not just that he kept going beyond his prime, but that in his (as it were) cricketing dotage he took the cricketing public for granted.'

There's plenty to enjoy and assimilate in *The Commonwealth of Cricket*, among them some quirks such as lists of Guha's dream teams, from a Karnataka XI to an eleven of Indian cricketers he has shaken hands with, to an eleven of his favourite Pakistani cricketers he has seen play, to a similar eleven comprising Indian players, to a joint All-Time Indo-Pak XI. There's just one regret though: I grew up in the small industrial town of Durgapur in West Bengal. Come cricket season (or Davis Cup tennis) my father, who had been a keen cricketer in his college days in Coimbatore, would assign me the task of listening to the radio commentary and relaying to him all that had happened when he returned from work. Perhaps that's what got me interested in sport, and cricket and tennis in particular. I wish my father was alive to read this book. He would have loved it.

*The columnist is a children's writer and senior journalist.*

Designed by Krishnapratheesh S

# Membership Summary

(As on February 1, 2021)



## Rotary at a glance

| | |
|---|---|
| Rotary clubs : 36,490 | Rotary members : 1,182,601 |
| *Rotaract clubs : 8,656 | *Rotaract members : 217,162 |
| Interact clubs : 15,681 | Interact members : 359,214 |
| RCCs : 11,580 | *As on 17 February 2021* |
| | **As on 19 February 2021* |




*Source: RI South Asia Office*

# On the racks










## The Gilded Ones

Author : **Namina Forna**
Publisher : **Delacorte**
Pages : **432; ₹1,545**

A unique and female-centred fantasy, this is the story of Deka who has spent the first sixteen years of her life attempting to master the docility and obedience expected from a 'pure girl' whose blood must run red instead of the cursed gold in order to stay in her village and be included in her community. If otherwise, this could lead to the death of her father and herself at the hands of their kin. When she finds out, and so does the village, that her blood is gold, she is guided by an unknown woman to a land where she meets girls as special as herself and prepares for a battle to end the patriarchy and ring in the good times for the gold-blooded line.

## Dispatches from Sowparnika

Author : **Usha Kumar**
Publisher : **Notion Press**
Pages : **242; ₹298**

This book is a microcosm of the passage of human life. With stories of people and places, it's a compilation of everyday experiences as perceived by the author. It takes the readers on a fascinating journey through thumbnail sketches and vignettes. The versatility of the book lies in every narrative being first-hand and lovingly dealt with, be it about family, cities or just musings. The chapter *An Ode to My Mother* is beautifully and lovingly penned; *The Only Kilo* is about the few things she'd take if caught in something like the great Chennai floods; *A Sliver of History* gives you an insight into indentured labour; *Adieu* on a lighter note is about the dear old Ambassador car; and the pachyderm Guruvayur Kesavan is the focus in *Blessed*. The book is a compelling, heartening and ebullient read and will surely leave readers reflecting on the many forgotten times, places and people in their lives.

## The Four Winds

Author : **Kristin Hannah**
Publisher : **St Martin's Press**
Pages : **464; ₹1,780**

The book is set in Texas in the year 1921 when the dust storms damaged the ecology and agriculture of the American prairies. The stock market crash at the same time led to the Great Depression. In the middle of it all, Elsa and her family have to make a choice to either remain in their farm and fight for their land or head west to California for a better life. Elsa is a true fighter, she gives up the comfort of her maternal home when she becomes pregnant with the child of a man who does not care for her and is forced to marry him. With the support of her parents-in-law Rose and Tony, the protagonist comes to realise how tough, brave, and kind-hearted she is. She then guides her family through the toughest decision they have to make. Incidentally, farmers from the drought-stricken Dust Bowl and workers from the cities all converge in California looking for jobs. Could this be a new beginning for Elsa and her children or could it be worse?

Compiled by Kiran Zehra

# District Wise TRF Contributions as on January 2021

(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus | Endowment Fund | Other Funds | Total Contributions | EREY Donors (in numbers) | EREY % |
|---|---|---|---|---|---|---|---|
| **India** | | | | | | | |
| 2981 | 41,501 | 3,928 | 12,128 | 0 | 57,557 | 187 | 3.8 |
| 2982 | 23,865 | 16,146 | 20,770 | 43,358 | 104,139 | 76 | 2.5 |
| 3000 | 44,937 | 17,296 | 20 | 8,700 | 70,954 | 60 | 1.2 |
| 3011 | 49,176 | 10,571 | 40,653 | 180,216 | 280,617 | 97 | 2.7 |
| 3012 | 10,808 | 2,480 | 0 | 8,532 | 21,820 | 47 | 1.3 |
| 3020 | 132,261 | 52,206 | 32,000 | 2,726 | 219,193 | 251 | 6.2 |
| 3030 | 26,596 | 2,284 | 22,743 | 128,275 | 179,899 | 76 | 1.5 |
| 3040 | 4,087 | 222 | 0 | 566 | 4,874 | 18 | 0.9 |
| 3053 | 9,733 | 3,268 | 0 | 92,289 | 105,289 | 28 | 1.0 |
| 3054 | 71,534 | 1,647 | 0 | 127,033 | 200,214 | 256 | 4.2 |
| 3060 | 44,422 | (34) | 32,641 | 109,902 | 186,931 | 882 | 20.2 |
| 3070 | 26,095 | 746 | 0 | 36,746 | 63,587 | 191 | 6.1 |
| 3080 | 45,756 | 12,661 | 0 | (19,761) | 38,656 | 103 | 3.1 |
| 3090 | 28,905 | 500 | 0 | (736) | 28,669 | 86 | 3.9 |
| 3100 | 44,249 | 252 | 0 | 4,224 | 48,725 | 159 | 7.1 |
| 3110 | 20,279 | 200 | 0 | 0 | 20,479 | 42 | 1.1 |
| 3120 | 5,688 | 1,769 | 0 | 3,020 | 10,477 | 60 | 1.8 |
| 3131 | 96,599 | 40,795 | 109,000 | 395,483 | 641,877 | 493 | 9.6 |
| 3132 | 19,092 | 2,615 | 5,000 | 1,935 | 28,641 | 45 | 1.3 |
| 3141 | 314,368 | 42,294 | 70,568 | 823,956 | 1,251,185 | 605 | 11.4 |
| 3142 | 166,021 | 11,971 | 101 | 73 | 178,167 | 445 | 13.9 |
| 3150 | 40,352 | 8,690 | 98,044 | 34,352 | 181,438 | 391 | 11.8 |
| 3160 | 14,268 | 7,564 | 16 | 0 | 21,849 | 35 | 1.4 |
| 3170 | 17,866 | 20,885 | 1,240 | 132,426 | 172,417 | 67 | 1.2 |
| 3181 | 29,224 | 3,300 | 0 | 7,050 | 39,573 | 126 | 3.8 |
| 3182 | 45,352 | 4,312 | 0 | 15,953 | 65,617 | 174 | 5.6 |
| 3190 | 72,854 | 44,313 | 25,000 | 112,074 | 254,241 | 497 | 9.9 |
| 3201 | 63,193 | 25,177 | 0 | 178,367 | 266,736 | 372 | 6.7 |
| 3202 | 35,200 | 21,557 | 8,468 | 20,272 | 85,498 | 117 | 2.2 |
| 3211 | 12,371 | 3,441 | 0 | 123,736 | 139,548 | 60 | 1.3 |
| 3212 | 15,762 | 35,185 | 14 | 108,733 | 159,694 | 25 | 0.6 |
| 3231 | (249) | 359 | 0 | 18,110 | 18,221 | 5 | 0.1 |
| 3232 | 25,458 | 34,350 | 2,000 | 417,089 | 478,896 | 116 | 2.0 |
| 3240 | 74,311 | 21,780 | 0 | 49,328 | 145,418 | 183 | 6.0 |
| 3250 | 30,490 | 4,140 | 0 | 565 | 35,195 | 226 | 6.1 |
| 3261 | 81,485 | 1,108 | 0 | 8,360 | 90,954 | 30 | 1.1 |
| 3262 | 26,594 | 2,649 | 0 | 0 | 29,243 | 76 | 2.1 |
| 3291 | 36,135 | 7,449 | 10,149 | 56,626 | 110,359 | 68 | 1.9 |
| **India Total** | **1,846,638** | **470,075** | **490,555** | **3,229,578** | **6,036,846** | **6,775** | **4.6** |
| 3220 **Sri Lanka** | 140,346 | 19,756 | 26,000 | 15,015 | 201,118 | 218 | 11.4 |
| 3271 **Pakistan** | 6,206 | 97,191 | 0 | 246,533 | 349,930 | 3 | 0.2 |
| 3272 **Pakistan** | 50,948 | 15,221 | 0 | 1,168 | 67,337 | 272 | 16.2 |
| 3281 **Bangladesh** | 133,670 | 6,645 | 29,000 | 233,288 | 402,603 | 391 | 5.5 |
| 3282 **Bangladesh** | 51,244 | 5,707 | 0 | 7,770 | 64,722 | 104 | 2.5 |
| 3292 **Nepal** | 143,577 | 9,317 | 0 | 203,431 | 356,326 | 1,439 | 29.1 |
| South Asia Total | **2,372,630** | **623,912** | **545,556** | **3,936,783** | **7,478,880** | **9,202** | **5.4** |

Source: RI South Asia Office

# உடலை வறுத்தும் உடற்பயிற்சிகள் வேண்டாமே

ஷீலா நம்பியார்

அவள் சோர்வுடன் எழுந்து மங்கலான வெளிச்சத்தில் தனது கைபேசியிலிருந்து அலாரம் ஒலிப்பதை பார்க்கிறாள். அவள் காலை 6 மணிக்கு உடற்பயிற்சி நிலையத்தில் (ஜிம்) இருக்க வேண்டும். இது அவளின் பயிற்சியாளரின் உத்தரவு. தினமும் காலையில் சரியான நேரத்தில் உடற்பயிற்சி நிலையத்தில் இருக்கவேண்டும். இல்லாவிட்டால்... இல்லாவிட்டால் என்ன? என்ன நடக்கும் என்று அவளுக்குத் தெரியாது. ஆனால், வேறு வழியில்லாமல் படுக்கையிலிருந்து எழுந்தாலும் தள்ளாட்டத்துடனேயே பாத்ரூமுக்குள் சென்றாள்.

அவள் காலை 6.20 மணிக்கு உடற்பயிற்சி நிலையத்தை அடைந்தாள். ஆனால், முதல்நாள் செய்த அதிக வேலை காரணமாக அவளது உடலில் வலியும், சோர்வும் இருந்தது. அங்கேயே தரையில் படுத்து தூங்கிவிடலாமா என்ற எண்ணமும் இருந்தது. ஆனால், அவரது பயிற்சியாளர் ஹிட்லரைப் போல மிகவும் கண்டிப்பானவர். அவர் வேண்டுமென்றே அவளுக்கு கடுமையான பயிற்சிகளைச் செய்யச்சொல்லி கட்டளையிட்டுக் கொண்டிருந்தார். அவள் தூக்க மின்மையால் சோர்வாக இருந்தாள்.

அன்றைய தினத்தின் பிற்பகுதியில் அவள், ஒரு உணவியல் நிபுணரை சந்தித்தாள். நடுக்கம், முணுமுணுப்புடன் எடைகாட்டும் இயந்திரத்தில் ஏறி நிற்கிறார். கொழுப்பு அதிகமாக இருக்கு என்று சொல்லி விடுவார்களோ என்று பயப்படும் அறிகுறி அவள் முகத்தில் தெரிந்தது. எடையளவு நூறுகிராம் மட்டுமே நகர்ந்தது. அடுத்த ஒருவாரம் வரை அவள் ஒரு நாளைக்கு ஒரு கவளம் மட்டுமே சாப்பிட அனுமதிக்கப்பட்டாள். மயக்கம் வந்தால்கூட இந்த உணவு அளவை தாண்டக்கூடாது என்று சொன்னது அவளுக்கு சிரமமாக இருந்தது.

இந்தப் படத்தில் ஏதேனும் தவறு இருக்கிறதா? அல்லது இது நானா? இப்படி தண்டிக்கும் வகையில் அதிப்படியான உடற்பயிற்சி மற்றும் பட்டினி கிடக்கும் நிலை தேவைதானா? உண்மையில் உடல் எடையைக் குறைக்க சரியான மற்றும் வெற்றிகரமான வழிகள் இருக்கும்போது நீங்கள் ஏன் உங்களை சித்ரவதைக்குள்ளாக்குகிறீர்கள். இத்தகைய முட்டாள்தனத்தை நம்புவதற்கு எது உங்களைத் தூண்டு கிறது? உங்கள் உடலை சரியாக வைத்துக்கொள்ள நீங்கள் ஏன் இங்கும் அங்கும் ஓடவேண்டும். உங்களிட மிருந்து முற்றிலும் வேறுபட்ட உடலமைப்பு கொண்ட பெண்ணுடன் ஏன் நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்கிறீர்கள். அவரைப்போல உடலமைப்பு வேண்டும் என்றும் அவர் செய்யும் பயிற்சிகளை செய்ய வேண்டும் என்று ஏன் நினைக்கிறீர்கள். அவரது பயிற்சியாளரே வேண்டும், அவர் கடைப்பிடிக்கும் உணவுக் கட்டுப்பாடு களையே பின்பற்ற வேண்டும் என்று ஏன் நினைக்கிறீர்கள். அதன் மூலம் எதிர்பார்க்கும் உடல்கட்டமைப்பை எட்ட முடியும் என்று நினைக்கிறீர்களா?

உங்களால் அது முடியாது. உங்கள் உடலுக்கு மாறுப்பட்ட தேவைகள் இருக்கலா ம். உங்களுக்கு உண்மையில் தேவைப்படுவது மனஅழுத்த மேலாண்மை. மேலும் அதிக ஆரோக்கியமான உணவும், நல்ல தூக்கமும். இதைச் செய்யாமல் உங்கள் பிரச்னைக்குத் தீர்வுகாண முடியாது. உங்களது நோய்க்கானத் தன்மையும், உடல் எடையும் முற்றிலும் மாறுபட்டது. அதை வேறு வழியில்தான் கையாளவேண்டும். நாம் நமது உடலை சரியாக வைத்துக் கொண்டால்தான் அது முறையாகச் செயல்படும். சரியான நேரத்தில், சரியான அளவு உணவைச் சாப்பிட வேண்டும். உடற்பயிற்சி உடல் வடிவமைப்பை சீராக்குவதற்கே தவிர தண்டனை அல்ல. இது தவிர தூக்கம், மன அழுத்தம், உறவுமுறைகளை போன்ற அம்சங்களை நாம்தான் நிர்வகிக்க வேண்டும்.

“எங்கள் தயாரிப்புகளை வாங்கிப் பயன்படுத்தினால், நீங்கள் சீக்கிரத்தில் உடல் எடையை குறைத்து அழகாகவும் இளமையாகவும் தோன்ற முடியும்” என்று விளம்பரப்படுத்துவார்கள். உடற்பயிற்சி நிலையங்கள், “எங்களிடம் புதிய நவீன இயந்திரங்கள் உள்ளன. அவற்றை பயன்படுத்தி உடற்பயிற்சி செய்தால், உடலில் தொப்பை குறைந்து இளமையாக இருக்கலாம்” என்று கூறுவார்கள். இன்னும் சிலர், “நாங்கள் தரும் ஒரு புதிய பானத்தை குடி த்தால் நீங்கள் தூங்கும்போதுகூட கொழுப்பை கரைத்துவிடும்” என்று விளம்பரப்படுத்துவார்கள்.


© Freepik.com

ஆனால், இதையெல்லாம் நீங்கள் நம்புகிறீர்களா? பலரும் இதைச்செய்கிறார்கள் என்ற காரணத் துக்காகவே நீங்களும் செய்வீர்கள்.

ஆனால், நீங்கள் உண்மையில் அதை நம்புகிறீர்களா? பலர் இதைச் செய்வதால் மட்டுமே நீங்கள் இதைச் செய்கிறீர்கள் என்று நினைக்கிறேன். நீங்கள் விரும்பும் எடையை நீங்கள் இழக்க நேரிடும். மேலும் அந்த வெறுமையை உள்ளுக்குள் பூர்த்தி செய்து திருப்திபடுத்த சிறந்தது என்று வேறு ஏதாவது ஒன்றைச் சுற்றிக் கொண்டிருக்கலாம். அந்த 26 அங்குல இடுப்பளவை நீங்கள் அடைந்த பிறகும் நீங்கள் அங்கீகாரம் அல்லது மகிழ்ச்சியைத் தேடலாம்.

நாம் ஏன் பங்கு பெறுகிறோம். ஏன் நம்மைநாமே துரத்துகிறோம். நம்மை நாமே ஏன் தண்டித்துக் கொள்கிறோம். நம்மை நாமே ஏன் குறைத்து மதிப்பிடுகிறோம். நம்மீதே நாம் அதிருப்தி கொள்கிறோம். ஒரு அடி பின்வாங்கி, நாம் உண்மையில் என்ன விரும்புகிறோம் என்று நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது. நமது உடலமைப்பு குறித்து மற்றவர்களிடமிருந்து ஒப்புதல் பெறவேண்டுமா அல்லது பாராட்டு பெற வேண்டுமா அல்லது சிறந்த வாழ்க்கை வாழ முடிந்ததற்கான மன திருப்தி வேண்டுமா? உங்களுக்கு சொந்தமான உடலை மதிக்கத் தொடங்குங்கள். கடந்த காலத்தில் நீங்கள் தவறு செய்துள்ளீர்கள் என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். ஆனால், அவை உங்களை வரையறுக்கத் தேவையில்லை.

முன்னோக்கிச் செல்ல சிறந்ததைத் தேர்வு செய்யுங்கள். மெதுவாகத் தொடங்கி சீராக இருங்கள். நிலைத்தன்மைதான் வெற்றிக்கு முக்கியம். ஒரு எளிய பழக்கத்தை உருவாக்கிக்கொள்ளுங்கள். ( ஒரு நாளைக்கு குறைந்தது 30 நிமிடங்களாக நடப்பது போன்றவை). முடிந்தவரை அதைத் தொடருங்கள். பின்னர் தேவைக்கு ஏற்ப நடைப்பயிற்சியின் காலத்தையும் வேகத்தையும் அதிகரிக்கவும்.

முழுமையாகச் சாப்பிடுங்கள். உணவை ஏதோ ஒரு குறிப்பிட்ட நேரத்தில்தான் சாப்பிட வேண்டும் என நினைக்காதீர்கள். உங்கள் உணவை வாழ்க்கை முறையாக கருதுங்கள்.

உங்களுக்குப் பிடித்தமான உடற்பயிற்சியை அடையாளம் காணுங்கள். அதைத் தொடர்ந்து நீங்கள் செய்தாலே போதுமானது. சரியான பயிற்சியாளர்- வழிகாட்டி- ஆலோச கரைத் தேர்ந்தெடுங்கள். உடற்பயிற்சி மற்றும் உணவு முறைகள் மட்டுமல்ல, உளவியல் ரீதியாக உங்களைப் புரிந்துகொள்பவராகவும் அவர் இருக்கவேண்டும்.

எல்லாவற்றையும்விட முக்கியமானது, உங்களை நீங்கள் நம்புங்கள். உங்களால் நல்ல ஆரோக்கியமான, வாளிப்பான உடலைப் பெறமுடியும். இது சாத்தியமானதே.



இதன் ஆசிரியரை sheelanambiar@gmail.com என்ற இணையதளத்தில் தொடர்பு கொள்ளலாம்.
Website:www.drsheelanambiar.com

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

## RC முத்துப்பேட்டை — RID 2981



தம்பிக்கோட்டை கிராமத்தில் ஒரு கண் சிகிச்சை முகாமில், 325 பேருக்குப் பரிசோதனை செய்யப்பட்டது. இவர்களில் 115 பேர் அறுவைச் சிகிச்சைக்குத் தேர்ந் தெடுக்கப்பட்டார்கள்.

## RC சோனேபட் எஜுகேஷன் சிட்டி — RID 3012



NGOக்களுடன் இணைந்து, ஒரு குருத்வாராவில் ஒரு ரத்த தான மற்றும் நல முகாம் நடத்தப் பட்டது. சுமார் 225 யூனிட் ரத்தம் திரட்டப்பட்டது; 200 நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டார்கள்.

## RC திருச்சிராப்பள்ளி — RID 3000



இச்சங்கம் தன்னுடைய 72வது பட்டய நாளைக் குறிக்கும் வகையில் “சக்கரத்தில் உணவுகள்” என்ற திட்டத்தைத் தொடங்கியது, முதியோர் இல்லங்கள் மற்றும் ஆதரவற்றோருக்கான இல்லத்தில் உள்ள 300க்கும் மேற்பட்டோருக்கு உணவு வழங்கியது.

## RC சந்திராபூர் — RID 3030



ஒரு தொழில் சார்ந்த பயிற்சி திட்டத்தின்கீழ் அழகுக் கலை வகுப்புகளில் பயிற்சி பெற்ற முப்பது பெண்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப் பட்டன. இவர்களில் சிலர் சொந்தமாக அழகு நிலையங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளார்கள்.

## RC தில்லி கூப்சூரத் — RID 3011



RK புரத்தில் உள்ள தொழுநோய் மையமான ஜீவன் தீப் குஷ்ட் ஆசிரமத்தில் 60 குடும்பங் களுக்கு நோய்ப் பரவலின் போது உதவுவதற்காகப் பங்கீட்டுப் பொருள் பொதிகள் வழங்கப்பட்டன.

## RC பிக்கனெர் ஆத்யா — RID 3053



விருந்தாவன் என்க்ளேவில் உள்ள முதியோர் இல்லத்துக்கு வெந்நீர் இயந்திரம், மற்றும் 100 குடும்பங்களுக்கு போர்வைகள் அளிக்கப்பட்டன.

# செய்திகள்

## RC பாவ்நகர் ராயல் — RID 3060



சர்தார்நகரில் உள்ள இரவுப் பாதுகாப்பு நிலையத்தில் ஓர் எழுத்தறிவு மையம் அமைக்கப் பட்டது, இதில் புலம் பெயர்ந்த 75 பேருக்கும் அவர்களுடைய குழந்தைகளுக்கும் படித்தல் மற்றும் எழுதுதல் போன்ற அடிப்படைத் திறன்கள் கற்றுத்தரப்படும்.

## RC சந்தௌசி லக்ஷ்யா — RID 3100

இந்தச் சங்கத்தின் RILM முன்னெடுப்பின் கீழ் 250 பள்ளி ஆசிரியர் களுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டது. 100 ஆசிரியர்களைக் கொண்ட முதல் பிரிவுக்கான இணைய வகுப்புகளை RIPE சேகர் மேத்தா தொடங்கிவைத்தார்.




## RC குமர்வின் — RID 3070



மகர சங்கராந்தி மற்றும் லோஹ்ரியைக் கொண்டாடும் வகையில், சங்கத் தலைவர் அனில் சர்மா குழந்தைகளுக்கு இனிப்புகளை வழங்கினார்.

## RC ஆக்ரா தாஜ் சிட்டி — RID 3110

TB சிகிச்சை பெற்றுவரும் பதினொரு குழந்தைகளை இந்தச் சங்கம் தத்தெடுத்தது. சங்கத் தலைவர் டாக்டர் நரேந்திர மல்ஹோத்ரா 18 குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து மிக்க உணவுப் பொட்டலங்களை வழங்கினார்.



## RC அம்பாலா இன்டஸ்ட்ரியல் ஏரியா — RID 3080



Dr ஜோகீந்தர் சிங் குடிமையியல் மருத்துவ மனையில் 15 ஆஷா ஊழியர்களைப் பெருமைப் படுத்தியது. இந்தச் சங்கம், தையல் மையத்தில் 12 பெண்களை 6 மாதப் பயிற்சியில் சேர்த்துள்ளது.

## RC புணே ஸ்போர்ட்ஸ் சிட்டி — RID 3131

10 பள்ளி மாணவர்களுக்கு இணைய வகுப்புகளை அணுகுவதற்கு உதவுவதற்காக, சிம் அட்டைகள் மற்றும் டேப்ளெட் தொடு திரைக் கணினிகள் (ரூ 8.8 லட்சம்) வழங்கப்பட்டன.



### RC ஷிர்டி சாய்பாபா — RID 3132



இந்தச் சங்கம், கொபர்காவ்னில் உள்ள ஸ்ரீ ஜனார்தன் சுவாமி மருத்துவ மனைக்கு ஆக்ஸிஜன் செறிவாக்கி இயந்திரத்தை அளித்தது.

### RC மங்களூர் சென்ட்ரல் — RID 3181



இந்தச் சங்கம் சங்கங்களுக்கு இடையிலான ரோட்டரி விநாடி வினாவை நடத்தியது. வெற்றி பெற்ற வர்களுக்கு PDG Dr பாஸ்கர் ரோட்டரி கோப்பை, சான்றிதழ்கள் மற்றும் ரூ.3,000 ரொக்கப் பரிசுகளை வழங்கினார்.

### RC சூலூர்பெட் — RID 3160



நகராட்சியின் 140 பாதுகாப்பு ஊழியர்களுக்குப் புடைவைகள், லுங்கிகள் மற்றும் சட்டைகள் பரிசளிக்கப் பட்டன. Rtn பாலு லோகநாதம் நன்கொடையாக அளித்த ரூ.68,000 செலவில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

### RC கோட்டா சிட்டி — RID 3182



கோட்டா உயர்நிலைப் பள்ளிக்கு அருகில் ஒரு பேருந்து நிறுத்தத்தை DG ராஜாராம பட் தொடங்கி வைத்தார், இந்தத் திட்டத்துக்கான செலவு, ரூ.2.5 லட்சம்.

### RC தார்வாட் சென்ட்ரல் — RID 3170



$42,500 மதிப்புள்ள ஒரு பன்னாட்டு நல்கையின்கீழ் மாவட்ட மருத்துவ மனைக்கு ஓர் ICU பிரிவு நன்கொடையாக அளிக்கப்பட்டது.

### RC கொச்சின் பீச்-சைட் — RID 3201



ஃபோர்ட் கொச்சியில் உள்ள தாகூர் நூலகத்துக்கு ரூ.50,000 மதிப்புள்ள அமர் பொருட்கள் நன்கொடையாக அளிக்கப் பட்டன. அஸ்பின்வால் தனது CSR நிதியைப் பயன்படுத்தி இதை நிறைவேற்றியது.

# செய்திகள்

## RC தலிச்சேர்ரி — RID 3202



இந்தச் சங்கம், துணை சிறைச் சாலையில் உள்ள நூலகத்துக்கு ஒரு நீர் தூய்மைப் படுத்தி மற்றும் நூல்களை நன்கொடையாக வழங்கியது.

## RC ஜபல்பூர் சவுத் — RID 3261



மக்களுக்கு நெருக்கடி நேர உதவியை வழங்குவதற்காக, ஜபல்பூர் காவல் துறைக்குச் சட்டைப் பை உயிர் காக்கும் பொதிகள் வழங்கப் பட்டன.

## RC சிவகாசி டைமண்ட்ஸ் — RID 3212



12ம் வகுப்பு வாரியத் தேர்வுகளில் மிகச் சிறந்த தர நிலைகளைப் பெற்ற மாணவர்களை இந்தச் சங்கம் பெருமைப் படுத்தி, சான்றிதழ், கேடயம் மற்றும் பரிசை வழங்கியது.

## RC கியோன்ஜர் — RID 3262



பழங்குடியினக் கிராமங்களில் உள்ள பள்ளிக் குழந்தைகள் மற்றும் பெண் களைக் கடுமை யான குளிர் காலத்திலிருந்து காப்பதற்காக, அவர்களுக்குக் குளிர்கால மேலாடைகளும் போர்வைகளும் வழங்கப்பட்டன.

## RC திருவள்ளூர் ராயல்ஸ் — RID 3231



10 ஆண்டுகளாக இந்தச் சங்கம் திருவள்ளூர் அரசு மருத்துவ மனையில் உள்ள ரத்தம் திரட்டும் மையத்தின் ஆண்டுப் பராமரிப்பை மேற் கொண்டுள்ளது, இதற்கான திட்ட மதிப்பீடு ரூ.73 லட்சமாகும்.

## RC பேளூர் — RID 3291



ரூ.35.83 லட்சம் மதிப்புள்ள GG திட்டத்தின் வழியாக, ஹௌரா ILS மருத்துவ மனைக்கும் சுமார் 3,500 PPE பொதிகள், முகக்கவசங்கள் அளிக்கப்பட்டன.

ஒருங்கிணைப்பு: V முத்துக்குமரன்

# எடிட்டர்களும் அவர்களின் விருப்பங்களும்

LBW

T C A ஸ்ரீனிவாசராகவன்

70 வயது நெருங்கிவருவதால், நான் பல முடிவுகளை எடுக்க வேண்டி யுள்ளது. அவற்றில் முக்கியமான ஒன்று என்னவென்றால் 40 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த மாத இதழுக்கு எழுதுவதைத் தவிர வேறு பத்திரிகை களுக்கு எழுதுவதை நிறுத்திக்கொள்ள முடிவு செய்துள்ளேன். கடந்த நாற்பது ஆண்டுகளில் என்னால் ஏதாவது ஒரு தலைப்பை கையிலெடுத்துக் கொண்டு, அதுபற்றி எனக்கு அதிகம் தெரியாவிட்டாலும், புரிந்துகொண்டு எழுதுவது அற்புதமாக இருந்தது. பேச்சு சுதந்திரம் என்பது அதன் பயன்களைத் தெளிவாகக் கொண்டுள்ளது. அதனால்தான் என்னைப் போன்றவர்கள் கணிசமாக சம்பாதிக்க முடிந்தது.

நான் பதின்ம வயதில் இருந்த போதே எழுதுவதில் எனக்கு ஆர்வம் இருந்தது. பள்ளிப்படிப்பை பெரும்பாலும் ஹிந்தி மொழியில் கற்றதால், 'நீ உன்னுடைய ஆங்கில மொழித்திறனை வளர்த்துக் கொள்' என்று என்னுடைய அப்பா அடிக்கடி கூறுவார். ஆங்கில மொழி பத்திரிகை களில் தலையங்க பக்கத்தை படிக்கும்போதெல்லாம் நானும் ஒரு தலையங்க எழுத்தாளராக வேண்டும் என்று எண்ணியதுண்டு. எனது விருப்பம் 1980 இல் நிறைவேறியது. துல்லியமாகச் சொல்லவேண்டுமானால், பதிப்புத்துறையில் 5 ஆண்டுகள் இருந்த நான், அதற்கு ஆறு மாதங் களுக்குப் பிறகு பத்திரிகைத்துறைக்கு மாறினேன். ஒரு பொருளாதார வார இதழில் சேர்ந்தேன். இப்போது 38 ஆண்டுகள் கழிந்துவிட்டன.

அவ்வப்போது சுமார் 800 சொற் களில் ஒரு தலையங்கத்தை எழுதுமாறு ஆசிரியர் (எடிட்டர்) என்னை கேட்டுக்கொள்வார். ஒன்றிரண்டு சமயங்களில் நான் எழுதியது எந்தவித மாற்றமும் இல்லாமல் வெளியாகும். பெரும்பாலான சமயங்களில் அவர் அதை மாற்றி எழுதுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இது நான் கற்றுக்கொண்ட முதல் பாடம். தலையங்கம் என்பது பத்திரிகை அல்லது சஞ்சிகையின் பார்வையாகவே கருதப்பட்டு வந்தாலும், பெரும்பாலும் அவை பத்திரிகை ஆசிரியர்களின் தனிப்பட்ட பார்வையாகவே இருந்தது. எனவே தலையங்க பக்க எழுத்தாளர்கள், அவர்களின் எழுத்துகள் அடிக்கடி திருத்தி எழுதப்படுவதை வைத்தே மதிப்பிடப்படுகிறார்கள்.

காலையில் நடைபெறும் ஆசிரியர் குழு கூட்டங்கள் ஒரு சடங்காகவே நடைபெறும். இதைப் பற்றி நாம் என்ன சொல்லப் போகிறோம்? என்று ஆசிரியர் கேட்பார். அவர் உண்மையில் கேட்பது என்னவென்றால், எனக்கு உடன்பாடான எதையாவது சொல்லப் போகிறீர்களா? என்பதுதான்.

நீங்கள் கொடுக்கும் உண்மையான தகவல்களை ஆசிரியர்கள் மதிக்கக் கூடும். ஆனால், சில சமயங்களில் அவை எடுத்துக்கொள்ளப்படாது. அதை அவர் வேறுவகையில் சொல்வார். அது தவறாக இருந்தாலும், அல்லது ஒரு சார்பாக இருந்தாலும் சாதாரணமாக இருந்தாலும் அது அவருடையதாக இருக்க வேண்டும். நீங்கள் உங்களுக்குள் சொல்லிக்கொள்வீர்கள் இது அவரது இறுதி முடிவு என்று. சில நேரங்களில் ஒரு மோசமான உரைநடை வெளியிடப்படலாம். வேறு சில சமயங்களில் ஒரு நல்ல, பொருள் பொதிந்த உரைநடை, இரண்டாம் தரமாக குறைக்கப்பட்டு வெளியிடப்படலாம். நீங்கள் என்ன எழுதியுள்ளீர்கள் என்று அவர் அக்கறையுடன் கவனிக்காத நிலையைவிட இதை பொறுத்துக் கொள்ளலாம். எங்களிடம் ஒரு ஆசிரியர் இருந்தார். அவர் தலையங்கத்தை மேம்போக்காக படித்துவிட்டு ஒப்புதல் அளித்து விடுவார். அது மிகுந்த வலியை ஏற்படுத்துகிறது.

சிக்கல் இதுதான். பத்திரிகை யாளர்கள் அல்லாதவர்களுக்கு தெரியாது ஆசிரியருக்குத்தான் முழு அதிகாரம் இருக்கிறது என்று. தங்கள் விருப்பப்படி செயல்படுவதற்கும், தாங்கள் விரும்பியதை திணிப்பதற்கும் அவர்களுக்கு எந்த இடையூறும் இல்லை. பலரும் இதைத்தான் செய்கிறார்கள். இவையெல்லாம் ஒரு சார்பான, முன்கூட்டியே முடிவு செய்யப்பட்ட கருத்துகள் பற்றியது. அதிர்ஷ்டவசமாக நான், ஒன்பது ஆசிரியர்களின் கீழ் பணியாற்றிய போதிலும் அதில் இருவர் மட்டுமே இதுபோன்ற குணத்துடன் இருந்தார்கள். ஒருவரை குறைவாக மதிப்பிட முடியாது. மற்றொருவர் ஒருபக்க சார்பாக இருந்ததால் நான் ராஜினாமா செய்ய வேண்டியிருந்தது.

நான் தலையங்கம் எழுதுவதை 2002ல் நிறுத்திவிட்டேன். அதன் பிறகு நான் பலவற்றை எழுதினேன். சில சமயங்களில் நான் மூன்று அல்லது இரண்டு தலை யங்கங்களையும் எழுதி அவை அடுத்த நாளே வெளியிடப்பட்டது. என்னால் ஒரு தலையங்கத்தை 20 நிமிடங்களில் எழுத முடியும். ஆனால், அது தவறான எண்ணத்தை ஏற்படுத்திவிடும். ஒரு முக்கியமான விஷயத்தை தலையங்கமாக எழுதவேண்டுமானால், ஆசிரியர் என்னைத்தான் கூப்பிடுவார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆசிரியர் ஒருவர் என்னிடம் ஒரு முறை இப்படிச் சொன்னார்: ஆழமற்ற தன்மையை மறைப்பதில் நீங்கள் என்னைவிடச் சிறந்தவர் என்று.■

# டெல்லி சர்வதேச மாநாட்டில்




RIPE சேகர் மேத்தா, ராஷி, RID கமல் சங்வி, RIDEs மகேஷ் கோட்பாகி மற்றும் A S வெங்கடேஷ் சர்வதேச மாநாட்டின் செயற்குழுவினருடன்.




DGEகள் மற்றும் துணைவியருடன்...

Regn. No. TN/CCN/677/2019-2021
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2019-2021
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹35
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on the first week of every month

ADVT.

